


"உயர்கருணை புரியும் இன்பக் கடல்மூழ்கி
உனையெனதுள் அறியும் அன்பைத் தருவாயே."

குற்றம் புரிதல் எனக் கியல்பே
குணமாகக் கொள்ளல் உனக் கியல்பே
சிற்றம் பலவா இனிச் சிறியோன்
செப்பும் முகமன் யாதுளது.

41×20 அளவுள்ள படம் ரூ. 1-4-0.

உ

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளலார் என்னும்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருவருட்பா

## ஐந்தாவது திருமுறை

### திருத்தணிகைப் பதிகம்



MADRAS-1

கா. ஆ. சண்முகம் வெளியிட்டது

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் மடாலயம்,

திருவொற்றியூர், சென்னை.

பதிவு செய்தது.] 29-7-48 [விலை ரூ. 1-4-0

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவ கணபதி துணை.

# அருட்பெருஞ்ஜோதி

# திருவருட்பா

## ஐந்தாவது திருமுறை

### 1. சித்திவிநாயகர் பதிகம்

திருச்சிற்றம்பலம்

கலிவிருத்தம்

திருமா லறியாச சேவடி யாலென்
கருமா லறுக்குங் கணபதி சரணம். 1

ஐங்கர னடிமல ரிங்குற நினைதிநின்
பொங்குறு துயரறும் மங்கலின் மனனே. 2

## வெண்பா.

அஞ்சுமுகத் தான்மகன்மா லஞ்சுமுகத் தானருள்வான்
அஞ்சுமுகத் தானஞ் சணிகரத்தான்—அஞ்சுமுக
வஞ்சரையான் காணு வகைவதைத்தா னோரரையோ
டஞ்சரையான் கண்க ளவை. 1

வாதாகா வண்ண மணியேயெம் வல்லபைதன்
நாதாகா வண்ண நலங்கொள்வான்—போதார்
வனங்காத்து நீரளித்த வள்ளலே யன்பால்
இனங்காத் தருளா யெனை. 2

## எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

### திருச்சிற்றம்பலம்

உலகெலாந் தழைப்ப வருண்மத வருவி
ஒழுகுமா முகமுமைங் கரமும்
இலகுசெம் மேனிக் காட்சியு மிரண்டோ
டிரண்டென வோங்குதிண் டோளுந்
திலகவா ணுதலார் சித்திபுத் திகளைச்
சேர்த்தணைத் திடுமிரு மருங்கும்
விலகுறு தெளியேன் விழைந்தனன் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 3

உள்ளமு முயிரு முணர்சியு முடம்பும்
உறுபொருள் யாவுநின் றனக்கே
கள்ளமுங் கரிசு நினைந்திடா துதவிக்
கழலினை நினைத்துநின் கருணை
வெள்ளமுண் டிரவு பகலறி யாத
வீட்டினி லிருந்துநின் றேடும்
பிள்ளையில் லாமற் கலப்பனோ சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 4

நாதமுங் கடந்து நிறைந்துநின் மயமே
நானென வறிந்துநான் றுனும்
பேதமுங் கடந்த மௌனராச் சியத்தைப்
பேதையேன் பிடிப்பதெந் நாளோ!
ஏதமுஞ் சமய வாதமும் விடுத்தோர்
இதயமும ஏழையேன் சிரமும்
வேதமுந் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

சச்சிதா னந்த வடிவநம் வடிவந்
தருமதிட் டானமற் றிரண்டும்
பொய்ச்சிதா பாசக் கற்பனை யிவற்றைப்
போக்கியாங் கவ்வடி வாகி
அச்சிதா கார போதமும் அதன்மேல்
ஆனந்த போதமும் விடுத்தல்
மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

ஒன்றல இரண்டும் அலவிரண் டொன்றே
டுருவல அருவல உவட்ட
நன்றல நன்றல் லாதல விந்து
நாதமும் அலவிவை அனைத்தும்
பொன்றலென் றறிந்துட் புறத்தினு மகண்ட
பூரண மாஞ்சிவ மொன்றே
வென்றலென் றறிநீ என்றனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 7

சத்தசத் தியன்மற் றறிந்து மெய்ப் போதத்
தத்துவ நிலைபெற விழைவோர்
சித்தமுற் றகலா தொளித்தநின் கமலச்
சேவடி தொழவெனக் கருள்வாய்
சுத்தசற் குணத்தெள் ளமுதெழு கடலே
சுகபரி பூரணப் பொருளே
வித்தக முக்கண் அத்தனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 8

மருளுறு மனமுங் கொடியவெங் குணமும்
மதித்தறி யாததுன் மதியும்
இருளுறு நிலையு நீங்கிநின் னடியை
எந்தநா ளடைகுவன் எளியேன்
அருளுறு மொளியா யவ்வெளிக் குள்ளே
அமர்ந்தசிற் பரவொளிநிறைவே
வெருளுறு சமயத் தறியொணுச் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 9

கேவல சகல வாதனை யதனுற்
கீழ்ப்படும் அவக்கடன் மூழ்கி
ஓவற மயங்கி யுழலுமிச சிறியேன்
உன்னரு ளடையுநா ளுளதோ!
பாவல ருளத்திற் பரவிய நிறைவே
பரமசிற் சுகபரம் பரனே
மேவுறும் அடியார்க் கருளிய சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 10

கானல்நீர் விழைந்த மானென வுலகக்
கட்டினை நட்டுழன் றலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை
என்றுகொண் டருளுநா ளுளதோ!
ஊனமொன் றில்லா வுத்தம ருளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ வொளியே
வேனவில் கரத்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 11

பெரும்பொருட் கிடனும் பிரணவ வடிவிற்
பிறங்கிய வொருதனிப் பேறே
அரும்பொரு ளாகி மறைமுடிக் கண்ணே
அமர்ந்தபே ரானந்த நிறைவே
தரும்பர போக சித்தியுஞ் சுத்த
தருமமு முத்தியுஞ் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 12

திருச்சிற்றம்பலம்.

---

## 2. வல்லபை கணேசர் பிரசாத மாலை

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருநெடு மாலன் றுலிடை நினது
சேவடித் துணைமலர்த் துகளான்
பெருநெடு மேனி தளிர்படப் பாம்பின்
பேருரு வகன்றமை மறவேன்
கருநெடுங் கடலைக் கடற்றுநற் றுணையே
கண்கள்மூன் றுடையசெங் கரும்பே
வருநெடு மருப்பொன் றிலகுவா ரணமே
வல்லபைக் கணேசமா மணியே. 1

நளினமா மலர்வாழ் நான்முகத் தொருவன்
நண்ணிநின் றிணையடி வழுத்திக்
களிநல னுடனிவ் வுலகெலாம் படைக்கக்
கடைக்கணித் ததையுள மறவேன்
அளிநல னுறுபே ரானந்தக் கடலே
அருமருந் தேயரு ளமுதே
வளிநிறை யுலகுக் கொருபெருந் துணையே
வல்லைபக் கணேசமா மணியே. 2

சீருருத் திரமூர்த் திகட்குமுத் தொழிலுஞ்
செய்தரு ளிறைமைதந் தருளிற
பேருருத திரங்கொண் டிடச்செயு நினது
பெருமையை நாடொறு மறவேன்
ஆருருத் திடினு மஞ்சுதல் செய்யா
ஆண்மையெற் கருளிய அரசே
வாருருத் திடுபூண் மணிமுகக் கொங்கை
வல்லைபக் கணேசமா மணியே. 3

விண்ணவர் புகழு மெய்கண்ட நாதன்
வித்தகக் கபிலனு தியர்க்கே
கண்ணருள் செயுநின் பெருமையை யடியேன்
கனவிலு நனவிலு மறவேன்
தண்ணருட் கடலே அருட்சிவ போக
சாரமே சராசர நிறைவே
வண்ணமா மேனிப் பரசிவ களிறே
வல்லைபக் கணேசமா மணியே. 4

நாரையூர் நம்பி யமுதுகொண் டூட்ட
நற்றிரு வாய்மலர்ந் தருளிச்
சீரைமே வுறச்செய் தளித்திடு நினது
திருவரு ளுடொறு மறவேன்
தேரையூர் வாழ்வுந திரமல வெனுநற்
றிடமெனக் கருளிய வாழ்வே
வாரையூர் புலையாண் மங்கைநா யகியெம்
வல்லபைக் கணேசமா மணியே. 5

கும்பமா முனியின் கரகநீர்க் கவிழ்த்துக்
குளிர்மலர் நந்தனங் காத்துர
செம்பொனுட் டிறைவற் கருளிய நினது
திருவருட் பெருமையை மறவேன்
நம்பனுர்க் கினிய வருண்மகப் பேறே
நற்குணத் தோர்பெரு வாழ்வே
வம்பறு மலர்த்தார் மழைமுகிற் கூந்தல்
வல்லபைக் கணேசமா மணியே. 6

அயன்றவத் தீன்ற சித்திபுத் திகளாம்
அம்மையர் இருவரை மணந்தே
இயன்றவண் டங்கள் வாழ்வுறச் செயுநின்
எழின்மணக் கோலத்தை மறவேன்
பயன்றருங் கருணைக் கற்பகத் தருவே
பரசிவத் தெழுபரம பரமே
வயன்றரு நிமல நித்தியப் பொருளே
வல்லபைக் கணேசமா மணியே. 7

முன்னருந் தவத்தோன் முற்கலன் முதலா
முனிவர்க ளினிதுவீ டடைய
இன்னருள் புரிய நின்னருட் பெருமை
இரவினும் பகலினு மறவேன்
என்னரும் பொருளே யென்னுயிர்க் குயிரே
என்னர சேயென அறவே
மன்னரு நெறியின் மன்னிய வறிவே
வல்லபைக் கணேசமா மணியே. 8

துதிபெறுங் காசி நகரிடத் தனந்தந்
தூயநல் லுருவுகொண் டாங்கண்
விதிபெறு மனைகள் தொறும்விருந் தினனாய்
மேவிய கருணையை மறவேன்
நதிபெறுஞ் சடிலப் பவளநற் குன்றே
நான்மறை நாடரு நலமே
மதிபெறு முளத்திற் பதிபெறுஞ் சிவமே
வல்லபைக் கணேசமா மணியே. 9

நடக்கைமா முகமு முக்கணும் பவளச்
சடிலமுஞ் சதுர்ப்புயங் களுங்கை
இடக்கையங் குசமும் பாசமும் பதமு
மிறைப்பொழு தேனும்யான் மறவேன்
விடக்கள முடைய வித்தகப் பெருமான்
மிகமகிழ்ந் திடவருட் பேறே
மடக்கொடி நங்கை மங்கைநா யகியெம்
வல்லபைக் கணேசமா மாமணியே. 10

பெருவய லாறு முகனக லமர்ந்துன்
பெருமைகள் பேசிடத் தினமுந்
திருவளர் மேன்மைத் திறமுறச் சூழுந்
திருவருட் பெருமையை மறவேன்
மருவளர் தெய்வக் கற்பக மலரே
மனமொழி கடந்தவான் பொருளே
வருமலை வல்லிக் கொருமுதற் பேறே
வல்லபைக் கணேசமா மணியே. 11

திருச்சிற்றம்பலம்

---

## 3. கணேசத் திருவருள் மாலை

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியுஞ் சீருஞ் சிறப்புமுன்
திருவ டிப்புகழ் பாடுந் திறமுநல்
உருவுஞ் சீலமு மூக்கமுந் தாழ்வுறு
உணர்வுந் தந்தெனை யுள்ளத் தமர்ந்தவா
குருவுந் தெய்வமு மாகியன் பாளர்தங்
குறைத விர்க்குங் குணப்பெருங் குன்றமே
வெருவுஞ் சிந்தை விலகக் கஜானனம்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 1

சீத நாண்மலர்ச் செல்வனு மாமலர்ச்
செல்வி மார்பகச் செல்வனுங் காண்கிலாப்
பாத நாடொறும் பற்றறப் பற்றுவோர்
பாத நாடப் பரிந்தருள் பாலிப்பாய்
நாத நாடிய வந்தத்தி லோங்குமெய்ஞ்
ஞான நாடக நாயக நான்கெனும்
வேத நாடிய மெய்ப்பொரு ளேயருள்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 2

என்னை வேண்டி யெனக்கருள் செய்தியேல்
இன்னல் நீங்குநல் லின்பமு மோங்குநின்
தன்னை வேண்டிச் சரண்புகுந் தேனென்னைத்
தாங்கிக் கொள்ளுஞ் சரண்பிறி தில்லைகாண்
அன்னை வேண்டி யழுமகப் போல்கின்றேன்
அறிகி லேனின் றிருவுள மையனே
பின்னை வேண்டிய செஞ்சடை யாளனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 3

நீண்ட மாலர வாகிக் கிடந்துநின்
நேயத் தால்கலி நீங்கிய வாறுகேட்
டாண்ட வாநின் னடைக்கல மாயினேன்
அடிய னேன்பிழை யாயிர மும்பொறுத்
தீண்ட வாவின் படிகொடுத் தென்னைநீ
ஏன்று கொள்வதற் கெண்ணுதி யாவரும்
வேண்டு வாழ்வு தரும்பெருந் தெய்வமே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 4

தஞ்ச மென்றுனைச் சார்ந்தனன் எந்தைநீ
தானு மிந்தச சகத்தவர் போலவே
வஞ்ச மெண்ணி யிருந்திடில் என்செய்வேன்
வஞ்ச மற்ற மனத்துறை யண்ணலே
பஞ்ச பாதக தீர்த்தனே யென்றுநின்
பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 5

கள்ள நெஞ்சக னாயினு மையநான்
கள்ள மின்றிக் கழறுகின் றேனென
துள்ள நின்றிரு வுள்ள மறியுமே
ஓது கின்றதென் போது கழித்திடேல்
வள்ள மாமலர்ப் பாதப் பெரும்புகழ்
வாழ்த்தி நாத்தழும பேற வழங்குவாய்
வெள்ள வேணிப் பெருந்தகை யேயருள்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 6

மண்ணி லாசை மயக்கற வேண்டிய
மாத வர்க்கு மதிப்பரி யாயுனை
எண்ணி லாச்சிறி யேனையு முன்னின்றே
ஏன்று கொண்டனை யின்று விடுத்தியோ
உண்ணி லாவிய நின்றிரு வுள்ளமும்
ஆசை யோடுவர்ப் புங்கொள வொண்ணுமோ
வெண்ணி லாமுடிப் புண்ணிய மூர்த்தியே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 7

ஆணி லேயன்றி யாருயிர்ப் பெண்ணிலே
அலியி லேயிவ் வடியனைப் போலவே
காணி லேனொரு பாவியை யிப்பெருங்
கள்ள நெஞ்சக் கடையனை யாளையா
ஏணி லேயிட ரெய்த விடுத்தியேல்
என்செய் கேனினி யிவ்வுல கத்திலே
வீணி லேயுழைப் பேனரு ளையனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 8

வாளி லேவிழி மங்கையர் கொங்கையாம்
மலையி லேபுக மாயத்தி லேயவர்
தோளி லேயிடைச் சூழலி லேயுந்திச்
சுழியி லேநிதஞ் சுற்றுமென் னெஞ்சநின்
தாளி லேநின்ற னித்த புகழிலே
தங்கும் வண்ணந் தரவுளஞ் செய்தியோ
வேளி லேயழ கானசெவ் வேளின்முன்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 9

நாவி னுனை நாடொறும் பாடுவார்
நாடு வார்தமை நண்ணிப் புகழவும்
ஓவி லாதுனைப் பாடவுந் துன்பெலாம்
ஓட வும்மகி ழோங்கவுஞ் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகி ழைங்கரக்
கடவு ளேநற் கருங்குழி யென்னுமூர்
மேவி யன்பர்க் கருள்கண நாதனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## 4. தனித்திருமாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கை வல்லபைக்கு வாய்த்த மணிநின் மலர்த்தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண் ணருட்சிவ களிறே போற்றி
கங்கையாய் மகிழுஞ் செல்வக் கணேசநின் கழல்கள் போற்றி.

## கலிவண்ணத் துறை

உலகம் பரவும் பொருளென் கோவென் னுறவென்கோ
கலகம் பெறுமைம் புலன்வென் றுயருங் கதியென்கோ
திலகம் பெறுநெய் யெனநின் றிலகுஞ் சிவமென்கோ
இலகைங் கரவம் பரநின் றனையென் னென்கேனே. 2

அடியா ருள்ளந் தித்தித் தூறு மமுதென்கோ
கடியார் கொன்றைச் செஞ்சடை யானைக் கன்றென்கோ
பொடியார் மேனிப் புண்ணியர் புகழும் பொருளென்கோ
அடிகேள் சித்தி விநாயக வென்னென் றறைகேனே. 3

கமலமல ரயனயநன் முதலமர ரிதயமுறு
கரிசகல வருள்செய்பசு பதியாம்
நிமலநிறை மதியினொளிா நிரதிசய பரமசுக
நிலையையருள் புரியுமதி பதியாம்
விமலபிர ணவ்வடிவ விகடதட கடகரட
விபுலகய முகசுகுண பதியாம்
அமலபர சிவவொளியி னுதயசய விசயசய
வபயவெனு மெமதுகண பதியே. 4

## கட்டளைக் கலித்துறை

அம்பொன்று செஞ்சடை யப்பரைப் போற்றன் னடியர்தந் துக்
கம்பொன்றும் வண்ணங் கருணைசெய் தாளுங் கருதுமினே
வம்பொன்று பூங்குழல் வல்லபை யோடு வயங்கியவெண்
கொம்பொன்று கொண்டெமை யாட்கொண் டருளிய குஞ்சரமே.

## கலி விருத்தம்

அற்புதக் கணபதி யமல போற்றியே
தற்பர சண்முக சாமி போற்றியே
சிற்பர சிவமகா தேவ போற்றியே
பொற்பமர் கௌரிநிற போற்றி போற்றியே. 6

அருளுறுங் கபமுகத் தண்ணல் பாதமும்
பொருளுறு சண்முகப் புனிதன் றாள்களும்
தெருளுறு சிவபிரான் செம்பொற கஞ்சமும்
மருளற நாடொறும் வணங்கி வாழ்த்துவாம். 7

## வண்ணக் கலி விருத்தம்

துதிபெறு கணபதி யிணையடி மலரும்
பதிதரு சரவண பவன்மல ரடியுங்
கதிதரு பரசிவ னியலணி கழலும்
மதியுற மனனிடை மருவுது மிகவே. 8

## வண்ண எண்சீர் விருத்தம்

கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலைவநி னிணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்
உலைவறு மொருபரை சரணஞ் சரணம்
எமைசிவை யம்பிகை சரணஞ் சரணம். 9

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி

# திருத்தணிகைப் பதிகம்

## 1. பிரார்த்தனை மாலை

### கட்டளைக் கலித்துறை

**சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க**

சீர்கொண்ட தெய்வ வதனங்க ளாறுந் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களுந் தாமரைத் தாள்களுமோர்
கூர்கொண்ட வேலு மயிலுநற் கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமுமென் கண்ணுற்றதே. 1

கண்மூன் றுறுசெங் கரும்பின்முத் தேபதங் கண்டிடுவான்
மண்மூன் றுலகும் வழுத்தும் பவள மணிக்குன்றமே
திண்மூன்று நான்கு புயங்கொண் டொளிர்வச் சிரமணியே
வண்மூன் றலர்மலை வாழ்மயி லேறிய மாணிக்கமே. 2

மாணித்த ஞான மருந்தேயென் கண்ணினுண் மாமணியே
ஆணிப்பொன் னேயென தாருயி ரேதணி காசலனே
தாணிற்கி லேனினைத் தாழாத வஞ்சர் தமதிடம்போய்ப்
பேணித் திரிந்தன னந்தோவென் செய்வனிப் பேதையனே. 3

அன்னே யெனைத்தந்த வப்பாவென் றேங்கி யலறுகின்றேன்
என்னேயிவ் வேழைக் கிரங்காது நீட்டித் திருத்தலெந்தாய்
பொன்னே சுகுணப் பொருப்பே தணிகைப் பொருப்பமர்ந்த
மன்னே கலப மயின்மே லழகிய மாமணியே. 4

மணியே தினைப்புன வல்லியை வேண்டி வளர்மறைவான்
கணியே யெனநின்ற கண்ணே யென்னுள்ளக் களிநறவே
பணியே னெனினு மெணைவலிந் தாண்டுன் பதநதரவே
நணியே தணிகைக்கு வாவென வோர்மொழி நல்குவையே. 5

நல்காத வீனர்தம் பாற்சென் றிரந்து நவைப்படுதன்
மல்காத வண்ண மருள்செய்கண் டாய்மயில் வாகனனே
பல்காத னீக்கிய நல்லோர்க் கருளும் பரஞ்சுடரே
அல்காத வண்மைத் தணிகா சலத்தி லமர்ந்தவனே. 6

அமரா வதியிறைக் காருயி ரீநத வருட்குன்றமே
சமரா புரிக்கர சேதணி காசலத் தற்பரனே
குமரா பரம குருவே குகாவெனக் கூவிநிற்பேன்
எமராஜன் வநதிடுங காலைய னேயெனை யேன்றுகொள்ளே. 7

கொள்ளுண்ட வஞ்சர்தங் கூட்டுண்டு வாழ்க்கையிற் குட்டுண்டுமேல்
துள்ளுண்ட நோயினிற் சூடுண்டு மங்கையர் தோய்வெனுமோர்
கள்ளுண்ட நாய்க்குன் கருணையுண் டோநற் கடலமுதத்
தெள்ளுண்ட தேவர் புகழ்தணி காசலச் சிற்பரனே. 8

சிற்பகன் மேவுமித் தேகத்தை யோம்பித் திருவனையார்
தற்பக மேவிழைந் தாழ்ந்தேன் தணிகை தனிலமர்ந்த
கற்பக மேநின் கழல்கரு தேனிக் கடைப்படுமென்
பொற்பக மேவிய நின்னரு ளென்னென்று போற்றுவதே. 9

போற்றே னெனினும் பொறுத்திடல் வேண்டும் புவிநடையாஞ்
சேற்றே விழுந்து தியங்குகின் றேனைச் சிறிதுமினி
ஆற்றே னெனதர சேயமு தேயென் அருட்செல்வமே
மேற்றேன் பெருகு பொழிற்றணி காசல வேலவனே. 10

வேல்கொண்ட கையும் விறல்கொண்ட தோளும் விளங்குமயின்
மேல்கொண்ட வீறு மலர்முக மாறும் விரைக்கமலக்
கால்கொண்ட வீரக் கழலுங்கண் டாலன்றிக் காமனெய்யுங்
கோல்கொண்ட வன்மை யறுமோ தணிகைக் குமரனே. 11

குருவே யயனரி யாதியர் போற்றுக் குறைதவிர்ப்பான்
வருவேல் பிடித்து மகிழ்வள்ள லேகுண மாமலையே
தருவே தணிகைத் தயாநிதி யேதுன்பச் சாகரமாங்
கருவே ரறுத்திக் கடையனைக் காக்கக் கடனுனக்கே. 12

உனக்கே விழைவுகொண் டோலமிட் டோங்கி யுழறுகின்றேன்
எனக்கே யருளித் தமியேன் பிழையுளத் தெண்ணியிடேல்
புனக்கேழ் மணிவல்லி யைப்புணர்ந் தாண்டருள் புண்ணியனே
மனக்கேத மாற்றுந் தணிகா சலத்தமர் வானவனே. 13

வானோர் குடிகளை வாழ்வித்த தெய்வ மணிச்சுடரே
கானோ ரெளியனென் றுன்பறுத் தாளென நண்ணிநின்றேன்
ஏனோநின் னெஞ்ச மிரங்காத வண்ண மிருங்கணிப்பூந்
தேனோ டருவி பயிலுந் தணிகைச் சிவகுருவே. 14

கையாத துன்பக் கடன்மூழ்கி நெஞ்சங் கலங்கியென்றன்
ஐயாநின் பொன்னடிக் கோலமிட் டேனென்னை யாண்டுகொளாய்
மையார் தடங்கண் மலைமகள் கண்டு மகிழ்செல்வமே
செய்யார் தணிகை மலையர சேயயிற் செங்கையனே. 15

செய்கையங் காந்த ளனையமின் னார்தந் திறத்துழன்றே
வெங்கய முண்ட விளவாயி னேன்விறல் வேலினையோர்
அங்கையி லேந்திய வையா குறவ ரரிதிற்பெற்ற
மங்கை மகிழுந் தணிகேச னேயருள் வந்தெனக்கே. 16

2

கேளாது போலிருக் கின்றனை யேழையிக கீழ்நடையில்
வாளா விடக்கொண் டலறிடு மோலத்தை மாமருந்தே
தோளா மணிச்சுட ரேதணி காசலத் தூய்ப்பொருளே
நாளாயி னென்செய்கு வேனிறப் பாய நவைவருமே. 17

நவையே தருவஞ்ச நெஞ்சக மாயவு நானுன்னன்பர்
அவையே யணுகவு மானந்த வாரியி லாடிடவுஞ்
சுவையே யமுதன்ன நின்றிரு நாமந் துதிக்கவுமாம்
இவையேயென் னெண்ணந் தணிகா சலத்து விருப்பவனே.

இருப்பாய மாய மனத்தால் வருந்தி யிளைத்துநின்றேன்
பொருப்பாய கன்மப் புதுவாழ்வி லாழ்ந்தது போதுமின்றே
கருப்பாழ் செயுமுன் கழலடிக் கேயிக் கடையவனைத்
திருப்பா யெனிலென்செய் கேன்றணி காசலத் தெள்ளமுதே.

தெள்ளகத் தோங்கிய செஞ்சுட ரேசிவ தேசிகனே
கள்ளகத் தேமலர்க் காவார் தணிகையெங் கண்மணியே
எள்ளகத் தேயுழன் றென்னின் றலைத்தெழுந் திங்குமங்குந்
துள்ளகத் தேன்சிரஞ் சேருங்கொ லோநின் றுணையடியே. 20

அடியே னெனச்சொல்வ தல்லானின் னருளடைந் தாரைக்கண்டே
துடியேன் அருண கிரிபாடு நின்னரு டோய்புகழைப்
படியேன் பதைத்துரு கேன்பணி யேன்மனப் பந்தமெலாங்
கடியேன் றணிகையைக் காணேனென் செய்வெனெங் காதலனே

தலனே யடியர் தனிமன மாம்புகழ் சார்தணிகா
சலனே யயனரி யாதியர் வாழ்ந்திடத் தாங்கயில்வேல்
வலனேநின் பொன்னருள் வாரியின் மூழ்க மனோலயம்வாய்க்
கிலனேல் சனன மரணமென் னுங்கடற் கென்செய்வனே. 22

என்செய்கை யென்செய்கை யெந்தாய்நின் பொன்னடிக் கேயலங்கல்
வன்செய்கை நீங்க மகிழ்ந்தணி யேன்றுதி வாயுரைக்க
மென்செய்கை கூப்ப விழிநீர் துளித்திட மெய்சிலிர்க்கத்
தன்செய்கை யென்பதற் றேதணி காசலஞ் சார்ந்திலனே. 23

சாருந் தணிகையிற் சார்ந்தோய்நின் றாமரைத் தாட்டுணைசேர்
சேருந் தொழும்பர் திருப்பத மன்றியிச் சிற்றடியேன்
ஊருந் தனமு முறவும் புகழு முரைமடவார்
வாருந் தணிமுலைப் போகமும் வேண்டிலன் மண்விண்ணிலே.24

மண்ணீ ரனல்வளி வானுகி நின்றருள் வத்துவென்றே
தெண்ணீர்மை யாற்புகழ் மாலய னேமுதற் றேவர்கடங்
கண்ணீர் தொடைத்தருள் கற்பக மேயுனைக் கண்டுகொண்டேன்
தண்ணீர் பொழிற்கண் மதிவந்து லாவுந் தணிகையிலே, 25

தணியாத துன்பத் தடங்கட னீங்கநின் றன்மலர்த்தாட்
பணியாத பாவிக் கருளுமுண் டோபசு பாசமற்றோர்க்(கு)
அணியாக நின்ற வருட்செல்வ மேதணி காசலனே
அணியா தவன்முத லாமட்ட மூர்த்த மடைந்தவனே. 26

அடையாத வஞ்சகர் பாற்சென் றிரந்திங் கலேந்தலேந்தே
கடையான நாய்க்குன் கருணையுண் டோதணி கைக்குணின்றே
உடையாத நன்னெஞ்சர்க் குண்மையைக் காண்பிக்கு முத்தமனே
படையாத தேவர் சிறைமீட் டளித்தருள் பண்ணவனே. 27

பண்ணவ னேநின் பதமல ரேத்தும் பயனுடையோர்
கண்ணவ னேதணி காசல னேயயிற் கையவனே
விண்ணவ ரேத்திய மேலவ னேமயன் மேவுமனம்
புண்ணவ னேனையுஞ் சேர்ந்தாயென் னேயுன்றன் பொன்னருளே.

பொன்னார் புயத்தனும் பூவுடை யோனும் புகழ்மணியே
என்னாவி யின்றுணை யேதணி காசலத் தேயமர்ந்த
மன்னாநின் பொன்னடி வாழ்த்தாது வீணில் வருந்துறுவேன்
இன்னா வியற்று மியமன்வந் தாலவற் கென்சொல்வனே. 29

சொல்லார் மலர்புனை யன்பகத் தோர்க்கருள் சொல்லுமெல்லாம்
வல்லாயென் றேத்த வறிந்தே னினியென்றன் வல்வினைகள்
எல்லாம் விடைகொண் டிரியுமென் மேவிய மன்சினமுஞ்
செல்லாது காணைய னேதணி காசலச் சீரரசே. 30

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

---

## 2. எண்ணப்பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவஷண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க்

அணிகொள் வேலுடை யண்ணலே
நின்றிரு வடிகளை யன்போடும்
பணிகி லேனக முருகிநின்று
ஆடிலேன் பாடிலேன் மனமாயைத
தணிகி லேன்றிருத் தணிகையை
நினைகிலேன் சாமிநின் வழிபோதத
துணிகி லேனிருந் தென்செய்தேன்
பாவியேன் றுன்பமு மெஞ்சேனே.

சேல்பி டித்தவன் றந்தையா
    தியர்தொழுந் தெய்வமே சிவப்பேறே
மால்பி டித்தவ ரறியொணாத்
    தணிகைமா மலையமர்ந் திடுவாழ்வே
வேல்பி டித்தருள் வள்ளலே
    யான்சதுர் வேதமுங் காணுநின்
கால்பி டிக்கவுங் கருணைநீ
    செய்யவுங் கண்டுகண் களிப்பேனோ. 2

களித்து நின்றிருக் கழலிணை
    யேழையேன் காண்பனோ வலதன்மை
ஒளித்து வன்றுய ருழப்பனோ
    வின்னதென் றுணர்ந்திலே னருட்போதந்
தெளித்து நின்றிடுந் தேசிக
    வடிவமே தேவர்கள் பணிதேவே
தளிர்த்த தண்பொழிற் றணிகையில்
    வளர்சிவ தாருவே மயிலோனே. 3

மயிலின் மீதுவந் தருடரு
    நின்றிரு வரவினுக் கெதிர்பார்க்குஞ்
செயலி னேன்கருத் தெவ்வண
    முடியுமோ தெரிகிலே னென்செய்கேன்
அயிலின் மாமுத றடிந்திடு
    மையனே யாறுமா முகத்தேவே
கயிலை நேர்திருத் தணிகையம்
    பதிதனிற் கந்தனென் றிருப்போனே. 4

இருப்பு நெஞ்சகக் கொடியனேன்
பிழைதனை யெண்ணுறே லினிவஞ்சக்
கருப்பு காவணங் காத்தரு
ளையனே கருணையங் கடலேயென்
விருப்பு ளூறிநின் றோங்கிய
வமுதமே வேலுடை யெம்மானே
தருப்பு காவினன் விலகுறுந்
தணிகைவாழ் சாந்தசற் குணக்குன்றே, 5

குன்று நேர்பிணித் துயரினால்
வருந்திநின் குறைகழல் கருதாத
துன்று வஞ்சகக் கள்ளனே
னெஞ்சகத் துயரறுத் தருள்செய்வான்
இன்று மாமயின் மீதினி
லேறியிவ் வேழைமுன் வருவாயேல்
நன்று நன்றதற் கென்சொல்வார்
தணிகைவாழ் நாதநின் னடியாரே. 6

யாரை யுந்துணை கொண்டிலே
னின்னடி யிணைதுணை யல்லானின்
பேரை யுன்னிவாழ்ந திடும்படி
செய்வையோ பேதுறச் செய்வாயோ
பாரை யும்முயிர்ப் பரப்பையும்
படைத்தருள் பகவனே யுலகேத்துஞ்
சீரை யுற்றிடுந் தணிகையங்
கடவுணின் றிருவுள மறியேனே. 7

உளங்கொள் வஞ்சக நெஞ்சர்த
    மிடமிட ருழந்தக முலைவுற்றேன்
வளங்கொள் நின்பத மலர்களை
    நாடோறும் வாழ்த்திலே னென்செய்கேன்
குளங்கொள் கண்ணனுங் கண்ணனும்
    பிரமனுங் குறிக்கரும் பெருவாழ்வே
தளங்கொள் பொய்கைசூழ் தணிகையம்
    பதியில்வாழ் தனிப்பெரும் புகழ்தேவே. 8

தேவர் நாயக னாகியே
    யென்மனச் சிலைதனி லமர்ந்தோனே.
மூவர் நாயக னெனமறை
    வாழ்த்திடு முத்தியின் வித்தேயிங் (கு)
ஏவ ராயினு நின்றிருத்
    தணிகைசென் றிறைஞ்சிடி னவரேயென்
பாவ நாசஞ்செய் தென்றனை
    யாட்கொளும் பரஞ்சுடர் கண்டாயே. 9

கண்ட னேகவா னவர்தொழு
    நின்றிருக் கழலிணை தனக்காசை
கொண்ட னேகமாய்த் தெண்டநிட்
    டானந்தக் கூத்தினை யுகந்தாடித்
தொண்ட னேனுநின் னடியரிற்
    செறிவனோ துயருழந் தலைவேனோ
அண்ட னேதிருத் தணிகைவா
    ழண்ணலே யணிகொள்வேற் கரத்தோனே. 10

**சிவசண்முக சிவஞான தேசிகர் திருவடி வாழ்க**

## 3. செழுஞ்சுடர் மாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க.

ஊணே யுடையே பொருளேயென்
றுருகி மனது தடுமாறி
வீணே துயரத் தழுந்துகின்றேன்
வேறோர் துணைநின் னடியன்றிக்
காணே னமுதே பெருங்கருணைக்
கடலே கனியே கரும்பேநற்
றேனேர் தணிகை மலைமருந்தே
தேனே ஞானச் செழுஞ்சுடரே. 1

பாரும் விசும்பு மறியவெனைப்
பயந்த தாயுந் தந்தையுநீ
ஓரும் போதிங் கெனிலெளியே
னோயாத் துயருற் றிடனன்றோ
யாருங் காண வுனைவாதுக்
கிழுப்பே னன்றி யென்செய்கேன்
சேருந் தணிகை மலைமருந்தே
தேனே ஞானச் செழுஞ்சுடரே. 2

கஞ்சன் றுதிக்கும் பொருளேயென்
கண்ணே நின்னைக் கருதாத
வஞ்சர் கொடிய முகம்பார்க்க
மாட்டே னினியென் வருத்தமறுத்
தஞ்ச லெனவந் தருளாயே
லாற்றேன் கண்டா யடியேனே
செஞ்சந் தனஞ்சேர் தணிகைமலைத்
தேனே ஞானச் செழுஞ்சுடரே. 3

மின்னே ருலக நடையதனுன்
மேவுந் துயருக் காளாகிக்
கன்னேர் மனத்தே னினைமறந்தேன்
கண்டேன் கண்டாய் கற்பகமே
பொன்னே கடவுண் மாமணியே
போதப் பொருளே பூரணமே
தென்னேர் தணிகை மலையரசே
தேவே ஞானச் செழுஞ்சுடரே. 4

வளைத்தே வருத்தும் பெருந்துயரால்
வாடிச் சவலை மகவாகி
இளைத்தேன் றேற்றுந் துணைகாணே
னென்செய் துய்கே னெந்தாயே
விளைத்தே னொழுகு மலர்த்தருவே
விண்ணே விழிக்கு விருந்தேசீர்
திளைக்தோர் பரவுந் திருத்தணிகைத்
தேவே ஞானச் செழுஞ்சுடரே. 5

அடுத்தே வருத்துந துயர்க்கடலி
லறியா தந்தே விழுந்திட்டேன்
எடுத்தே விடுவார் தமைக்காணே
னெந்தா யெளியே னென்செய்கேன்
கடுத்தோர் கண்டத் தெம்பான்றன்
கண்ணே தருமக் கடலேயென்
செடித்தீர் தணிகை மலைப்பொருளே
தேனே ஞானச் செழுஞ்சுடரே. 6

உண்டாற் குறையு மெனப்பசிக்கு
முலுத்த ரசுத்த முகத்தையெதிர்
கண்டால் நடுங்கி யொதுங்காது
கடைகாத் திரந்து கழிக்கின்றேன்
கொண்டா ரடியர் நின்னருளை
யானோ வொருவன் குறைபட்டேன்
திண்டா ரணிவேற் றணிகைமலைத்
தேவே ஞானச் செழுஞ்சுடரே. 7

வேட்டே னினது திருவருளை
வினையே னினியித் துயர்பொறுகக
மாட்டேன் மணியே யன்னேயென்
மன்னே வாழ்க்கை மாட்டுமனம்
நாட்டே னயன்மா லெதிர்வரினு
நயக்கே னெனக்கு நல்காயோ
சேட்டே னலரும் பொழிற்றணிகைத்
தேவே ஞானச் செழுஞ்சுடரே. 8

கல்லா நாயே னெனினுமெனைக்
காக்குந் தாய்நீ யென்றுலகம்
எல்லா மறியு மாதலினா
லெந்தா யருளா திருத்தியெனிற்
பொல்லாப் பழிவந் தடையுமுனக்
கரசே யினியான் புகல்வதென்னே
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத்
தேவே ஞானச் செழுஞ்சுடரே. 9

அன்னே யப்பா வெனநினருட்
கார்வந கூர்ந்திங் கலேகின்றேன்
என்னே சற்று மிரங்கிலேநீ
யென்னெஞ் சோநின் னன்னெஞ்சம்
மன்னே யொளிகொண் மாணிக்க
மணியே குணப்பொன் மலேயேநற்
றென்னேர் பொழில்சூழ் திருத்தணிகைத்
தேவே ஞானச செழுஞ்சுடரே. 10

நடையேய் துயரான் மெலிந்துநினே
நாடா திழலு நாளுயிற்
கடையே னெனினுங் காத்தலென்றன்
கண்ணே நினது கடனன்றே
தடையேன் வாருவாய் வநதுனருள்
தருவா யிதுவே சமயங்காண்
செடிதீர்த் தருளுந் திருத்தணிகைத்
தேவே ஞானச் செழுஞ்சுடரே. 11

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

## 4. குறையிரந்த பத்து.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

சீர்பூத்த வருட்கடலே கரும்பே தேனே
செம்பாகே யெனதுகுல தெய்வ மேநற்
கூர்பூத்த வேன்மலர்க்கை யரசே சாந்த
குணக்குன்றே தணிகைமலேக் கோவே ஞானப்
பேர்பூத்த நின்புகழைக்கருதி யேழை
பிழைக்கவருள் செய்வாயோ பிழையை நோக்கிப்
பார்பூதத பவத்திலுற விடினென் செய்கேன்
பாவியே னநதோவன் பயந்தீ ரேனே 1

தீராத துயர்க்கடலி லழுந்தி நாளுந்
தியங்கியழு தேங்குமிந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயலென்னே யெந்தா யெந்தாய்
பாவியென விட்டனையோ பன்னா ளாக
ஏராய வருள்தருவா யென்றே யேமாந்
திருந்தேனே யென்செய்கேன் யாரு மில்லேன்
சீராருந் தணிகைவரை யமுதே யாதி
தெய்வமே நின்கருத்தைத் தெளிந்தி லேனே. 2

தெளிக்குமறைப் பொருளேயென் னன்பே யென்றன்
செல்வமே திருத்தணிகைத் தேவே யன்பர்
களிக்குமறைக் கருத்தேமெய்ஞ் ஞான நீதிக்
கடவுளே நின்னருளைக் காணே னின்னும்
சுளிக்குமிடித் துயரும்யமன் கயிறு மீனத்
தொடர்புமலத் தடர்புமனச் சோர்வு மாந்தோ
அளிக்குமெனை யென்செயுமோ வறியே னின்றன்
அடித்துணையே யுறுதுணைமற் றன்றி யுண்டோ. 3

உண்டாய வுலகுயிர்கள் தம்மைக் காக்க
ஒளித்திருந்தவ் வுயிர்வினைக ளொருங்கே நாளுங்
கண்டாயே யிவ்வேழை கலங்குந் தன்மை
காணாயோ பன்னிரண்டு கண்கள் கொண்டோய்
தண்டாத நின்னருட்குத் தகுமோ விட்டால்
தருமமோ தணிகைவரைத் தலத்தின் வாழ்வே
விண்டாதி தேவர்தொழு முதலே முத்தி
வித்தேசொற் பதங்கடந்த வேற்கை யானே. 4

கையாத அன்புடையா ரங்கை மேவுங்
கனியேயென் னுயிரேயென் கண்ணே யென்றும்
பொய்யாத பூரணமே தணிகை ஞானப்
பொருளேநின் பொன்னருளிப் போதுயான் பெற்றால்
உய்யாத குறையுண்டோ துயர்சொல் லாமல்
ஓடுமே யமன்பாச மோய்ந்து போமென்
ஐயாநின் னடியரொடு வாழ்கு வெனிங்
காருனையல் லாலெனக்கின் றருள்செய் வாயே. 5

வாய்க்குமுன தருளென்றே யந்தோ நாளும்
வழிபார்த்திங் கிளைக்கின்றேன் வருத்தும் பொல்லா
நோய்க்குமுறு துயர்க்குமிலக் கானேன் மாழ்கி
நொந்தேனின் னருள்காணே னுவலும் பாசத்
தேய்க்குமவன் வரிலவனுக் குயாது சொல்வேன்
என்செய்கேன் றுணையறியா வேழை யேனே
தூய்க்குமர குருவேசெந் றணிகை மேவுஞ்
ஜோதியே யிரங்காயோ தொழும்பா ளற்கே. 6

ஆளாயோ துயரளக்கர் வீழ்ந்து மாழ்கி
ஐயாவோ வெனுமுறையை யந்தோ சற்றுங்
கேளாயோ யென்செய்கே னெந்தா யன்பர்
கிளத்துமுன தருளெனக்குக் கிடையா தாகில்
நாளாயோர் நடுவன்வரி லென்செய் வானோ
நாயினே னென்சொல்வே னுணு வேனோ
தோளாவோர் மணியேசெந் றணிகை மேவுஞ்
சுடரேயென் னறிவேசிற் சுகங்கொள் வாழ்வே. 7

வாழ்வேநற் பொருளேநன் மருந்தே ஞான
வாரிதியே தணிகைமலை வள்ளலேயான்
பாழ்வேலை யெனுங்கொடிய துயருண் மாழ்கிப்
பதைத்தயா துறையோநின் பதத்துக் கென்றே
தாழ்வேனீ தறிந்திலையே நாயேன் மட்டுந்
தயவிலையோ நான்பாவி தானோ பார்க்குள்
ஆழ்வேனென் றயல்விட்டா னீதி யேயோ
அச்சோவிங் கென்செய்கே னண்ண லண்ணல்.

அண்ணாவே நின்னடியை யன்றி வேறோர்
ஆதரவிங் கறியேனெஞ் சழிந்து துன்பாற்
புண்ணாவேன் றன்னையின்னும் வஞ்சர் பாற்போய்ப்
புலந்துமுக வாட்டமுடன் புலம்பி நிற்கப்
எண்ணாதே யாவனிவன் பாவிக் குள்ளும்
படுபாவி யென்றென்னைப் பரிந்து தள்ள
எண்ணாதே யான்மிகவு மேழை கண்டாய்
இசைக்கரிய தணிகையில்வீற் றிருக்குங் கோவே.

கோவேநற் றணிகைவரை யமர்ந்த ஞானக்
குலமணியே குகனேசற் குருவே யார்க்குந்
தேவேயென் விண்ணப்ப மொன்று கேண்மோ
சிந்தைதனி னினைக்கவருள் செய்வாய் நாளும்
பூவேயு மயன்றிருமால் புலவர் முற்றும்
போற்றுமெழிற் புரந்தரனெப் புவியு மோங்கச்
சேவேறும் பெருமானிங் கிவர்கள் வாழ்த்தல்
செய்துவக்கு நின்னிரண்டு திருத்தாட் சீரே. 10

சிவசண்முக சிவஞானதேசிகள் திருவடிவாழ்க

## 5. ஜீவசாக்ஷிமாலை

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

**சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க**

பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும்
பாதமல ரழகினையிப் பாவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றோ கனவி லேனுங்
காட்டென்றாற் காட்டுகிலாய் கருணை யீதோ
விண்ணேறு மரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கேயென் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 1

பண்டுமன துவந்துகுணஞ் சிறிது மில்லாப்
பாவியேன் றனையாண்டாய் பரிவாக வின்று
கொண்டுகுலம் பேசுதல்போ லெளியேன் குற்றங்
குறித்தவிடி லென்செய்கேன் கொடிய னேனைக்
கண்டுதிருத் தொண்டர்நகை செய்வா ரெந்தாய்
கைவிடே லுன்னுணை காண்முக் காலும்
தண்டுளவன் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 2

புன்புலைய வஞ்சகர்பாற் சென்று வீணே
புகழ்ந்துமன மயர்ந்துறுகண் பொருந்திப் பொய்யாம்
வன்புலைய வயிறோம்பிப் பிறவி நோய்க்கு
மருந்தாய நின்னடியை மறந்தே னந்தோ
இன்புலைய வுயிர்கொள்வான் வரிலேன் பாலவ்
இயமனுக்கிங் கென்சொல்கே னென்செய் கேனே
தன்புகழ்கா ணருந்தாணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 3

பெருங்களப மூலமடவா ரென்னும் பொல்லாப்
பேயக்கோட்பட் டாடுகின்ற பித்த னேனுக்(கு)
இரும்புலவர்க் கரியதிரு வருளீ வாயேல்
என்சொல்வா ரடியரதற் கெந்தா யெந்தாய்
கரும்பினிழிந் தொழுகுமருட் சுவையே முக்கட்
கனிகனிந்த தேனேயென் கண்ணே ஞானந்
தரும்புனிதர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 4

கல்லளவா நெஞ்சமென வஞ்ச மாதர்
கண்மாய மெனுங்கயிற்றாற் கட்டு வித்துச்
சொல்லளவாத் துன்பமெனுங் கடலில் வீழ்த்தச்
சோர்கின்றே னெந்தோநற் றுணையொன் றில்லேன்
மல்லளவாய்ப் பவமாய்க்கு மருந்தா முன்றன்
மலர்ப்பாதப் புணைதந்தால் மயங்கே னெந்தாய்
1சல்லமுலாத் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 5

அன்னைமுத லாம்பந்தத் தழுங்கி நாளும்
அலைந்துவயி றோம்பிமன மயர்ந்து நாயேன்
முன்னைவினை யாற்படும்பா டெல்லாஞ் சொல்லி
முடியேன்செய் பிழைகருதி முனியே லையா
பொன்னைநிக ரருட்குன்றே யொன்றே முக்கட்
பூமணமே நறவேநற் புலவர் போற்றத்
தன்னைநிகர் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 6

---

1 சல்லம் என்பது—பன்றிக்கோடு.

பன்னரும்வன் றுயரால்நெஞ் சழிந்து நாளும
பதைத்துருகி நின்னருட்பால் பருகக் கிட்டா(து)
உன்னரும்பொய் வாழ்க்கையெனுங் கானத் திந்த
ஊர்நகைக்க பாவியழ, னுணர்ந்தி லாயோ
என்னருமை யப்பாவென் னையா வென்றன்
இன்னுயிர்க்குத் தலைவாவிங் கெவர்க்குந் தேவா
தன்னியற்சீர் வளர்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 7

கோவேநின் பதந்துதியா வஞ்ச நெஞ்சக்
கொடியோர்பால் மனவருத்தங் கொண்டாழ் கின்றேன்
சாவேனு மல்லனின்பொன் னருளைக் காணேன்
தமியேனை யுய்யும்வண்ணஞ் தருவ தென்றோ
சேவேறுஞ் சிவபெருமா னரிதி னீன்ற
செல்வமே யருண்ஞானத் தேனே யன்பர்
தாவேதந் தெறுந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 8

ஓயாது வருமிடியான் வஞ்சர் பாற்சென்
றுளங்கலங்கி நாணியிரந் துழன்றேன் னாளும்
மாயாத துயரடைந்து வருந்தித் தெய்வ
மருந்தாய நின்னடியை மறந்திட் டேனே
தாயாகித் தந்தையாய்த் தமராய் ஞான
சற்குருவாய்த் தேவாகித் தழைத்த வொன்றே
சாயாத புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 9

மின்னாரு மிடைமடவா ரல்கு லாய
வெங்குழியில் வீழ்ந்தாழ்ந்து மெலிந்தே னல்லால்
எந்நாளு முனைப்போற்றி யறியே னென்னே
ஏழைமதி கொண்டேனிங் கென்செய் கேனே
அன்னேயென் னப்பாவென் றரற்று மன்பர்க்
காரமுதே யருட்கடலே யமரர் கோவே
தன்னேர்வத் தமர்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 10

வன்சொலினா ரிடையடைந்து மாழ்கு மிந்த
மாபாவி யென்குறையை வகுத்து நாளும்
என்சொலினு மிரங்காம லந்தோ வாளா
விருக்கின்றா யென்னைநின் னிரக்க மெந்தாய்
இன்சொலடி யவர்மகிழு மின்ப மேயுள்
இருளகற்றுஞ் செஞ்சுடரே யெவர்க்குங் கோவே
தன்சொல்வளர் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 11

மீளாத வன்றுயர்கொண் டனர் தம்மான்
மெலிந்துநினை யழைத்தலறி விம்மா நின்றேன்
கேளாத கேள்வியெலாங் கேட்பிப் பாய்நீ
கேட்கிலையோ வென்னளவிற் கேள்வி யின்றோ
மாளாத தொண்டரக விருளை நீக்கு
மதியேசிற் சுகஞான மழைபெய் விண்ணே
தாளாளர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 12

மண்ணினுன் மங்கையராற் பொருயா லந்தோ
வருந்திமன மயங்கிமிக வாடி நின்றேன்
புண்ணியா நின்னருளே யின்னுங் காணேன்
பொறுத்துமுடி யென்றுபரம் புகல்வ தென்னே
எண்ணினு லளப்பரிய பெரிய மோன
இன்பமே யன்பர்தம் திதயத் தோங்குந்
தண்ணிறுற் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 13

வஞ்சகராங் கானினிடை யடைந்தே நெஞ்சம்
வருந்தியுறு கண்வெயிலான் மாழாந் தந்தோ
தஞ்சமென்பா ரின்றியொரு பாவி நானே
தனித்தருணீர்த் தாகமுற்றேன் தயைசெய் வாயோ
செஞ்சொன்மறை முடிவிளக்கே யுண்மை ஞானத்
தேறலே முத்தொழில்செய் தேவர் தேவே
சஞ்சலநீத் தருள்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 14

வாழாத வண்ணமெனைக் கெடுக்கும் பொல்லா
வஞ்சகநெஞ் சாலுலகின் மாழாந் தந்தோ
பாழான மடந்தையர்பாற் சிந்தை வைக்கும்
பாவியேன் முகம்பார்க்கப் படுவ தேயோ
ஏழாய வன்பவத்தை நீக்கு ஞான
இன்பமே யென்னயரசே யிறையே சற்றுந்
தாழாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 15

உளந்தளர விழிசுருக்கும் வஞ்சர் பாற்சென்
றுத்தம்நின் னடியைமறந் தோயா வெயயில்
இளந்தளிர்போல் நலிந்திரந்திங் குழலு மிந்த
ஏழைமுகம் பார்த்திரங்கா யென்னே யென்னே
வளந்தருசற் குணமலையே முக்கட் ஜோதி
மணியினிருந் தொளிரொளியே மயிலூர் மன்னே
தளந்தரும்பூம் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 16

கல்லாத வஞ்சகர்பாற் சென்று வீணாள்
கழித்துநிற்குங் கடையனிவன் கருணை யில்லாப்
பொல்லாத பாவியென வெண்ணி யென்னைப்
புறம்போக்கி லையாயான் புரிவ தென்னே
எல்லாஞ்செய் வல்லவனே தேவர் யார்க்கும்
இறைவனே மயிலேறு மெம்பி ரானே
சல்லாப வளத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 17

கன்னேய நெஞ்சகர்மாட் டணுகி யையோ
கரைந்துருகி யெந்தாய்நின் கருணை காண(து)
தென்னேயென் றேங்கியழும் பாவி போனுக்
கிரக்கவிட மிலையோநின் னிதயங் கல்லோ
பொன்னேயென் னுயிர்க்குயிராய்ப் பொருந்து ஞான
பூரணமே புண்ணியமே புனித வைப்பே
தன்னேரில் தென்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 18

பாவவினைக் கோரிடமா மடவார் தங்கள்
பாழ்ங்குழிக்கண் வீழமனம் பற்றி யந்தோ
மாவல்வினை யுடன்வெலி திங் குழல்கின் றேனின்
மலரடியைப் போற்றேனென் மதிதா னென்னே
தேவர்தொழும் பொருளேயென் குலத்துக் கெல்லாந்
தெய்வமே யடியருளஞ் செழிக்குந் தேனே
தாவகன்றோர் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 19

கன்னியர்தம் மார்பிடங்கொண் டலைக்கும் புன்சீழ்க்
கட்டிகளைக் கருதிமனங் கலங்கி வீணே
அன்னியனா யலைகின்றேன் மயக்கநீக்கி
அடிமைகொள லாகாதோ வருட்பொற் குன்றே
சென்னிமிசைக் கங்கைவைத்தோ னரிதிற் பெற்ற
செல்வமே யென்னுருக்குந் தேனே யெங்குந்
தன்னியல்கொண் டுறுந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 20

உள்ளமனக் குரங்காட்டித் திரியு மென்றன்
உளவறிந்தோ வையாநீ யுன்னைப் போற்றார்
கள்ளமனக் குரங்குகளை யாட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன் கண்டாய்
தெள்ளமுதப் பெருங்கடலே தேனே ஞானத்
தெளிவேயென் றெய்வமே தேவர் கோவே
தள்ளரிய புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 21

வந்தாள்வா யையாவே வஞ்சர் தம்பால்
வருந்துகின்றே னென்றலறு மாற்றங் கேட்டும்
எந்தாய்நீ யிரங்காம லிருக்கின் றாயால்
என்மனம்போ லின்மனமு மிருந்த தேயோ
கந்தாவென் றுரைப்பவர்தங் கருத்துள் ளூறுங்
கனிரசமே கரும்பேகற் கண்டே நற்சீர்த்
தந்தாளுந் திருத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 25

ஊராதி யிகழ்மாயக் கயிற்றாற் கட்டுண்
டாயந்தலறு மனங்குழைந்திங் குழலு கின்றேன்
பாராதி யண்டமெலாங் கணத்திற் காண்போய்
பாவியேன் முகவாட்டம் பார்த்தி லாயோ
சீராதி பகவனருட் செல்வ மேயென்
சிந்தைமலர்ந் திடஊறுந் தேனே யின்பஞ்
சாராதி மலைத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 23

வாவென்பா ரின்றியுன தன்ப ரென்னை
வஞ்சகனென் றேமறுத்து வன்க ணானீ
போவென்பா ராகிலெங்கு போவே னந்தோ
பொய்யனென் றுணையின்றிப் புலம்பு வேனே
கோவென்பார்க் கருடருமக் குன்றே யொன்றே
குணங்குறியற் றிடவருளுங் குருவே வாழ்க்கைத்
தாவென்பார் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 24

மாயைநெறி யாமுலக வாழ்க்கை தன்னில்
வருந்திநினை யழைத்தலறி மாழ்கா நின்றேன்
தாயையறி யாதுவருஞ் சூலுண் டோவென்
சாமிநீ யறியாயோ தயையில் லாயோ
போயைநிகர் பாவியென நினைந்து விட்டாற்
பேதையே னென்செய்கேன் பெருஞ்சீர்க் குன்றே
சாயைகடற் செறிதணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 25

மின்னநிகர்ந் தழிவாழ்க்கைத் துயரால் நெஞ்சம்
மெலிந்துநினை தருள்பருக வேட்டு நின்றேன்
என்னையிவன் பெரும்பாவி யென்றே தள்ளில்
என்செய்கேன் றன்பெறுஞ்சேய் இயற்றுங் குற்றம்
அன்னைபொறுத் திடல்நீதி யல்ல வோவென்
ஐயாவே நீபொறுக்க லாகா தோதான்
தன்னைநிகர் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 26

முந்தைவினை யால்நினது வழியிற் செல்லா
மூடனேன் றனையன்பர் முனிந்து பெற்ற
தந்தைவழி நில்லாத பாவி யென்றே
தள்ளிவிடிற் றலைசாய்த்துத் தயங்கு வேனே
எந்தைநின தருள்சற்றே யளித்தால் வேறோர்
எண்ணமிலே னேகாந்தத் திருந்து வாழ்வேன்
சந்தனவான் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 27

பன்னகமொன் றுறுவஞ்ச வுலகி னின்று
பரதவித்துன் னருட்கெதிர்போய்ப் பார்க்கின் றேனின்
பொன்னருளைப் புணர்ந்துமனை மகிழ்ந்து வாழப்
புண்ணியனே நாயேற்குப் பொருத்த மின்றே
பின்னையொரு துணையறியேன் றனியே விட்டாற்
பெருமநினைக் கழகேயோ பேதை யாமென்
றன்னையளித் தருட்டணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 28

**சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க**

---

## 6. ஆற்றா முறை

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க**

விண்ண ராவாழ் வேந்தே ருதியர்
வேண்டி யோகவும் விட்டெ னெஞ்சகக்
கண்ண ருதுநீ கலந்து நிற்பதைக்
கள்ள நாயி னேன் கண்டு கொண்டிலேன்
எண்ண ருந்துயர்க் கடலுண் மூழ்கியே
இயங்கி மாழ்குவேன் யாது செய்குவேன்
தண்ண ருப்பொழிற் ருலவும் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 1

வாட்க ணேழையர் மயலிற் பட்டக
மயங்கி மாலயன் வழுத்து நின்றிருத்
தாட்க ணேமற் றுலக வாழ்க்கையிற்
சஞ்ச ரித்துழல் வஞ்ச னேனிடம்
ஆட்க ணேசுழ லந்த கர்களில்
அஞ்சு வேனலால் யாது செய்குவேன்
காட்க ணேர்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
நாயகா திருத் தணிகை நாதனே. 2

எண்ணில் புன்மொழி யெய்தி யையவோ
இயல்பின் வாழ்க்கையி லியங்கி மாழ்கியே
கண்ணி னுண்மணி யாய நின்றனைக்
கருதி டாதுழல் கபட னேற்கருள்
நண்ணி வந்திய னேழை யாமென
நல்கி யாண்டிட னிபாய மேசொலாய்
தண்ணி ரும்பொழிற் சூழும் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 3

கூவி யேழையர் குறைக டீரவாட்
கொள்ளும் வள்ளலே குறுகும் வாழ்க்கையிற்
பாவி யேன்படும் பாடனைத்தையும்
பார்த்தி ருந்துநீ பரிந்து வந்திலாய்
சேவி யேனெனிற் றள்ள னீதியோ
திருவ ருட்கொரு சிந்து வல்லையோ
தாவி யோர்வண் டயில்செய் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 4

சந்தை நேர்மனந் தன்னி லேங்குவேன்
சாமி நின்றிருத் தாளுக் கன்பிலேன்
எந்தை நீமகிழ்ந் தென்னை யாள்வையேல்
என்னை யன்பாக னென்சொல் வார்களோ
நிந்தை யேற்பினுங் கருணை செய்திடல்
நித்த நின்னருள் நீதி யாகுமால்
தந்தை தாயென வந்து சீர்தருந்
தலைவ னேதிருத் தணிகை நாதனே. 5

செல்லும் வாழ்க்கையிற் றியங்க விட்டுநின்
செய்ய தாள்துதி செய்தி டாதுழல்
கல்லும் வெந்நிடக் கண்டு மீண்டுசெய்
கள்ள நெஞ்சினேன் கவலைதீர்ப் பையோ
சொல்லு மின்பவான் சோதி யேயருள்
தோற்ற மேசுக சொருப வள்ளலே
சல்லி யங்கெட வருள்செய் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே, 6

ஏது செய்குவ னேனு மென்றனை
ஈன்ற நீபொறுத் திடுத லல்லதை
ஈது செய்தவ னென்றிவ் வேழையை
எந்த வண்ணநீ யெண்ணி நீக்குவாய்
வாது செய்வெனிப் போது வள்ளலே
வறிய னேனை மதித்து நின்றிடேல்
தாது செய்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே, 7

பேயு மஞ்சுறும் பேதை யார்களைப்
பேணு மிப்பெரும் பேய னேற்கொரு
தாயு மப்பனுந் தமரு நட்புமாய்த்
தண்ண ருட்கடல் தந்த வள்ளலே
நீயு நானுமோர் பாலு நீருமாய்
நிற்க வேண்டினே னீதி யாகுமோ
சாயும் வன்பவந் தன்னை நீக்கிடுஞ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 8

பொய்யார் தம்மனம் புகுந்தி லின்றெனப்
புனித நூலெலாம் புகல்வ தாதலால்
ஐய நின்றிரு வருட்சி றப்பவிங்
கஞ்சி நின்றெனிவ் விஞ்ச வஞ்சனேன்
மெய்ய ருள்ளுளே விளங்குஞ் சோதியே
வித்தி லாதவான் விளைந்த வின்பமே
கைய லாரிரு வோரு மேவுதோட்
சாமி யேதிருத் தணிகை நாதனே 9

மாலின் வாழ்க்கையின் மயங்கி நின்பதம்
மறந்து ழன்றிடும் வஞ்ச நெஞ்சினேன்
பாலி னீரென நின்ன டிக்கணே
பற்றி வாழ்ந்திடப் பண்ணு வாய்கொலோ
சேலின் வாட்கணார் தீய மாயையிற்
றியங்கி நின்றிடச் செய்கு வாய்கொலோ
சால நின்னுளந் தானெவ் வண்ணமோ
சாற்றி டாய்திருத் தணிகை நாதனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

---

## 7. இரந்தவிண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

நாளை யேகியே வணங்குது
மெனத்தின நாளையே கழிக்கின்றோம்
[illegible]ளை நெஞ்சமே யென்னையோ
வென்னையோ வுயர்திருத் தணிகேசன்
தாளை யுன்னியே வாழ்ந்தில
முயிருடல் தணந்திடல் தனையிந்த
வேளை யென்றறி வுற்றில
மென்செய்வோம் விளம்பரும் விடையோமே. 1

இடைய வாழ்க்கையை விரும்பின
னின்றிரு விரைமலர்ப் பதம் போற்றேன்
கடைய நாயினே னெவ்வண
நின்றிருக் கருணைபெற் றுய்வேனே
விடையி லேறிய சிவபரஞ்
சுடருளே விளங்கிய வொளிக்குன்றே
தடையி லாதபே ரானந்த
வெள்ளமே தணிகையெம் பெருமானே. 2

பெருமை வேண்டிய பேதையிற்
பேதையேன் பெருந்துய ருழக்கின்றேன்
ஒருமை யீயுநின் றிருப்பத
மிறைஞ்சிலே னுய்வதெப் படியேயோ
அருமை யாந்தவத் தம்மையு
மப்பனு மளித்திடும் பெருவாழ்வே
தருமை வள்ளலே குணப்பெருங்
குன்றமே தணிகைமா மலையானே. 3

மலையும் வேற்கணார் மையலி
லழுந்தியே வள்ளனின் பதம்போற்று
அலையு மிப்பெருங் குறையினை
யையகோ யாவரோ டுரைசெய்கேன்
நிலைகொ ளானந்த நிருத்தனுக்
கொருபொரு ணிகழ்த்திய பெருவாழ்வே
தலைமை மேவிய சற்குரு
நாதனே தணிகையம் பதியானே. 4

பதியு மப்பனு மன்னையுங்
குருவுநற் பயன்றரு பொருளாய
கதியு நின்றிருக் கழலடி
யல்லது கண்டில னெளியேனே
விதியு மாலுநின் றேத்திடுந்
தெய்வமே விண்ணவர் பெருமானே
வதியுஞ் சின்மய வடிவமே
தணிகைமா மலையமர்ந் திடுவாழ்வே. 5

வாழு நின்றிருத் தொண்டர்கள்
திருப்பதம் வழுத்திடா துலகத்தே
தாழும் வஞ்சர்பாற் றாழுமென்
றன்மையென் றன்மைவன் பிறப்பாய
ஏழு மென்னதே யாகிய
தையனே யெவரேனைப் பொருகின்றோர்
ஊழு நீக்குறுந் தணிகையெம்
மண்ணலே யுயர்திரு வருட்டேனே. 6

தேனுந் தெள்ளிய வமுதமும்
கைக்குநின் றிருவருட் டேனுண்டே
யானு நீயுமாய்க் கலந்துற
வாடுநா ளெந்நா ளறியேனே
வானும் பூமியும் வழுத்திடுந்
தணிகைமா மலையமர்ந் திடுதேவே
கோனுந் தற்பர குருவுமாய்
விளங்கிய குடாரசற் குணக்குன்றே. 7

குன்று பொய்யுடல் [illegible]ழ்வினை
மெய்யெனக் குறித்திவ ணலைகின்றேன்
இன்று நின்றிரு வருளடைந்
துய்வனோ வில்லையிவ் வுலகத்தே
என்று மிப்படிப் பிறந்திறந்
துழல்வனோ யாதுமிங் கறிகில்லேன்
நன்று நின்றிருச் சித்தமென்
பாக்கியம் நற்றணி கையிற்றேவே. 8

தேவ ருந்தவ முனிவருஞ்
சித்தருஞ் சிவனரி யயனுகும்
மூவ ரும்பணி முதல்வநின்
னடியிலென் முடியு வைப்பாயேல்
எவ ரும்மெனக் கெதிரிலை
முத்திவீ டென்னுடை யதுகண்டாய்
தாவ ரும்பொழிற் றணிகையங்
கடவுளே சரவண பவகோவே. 9

வேயை வென்றதோட் பாவையர்
படுகுழி விழுந்தலைந் திடுமிந்த
நாயை யெப்படி யாட்கொள
லாயினு நாதநின் செயலன்றே
தாயை யப்பனைத் தமரினை
விட்டுனைச் சார்ந்தவர்க் கருள்கின்றோய்
மாயை நீக்கிநல் லருள்புரி
தணிகைய வந்தரு ளிந்நாளே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

## 8. கருணைமாலை

### கலி விருத்தம்

**சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க**

சங்க பாணியைச் சதுமு கத்தனைச்
செங்க ணாயிரத் தேவர் நாதனை
மங்க லம்பெற வைத்த வள்ளலே
தங்க ருட்டிருத் தணிகை யையனே. 1

ஐய னேநினை யன்றி யெங்கணும்
பொய்ய னேற்கொரு புகலி லாமையால்
வெய்ய னேனென வெறுத்து விட்டிடேல்
மெய்ய னேதிருத் தணிகை வேலனே. 2

வேலன் மாதவன் வேத னேத்திடும்
மேலன் மாமயின் மேல னன்பருட்
சால நின்றவன் றணிகை நாயகன்
வால நற்பத வைப்பே னெஞ்சமே. 3

நெஞ்ச மேயிஃ தென்னை நின்மதி
வஞ்ச வாழ்வினின் மயங்கு கின்றனை
தஞ்ச மென்றருட் டணிகை சார்தியேற்
கஞ்ச மாமலர்க் கழல்கி டைக்குமே. 4

கிடைக்குண் மாழ்கியே கிலஞ்செ யந்தகன்
படைக்குட் பட்டிடும் பான்மை யெய்திடேன்
தடைக்குட் பட்டிடாத் தணிகை யான்பதத்
தடைக்க லம்புகுந் தருள்செ ழிப்பனே. 5

செழிக்குஞ் சீர்த்திருத் தணிகைத் தேவநின்
கொழிக்கு நல்லருள் கொள்ளை கொள்ளவே
தழீச்கொண் டன்பரைச் சார்ந்தி லேனிவண்
பழிக்குள் ளாகுமென் பான்மை யென்னையோ. 6

என்னை யென்னையீ தென்றன் மாதவம்
முன்னை நன்னெறி முயன்றி லேனைநின்
பொன்னை யன்னதாள் போற்ற வைத்தனை
அன்னை யென்னுநற் றணிகை யண்ணலே. 7

அண்ணி லேனினை யைய நின்னடி
எண்ணி லேனிதற் கியாது செய்குவேன்
புண்ணி னேன்பிழை பொறுத்துக் கோடியால்
தண்ணி னீள்பொழிற் றணிகை யப்பனே. 8

அப்ப னென்னுடை யன்னை தேசிகன்
செப்ப னென்குலத் தெய்வ மானவன்
துப்ப னென்னுயிர்த் துணைவன் யாதுமோர்
தப்பி லன்பர்சேர் தணிகை வள்ளலே. 9

வள்ள லுன்னடி வணங்கிப் போற்றவென்
உள்ள மென்வசத் துற்ற தில்லையால்
எள்ள லையவோ வேழை யென்செய்கேன்
தள்ள ரும்பொழிற் றணிகை வெற்பனே. 10

வெற்ப னேதிருத் தணிகை வேலனே
பொற்ப னேதிருப் போரி நாதனே
கற்ப மேற்பல காலஞ் செல்லுமால்
அற்ப னேன்றுயர்க் களவு சாற்றவே. 11

சாறு சேர்திருத் தணிகை யெந்தைநின்
ஆறு மாமுகத் தழகை மொண்டுகொண்
டூறில் கண்களா லுண்ண வெண்ணினேன்
ஈறி லென்னுடை யெண்ண முற்றுமோ. 12

முற்று மோமன முன்னி நின்பதம்
பற்று மோவினைப் பகுதி யென்பவை
வற்று மோசுக வாழ்வு வாய்க்குமே
சற்று மோர்கிலேன் தணிகை யத்தனே. 13

அத்த னேதணி காச லத்தருள்
வித்த னேமயின் மேற்கொள் வேலனே
பித்த னேன்பெரும் பிழைபொ றுத்திடிற்
சுத்த வன்பர்கள் சொலவ ரேதமே. 14

ஏதிலா ரென வெண்ணிக் கைவிடில்
நீதி யோவெனை நிலைக்க வைத்தவா
சாதி வான்பொழிற் றணிகை நாதனே
ஈதி நின்னரு ளென்னும் பிச்சையே. 15

பிச்சை யேற்றவன் பிள்ளை நீயெனில்
இச்சை யேற்றவர்க் கியாது செய்குவாய்
பச்சை மாமயிற் பரம நாதனே
கச்சி நேர்தணி கைக்க டம்பனே. 16

கடப்ப மாமலர்க் கண்ணி மார்பனே
தடப்பெ ரும்பொழிற் றணிகைத் தேவனே
இடப்ப டாச்சிறி யேனை யன்பர்கள்
தொடப்ப டாதெனிற் சொல்வ தென்கொலோ. 17

என்சொல் கேளினை யெண்ணி லற்புதம்
வன்சொ லென்பிழை மதித்தி டாதவர்
இன்சொ லாலிவ ணிருத்தி யெனைநனன்
தன்சொல் செப்பருந் தணிகைத் தேவனே. 18

தேவ நேசனே சிறக்கு மீசனே
பாவ நாசனே பரம தேசனே
சாவ காசனே தணிகை வாசனே
கோவ பாசனே குறிக்கொ ளென்னையே. 19

குறிக்கொ ளன்பரைக் கூடு றூதவிவ்
வெறிக்கொ ளூமினை வேண்டி யையநீ
முறிக்கொள் வாய்கொலோ முனிகொள் வாய்கொலோ
நெறிக்கொள் வோர்புகழ் தணிகை நித்தனே. 20

தணிகை மேவிய சாமி யேநினை
எணிகை விட்டிடே லென்று தோத்திர
மணிகை நின்னடிக் கயர்ந்து நின்றுவீண்
கணிகை போலெனைக் கலக்கி றுள்ளமே. 21

உள்ள நெக்குவிட் டுருகுமன்பர்தந்
நள்ள கத்தினி னடிசகுஞ் ஜோதியே
தள்ள ருந்திறற் றணிகை யானந்த
வெள்ள மேமனம் விள்ளச செய்வையே. 22

செய்வ தன்றவன் சிறிய னென்றெனை
வைவ ரன்பாக ளென்னின் மத்தனேன்
உய்வ தெவ்வணம் முறைசெ யத்தனே
சைவ நாதனே தணிகை மன்னனே. 23

மன்னு நின்னருள் வாய்ப்ப தின்றியே
இன்னு மிந்துய ரேய்க்கி லென்செய்கேன்
பொன்னி னம்புயன் போற்றும் பாதனே
தன்னி னின்றிடுந் தணிகை மேலனே. 24

மேலை வானவர் வேண்டு நின்றிருக்
காலை யென்சிரங் களிக்க வைப்பையோ
சாலை யோங்கிய தணிகை வெற்பனே
வேலை யேந்துகை விமல நாதனே. 25

வேத மாமுடி விளங்கு நின்றிருப்
பாத மேத்திடாப் பாவி யேன்றனக்
கீத லின்றுபோ வென்னி லென்செய்கேன்
சாதல் போக்குநற் றணிகை நேயனே. 26

நேய நின்புடை நின்றி டாதவென்
மாய நெஞ்சினுள் வந்தி ருப்பையோ
பேய னேன்பெரும் பிழைபொ றுத்திடத்
தாய நின்கடன் தணிகை வாணனே. 27

வாணு தற்பெரு மாட்டி மாரொடு
காணு தற்குனைக் காதல் கொண்டனன்
ஏணு தற்கென தெண்ண முற்றுமோ
மாணு தற்புகழ்த் தணிகை வண்ணனே. 28

வண்ண னேயருள் வழங்கும் பன்னிரு
கண்ண னேயயிற் கரங்கொ ளையனே
தண்ண னேதிருத் தணிகை வேலனே
திண்ண மீதருள் செய்யுங் காலமே. 29

கால்கு றித்தவென் கருத்து முறறியே
சால்வ ளத்திருத் தணிகை சார்வனென்
மால்ப கைப்பிணி மறி போடவே
மேல்கு றிப்பனால் வெற்றிச் சங்கமே. 30

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

---

## 9. மருண்மாலை விண்ணப்பம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

சொல்லும் பொருளு மாய்நிறைந்த
சுகமே யன்பர் துதித்துணையே
புல்லும் புகழ்சேர் நற்றணிகைப்
பொருப்பின் மருந்தே பூரணமே
அல்லும் பகலு நின்னை
மந்தோ நினைந்துன் னாளாகேன்
கல்லும் பொருவா வன்மனத்தாற்
கலங்கா நின்றேன் கடையேனே. 1

கடையேன் வஞ்ச நெஞ்சகத்தாற்
கலுழ்கின் றேனின் திருக்கருணை
அடையே னவமே திரிகின்றே
னந்தோ சிறிது மறிவில்லேன்
விடையே றீசன் புயம்படுமுன்
விரைத்தாட் கமலம் பெறுவேனோ
கொடையே ரருளைத் தருமுகிலே
கோவே தணிகைக் குலமணியே. 2

மணியே யடியேன் கண்மணியே
மருந்தே யன்பர் மகிழ்ந்தணியும்
அணியே தணிகை யரசேசெந்
தேனே யமுதே யென்ற னருயிரே
பிணியேய் துயரால் வருந்திமனப்
பேயா லலைந்து பிறழ்கின்றேன்
தணியேன் தாகம் நின்னருளைத்
தருதி லிலையேற் றாழ்வேனே. 3

தாழ்வேன் வஞ்ச நெஞ்சகற்பாற்
சார்வேன் றனக்குன் னருள்தந்தால்
வாழ்வே னிலையே லென்செய்கேன்
வருத்தம் பொறுக்க மாட்டேனே
ஏழ்வே தனையுங் கடந்தவர்தம்
இன்பப் பெருக்கே யென்னுயிரே
போழ்வேற் கரங்கொள் புண்ணியனே
புகழ்சேர் தணிகைப் பொருப்பரசே. 4

அரைசே யடியர்க் கருள்குகனே
அண்ணா தணிகை யையாவே
விரைசேர் கதம்ப மலர்ப்புயனே
வேலா யுதக்கை மேலோனே
புரைசேர் மனத்தால் வருந்தியுன்றன்
பூம்பொற் பதத்தைப் புகழ்கில்லேன்
தரைசேர் வாழ்விற் றயங்குகின்றே
னந்தோ நின்று தனியேனே. 5

தனியே துயரில் வருந்திமனஞ்
சாம்பி வாழ்க்கைத் தலைப்பட்டிங்
கினியே துறுமோ வென்செய்கே
னென்றே நின்றேற் கிரங்காயோ
கனியே பாகே கரும்பேயென்
கண்ணே தணிகைக் கற்பகமே
தனியேய் பிறவி தனையகற்றுந்
துணையே ஜோதிச சுகக்குன்றே. 6

குன்றே மகிழ்ந்த குணக்குன்றே
கோவே தணிகைக் குருபரனே
நன்றே தெய்வ நாயகமே
நவிலற் கரிய நல்லுறவே
என்றே வருவா யருட்டுருவா
யென்றே புலம்பி யேங்குற்றேன்
இன்றே காணப் பெறிலெந்தா
யிறவேன் பிறவே னிருப்பேனே. 7

இருப்பேன் றுயர்வாழ் வினிலெனினு
மெந்தாய் நினது பதங்காணும்
விருப்பே னயன்மான் முதலோரை
வேண்டே னருளை வேண்டாயோ
திருப்பே ரொளியே யருட்கடலே
தெள்ளா ரமுதே திருத்தணிகைப்
பொருப்பே மகிழ்ந்த புண்ணியமே
புனித ஞான போதகமே. 8

போதா னந்த வருட்கனியே
புகலற் கரிய பொருளேயென்
நாதா தணிகை மலையரசே
நல்லோர் புகழு நாயகனே
ஓதா தவமே வருந்தயரா
லுழன்றே பிணியி லுலைகின்றேன்
ஏதா முனதின் னருளீயா
திருந்தா லந்தோ வெளியேற்கே. 9

எளியே னினது திருவருளுக்
கெதிர்நோக் குற்றே யிரங்குகின்ற
களியே னெனைநீ கைவிட்டாற்
கருணைக் கில்போ கற்பகமே
அளியே தணிகை யருட்சுடரே
யடிய ருறவே யருண்ஞானத்
தளியே யமையு மெனக்கெந்தாய்
வாவென் றொருசொற் சொல்லாயே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## 10. பொறுக்காப்பத்து

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மெய்யரு ளகத்தின் விளங்குநின் பதமாம்
விரைமலர்த் துணைதனை விரும்பாப்
பொய்யர்தம் மிடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஐயரு மிடப்பா லம்மையு மருந்தி
அளித்திடுந் தெள்ளிய வமுதே
தையலர் மயக்கற் றவர்க்கருள் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 1

நன்மைய வெல்லா மளித்திடு முனது
நளினமா மலரடி வழுத்தாப்
புன்மைய ரிடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
சின்மயப் பொருணின் றொண்டர்பால் நாயேன்
சேர்ந்திடத் திருவருள் புரிவாய்
தன்மயக் கற்றோர்க் கருள்தரும் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 2

மருளிலா தவர்கள் வழுத்துநின் னடியை
மனமுற நினைந்தகத் தன்பாம்
பொருளிலா தவரா லேழையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
அருளெலாந் திரண்ட வானந்த வுருவே
அன்பர்பா லிருந்திட வருளாய்
தரளவான் மழைப்பெய் திடுந்திருப் பொழில்சூழ்
தணிகைவாழ் சரவண பவனே. 3

நிலைபெறு நின்றன் மலரடிக் கன்பு
நிகழ்ந்திட நாடொறு நினையாய்
புலையர்தம் இடத்தில் புன்மையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
மலையர சீன்ற மரகதக் கொம்பர்
வருந்தியீன் றெடுத்திடா மணியே
தலையர சளிக்க விந்திரன் புகழுந்
தணிகைவாழ் சரவண பவனே 4

வல்லிருட் பவந்திர் மருந்தெனு நினது
மலரடி மனமுற வழுத்தாப்
புல்லர்தம் மிடமிப் பொய்யனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
நல்லயி னெனைமீட் டுன்னடி யவர்பால்
உற்றுவாழ்ந் திடச்செயி னுய்வேன்
சல்லமற் றவர்கட் கருள்தரும் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 5

கற்பிலா ரெனினு நினைந்திடி லருள்நின்
கருணையஞ் சடடிக் கன்பாம்
பொற்பிலா தவர்பா லேழையேன் புகுதல்
பொறுக்கிலேன் பொறுக்கிலென் கண்டாய்
அற்பிலே னெனினு மென்பிழை பொறுத்துன்
அடியர்பாற சேர்த்திடி னுய்வேன்
தற்பரா பரமே சற்குரு பதியே
தணிகைவாழ் சரவண பவனே. 6

பத்திகொள் டவருட் பரவிய வொளியாம்
பரஞ்சுடர் நிலையடி பணியும்
புத்திகொள் பவர்பா லெளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
நித்திய வடிவத் தற்புதன் கூட்ட
நினைந்திடி லிப்புறா மையமே
சத்திசெங் கரத்திற் றரித்திடு மமுதே
தணிகைவாழ் சரவண பவனே. 7

நீற்றணி விளங்கு மவர்க்கருள் புரியும்
நின்னடிக் கமலங்கள் நினைந்தே
போற்றிடா தவர்பாற் பொய்யனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஆற்றல்கொள் நின்பொன் னடியருக் கடிய
னாச்செயி லுய்குவ னமுதே
சாற்றிடும் பெருமைக் களவிலா தோங்குந்
தணிகைவாழ் சரவண பவனே. 8

பரிந்திடு மனத்தோர்க் கருள்செயு நினது
பாததா மரைகளுக் கன்பு
புரிந்திடா தவர்பா லெளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
தெரிந்திடு மன்ப ரிடமுறி லுய்வேன்
திருவுள மறிகிலன் றேனே
சரிந்திடுஞ் சருத்தோர்க் கரியநற் புகழ்கொள்
தணிகைவாழ் சரவண பவனே. 9

எண்ணுறு மவர்கட் கருளுநின் னடியை
ஏத்திடா தழிதருஞ் செல்வப்
புண்ணுறு மவர்பா லெளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
கண்ணுறு பணியா நின்னடி யவர்பாற்
கலந்திடி லுய்குவன் கரும்பே
தண்ணுறுங் கருணைத் தனிப்பெருங் கடலே
தணிகைவாழ் சரவண பவனே. 10

திருச்சிற்றம்பலம்

# 11. வேட்கை விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவஷண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

மன்னே யென்ற னுயிர்க்குயிரே
மணியே தணிகை மலைமருந்தே
அன்னே யென்னை யாட்கொண்ட
அரசே தணிகை ஐயாவே
பொன்னே ஞானப் பொங்கொளியே
புனித வருளே பூரணமே
என்னே யெளியேன் துயருழந்த
தெண்ணி யிரங்கா திருப்பதுவே. 1

இரங்கா நின்றிங் கலைதருமிவ்
வெளியேன் கனவி னிடத்தேனும்
அரங்கா வரவி னடித்தோனு
மயனுங் காண்டற் கரிதாய
உரங்கா முறுமா மயின்மேனின்
னுருவந் தரிசித் துவப்படையும்
வரங்கா தலித்தேன் தணிகைமலை
வாழ்வே யின்று வருவாயோ. 2

வருவா யென்று நாடோறும்
வழிபார்த் திரங்கி மனந்தளர்ந்தேன்
கருவாய் பவனென் றெனைத்தள்ளக்
கருது வாயோ வன்றியருள்
உருவாய் வந்து தருவாயோ
தணிகா சலத்து ளுற்றமர்ந்த
ஒருவா வுன்றன் றிருவுளத்தை
யுணரே னென்செய் துய்கேனே. 3

உய்யும் பொருட்டுன் றிருப்புகழை
யுரையே னந்தோ வுரைக்கடங்காப்
பொய்யுங் களவு மழுக்காறும்
பொருளாக் கொண்டேன் புலையேனை
எய்யும் படிவந் தடர்ந்தியம
னிழுத்துப் பறிக்கி லென்னேயான்
செய்யும் வகையொன் றறியேனே
தென்பாற் றணிகைச் செஞ்சுடரே. 4

செஞ்சொற் சுவையே மெய்ஞ்ஞானச்
செல்வப் பெருக்கே தெள்ளமுதே
விஞ்சைப் புலவர் புகழ்தணிகை
விளக்கே துளக்கில் வேலோனே
வெஞ்சொற் புகலும் வஞ்சகர்பான்
மேவி நின்றுன் மலர்மறந்தே
பஞ்சிற் றமியேன் படும்பாட்டைப்
பார்த்தும் அருட்கண் பார்த்திலையே. 5

பார்க்கின் றிலையே பன்னிருகண்
படைத்து மெளியேன் பாடனைத்துந்
தீர்க்கின் றிலையே யென்னேயான்
செய்வேன் சிறியேன் சீமானே
போர்க்குன் றெடுசூர் புயக்குன்றும்
பொடிசெய் வேற்கைப் புண்ணியனே
சீர்க்குன் றெனுநல் வளத்தணிகைத்
தேவே மயிலூர் சேவகனே. 6

சேவற் கொடிகொள் குணக்குன்றே
சிந்தா மணியே யாவர்கட்குங்
காவற் பதியே தணிகைவளர்
கரும்பே கனியே கற்பகமே
மூவர்க் கிறையே யேயீன்ற
முத்த னளித்த முத்தேநற்
றேவர்க் கருணின் சேவடிக்கே
விழைந்தேன் யாதுந் தெரியேனே. 7

தெரியே னுனது திருப்புகழைத்
தேனே யுன்றன் சேவடிக்கே
பரியேன் பணியேன் கூத்தாடேன்
பாடேன் புகழைப் பரவசமாய்த்
திரியேன் றணிகை தனைக்காணேன்
சாகே னேகேன் கும்பிக்கே
உரியே னந்தோ வெதுகொண்டிங்
குய்கேன் யாது செய்கேனே. 8

செய்வ துனது திருவடிக்காந்
திறனே சிந்தை நினபாலே
வைவ துன்னை நினையாத
வஞ்ச கரையே வழுத்திநிதம்
உய்வ துனது திருநாம
மொன்றைப் பிடித்தே மற்றொன்றால்
எய்வ தறியேன் றிருத்தணிகை
யெந்தா யெந்தா யெளியேனே. 9

எளியே னினது சேவடியா
 மின்ப நறவை யெண்ணியெண்ணி
அளியே னெஞ்சமு சற்றேனு
 மன்பொன் றில்லே னதுசிறிதும்
ஒளியே னெந்தா யென்னுள்ளத்
 தொளித்தே யெவையு முணர்கின்றாய்
வளியே முதலாய் நின்றநளு
 மணியே தணிகை வாழ்மன்னே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 12. ஆறெழுத்துண்மை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

**சிவசண்முக சிவஞானதேசிகள் திருவடி வாழ்க**

பெருமை நிதியே மால்விடைகொள்
 பெம்மான் வருந்திப பெறும்பேறே
அருமை மணியே தணிகைமலை
 அமுதே யுன்றன் ஆறெழுத்தை
ஒருமை மனத்தி னுச்சரித்திங்
 குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
இருமை வளனு மெய்துமிட
 ரென்ப தொன்று மெய்தாதே. 1

எய்தற் கரிய வருட்சுடரே
 யெல்லாம வல்ல விறையோனே
செய்தற் கரிய வளத்தணிகைத்
 தேவே யுன்றன் ஆறெழுத்தை
உய்தற் பொருட்டிங குச்சரித்தே
 உயர்ந்த திருவெண் ணீறிட்டால்
வைதற கில்லாப் புகழ்ச்சிவரும்
 வன்க ணொன்றும் வாராதே. 2

வாரா விருந்த வடியவர்தம்
மனத்தி லொளிரு மாமணியே
ஆரா வமுதே தணிகைமலை
யரசே யுன்ற னாறெழுத்தை
ஓரா மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஏரார் செல்வப் பெருக்கெனவா
யிடும்பை யொன்று மிகந்திடுமே. 3

இகவா வடியர் மனத்தூறு
மின்பச் சுவையே யெம்மானே
அகவா மயிலூர் திருத்தணிகை
யரசே யுன்ற னாறெழுத்தை
உகவா மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
சுகவாழ் வின்ப மதுதுன்னுந்
துன்ப மொன்றுந் துன்னாதே. 4

துன்னு மறையின் முடிவிலொளிர்
தூய விளக்கே சுகப்பெருக்கே
அன்னை யனையாய் தணிகைமலை
அண்ணா வுன்ற னாறெழுத்தை
உன்னி மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
சென்னி யணிபா யடியோருந்
தீமை யொன்று சேராதே. 5

சேரு முக்கட் கனிசனிந்த
தேனே ஞானச் செழுமணியே
யாரும் புகழூர் தணிகையெம
தன்பே யுன்ற னைம்தெழுத்தை
ஓரு மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
பாரும் விசும்பும பதஞ்சாரும்
பழங்க ணென்றுஞ் சாராதே.

சார்ந்த வடியார்க் கருளளிக்குந்
தரும்மக் கடலே தற்பரமே
வார்ந்த பொழில்சூழ் திருத்தணிகை
மணியே யுனற னைம்தெழுத்தை
ஓர்ந்து மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
ஆர்ந்த ஞான முறுமெழியா
வலக்க ணென்று மழிந்திடுமே.

அழியாப் பொருளே யென்னுயிரே
அயில்செங் கரங்கொ ளையாவே
கழியாப் புகழ்சேர் தணிகையமர்
கந்தா வுன்ற னைம்தெழுத்தை
ஒழியா மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டாற
பழியா வின்ப மதுபதியும்
பனிமை யொன்றும் பதியாதே.

பதியே யெங்கு நிறைந்தருளும்
பரம சுகமே பரஞ்சுடரே
கதியே யளிக்குந் தணிகையமர்
கடம்பா வுன்ற னுறெழுத்தை
யுதியோ மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
றுதியோர் நினது பதந்தோன் றுந்
துன்ப மொன் றுந் தோன் றுதே. 9

தோன்று ஞானச் சின்மயமே
தூய சுகமே சுயஞ்சுடரே
ஆன்றோர் புகழுந் தணிகைமலை
அரசே யுன் ற னுறெழுத்தை
ஊன்று மனத்தி னுச்சரித்திங்
குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஈன்றுள் ணிகரும மருளடையு
மிடுக்க ணென் றும் அடையாதே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

---

## 13. போக்குரையீடு

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞான தேசிகள் திருவடி வாழ்க

கற்கி லேனுன தருட்பெய
ராங்குக கந்தவென் பவைநாளும்
நிற்கி லேனுன தாகம
நெறிதனி னீசனே னுய்வேனே
சொற்கி லேசமி லடியவ
ரன்பினுட் டோய்தரு பசுந்தேனே
அற்கி லேர்தருந் தணிகையா
ரமுதமே யானந்த வருட்குன்றே. 1

பாவ வாழ்க்கையிற் பாவியேன்
    செய்திடும் பண்பிலாப் பிழைநோக்கித்
தேவ ரீர்மன திரக்கமுற
    றேயருள் செய்திடா திருப்பீரேற்
காவ லாகிய கடும்பிணித்
    துயரமிக் கடையனேன் றனக்கின்னும்
யாவ தாகுமோ வென்செய்கோ
    வென்செய்கோ வியலும்வேற் கரத்தீரே. 2

சேவி யாதவென் பிழைகளை
    யென்னுளே சிறிதறி தரும்போதோ
பாவி யேன்மனம் பகீலென
    வெதும்பியுட் பதைத்திடக் காய்கின்றேன்
ஆவி யேயரு ளமுதமே
    நின்றிரு வருடனக் கென்னுமோ
பூவி னாயகன் போற்றிடுந்
    தணிகையெம் பொருப்பமர்ந் திடுவாழ்வே. 3

துன்பி னுலகம் வெதும்பினைந்
    தயர்ந்துநின் றுணையடி மலரேத்தும்
அன்பி லாதவிப் பாவியேன்
    செய்பிழை யனைத்தையும் பொறுப்பாயேல்
வன்பி லாதநின் னடியவர்
    தந்திரு மனத்தினுக் கென்னுமோ
இன்பி னாற்சுரர் போற்றிடுந்
    தணிகைவா ழிறைவனே யெம்மானே. 4

என்செய் கேனினுந் திருவருள்
காண்கிலே னெடுக்கருந் துயருண்டேன்
கன்செய் பேய்மனக் கடையனே
னென்னினுங் காப்பதுன் கடனன்றோ
பொன்செய் குன்றமே பூரண
ஞானமே புராதனப் பொருள்வைப்பே
மன்செய் மாணிக்க விளக்கமே
தணிகைவாழ் வள்ளலே மயிலோனே.

மண்ணி னண்ணிய வஞ்சகர்
பாற்கொடு வயிற்றினா லலைப்பட்டேன்
கண்ணி னண்ணருங் காட்சியே
நின்றிருக் கடைக்கணோக் கருணோக்கி
யெண்ணி யெண்ணிநெஞ் சழிந்துகண்
ணீர்கொளு மேழையேன் றனக்கின்னும்
புண்ணி னண்ணிய வேலனந்
துயருறிற் புலையனென் செய்கேனே. 6

மலங்கி வஞ்சகர் மாட்டிரந்
தையகோ வருந்திநெஞ் சயர்வுற்றேன்
கலங்கி நின்றிருக் கருணையை
விழையுமென் கண்ணருள் செய்யாயோ
இலங்கி யெங்கணு நிறைந்தரு
ளின்பமே யெந்தையே யெந்தாயே
நலங்கி ளர்ந்திடுந் தணிகையெம்
பதியமர் நாயக மணிக்குன்றே.

சைவ நாயக சம்பந்த
 னாகிய தமிழருட் குன்றேயென்
றெய்வ மேநினை யன்றியோர்
 துணையிலேன் றிருவரு ளறியாதோ
வைவ தேகொளும் வஞ்சகர்
 தம்மிடை வருந்திநெஞ் சழிகின்றேன்
செய்வ தோர்கிலேன் கைவிடி
 லென்செய்வேன் றெளிவிலாச் சிறியேனே. 8

வாழ்வி லாஞ்சிறு களிப்பினு
 லுன்றனை மறந்திறு மாக்கின்றேன்
தாழ்வி லேசிறி தெண்ணினோந்
 தயர்வனென் றன்மைநன் றருளாளா
கேழ்வி மேவிய வடியவர்
 மகிழ்வுறக் கிடைத்தருள் பெருவாழ்வே
வேழ்வி யோங்கிய தணிகைமா
 மலைதனில் விளங்கிவீற் றிருப்போனே. 9

என்று மாதர்மே லிச்சைவைத்
 துன்றனை யெண்ணுவேன் றுயருற்றுக்
கன்று நெஞ்சகக் கள்வனே
 னன்பினைக் கருத்திடை யெணிற்சால
நன்று நன்றெனக் கெவ்வணம்
 பொன்னரு ணல்குவை யறிகில்லேன்
துன்று மாதவர் போற்றிடுந்
 தணிகைவாழ் சோதியே சுகவாழ்வே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

---

# 14. பணித்திறம் வேட்டல்

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நண்ணேனோ மகிழ்வினொடுந் திருத்தணிகை
மலையதனை நண்ணி யென்றன்
கண்ணேநீ யமர்ந்தபொழில் கண்குளிரக்
காணேனோ கண்டு வாரி
உண்ணேனோ ஆனந்தக் கண்ணீர்கொண்
டாடியுனக் குகப்பாத் தொண்டு
பண்ணேனோ நின்புகழைப் பாடேனோ
வாயாரப் பாவி யேனே. 1

பாவியேன் படுந்துயருக் கிரங்கியருட்
டணிகையிலென் பால்வா வென்று
கூவிநீ யாட்கொளவே கனவேனுங்
காணேனோ குணப்பொற் குன்றே
ஆவியே யறிவேயென் னன்பேயென்
னரசேநின் னடியைச் சற்றும்
சேவியே னெனினுமெனைக் கைவிடே
லன்பர்பழிச் செப்பு வாரே. 2

வாரேனோ திருத்தணிகை வழிநோக்கி
வந்தென்கண் மணியே நின்று
பாரேனோ நின்னழகைப் பார்த்துலக
வாழ்க்கைதனிற் படுமிச் சோபந்
தீரேனோ நின்னடியைச் சேவித்தா
னந்தவெள்ளந் திளைத்தா டேனோ
சாரேனோ நின்னடியார் குழுவதனைச்
சார்ந்தவர்தாள் தலைக்கொள் ளேனோ. 3

கொள்ளேனோ நீயமர்ந்த தணிகைமலைக்
குறவெண்ணங் கோவே வந்தே
அள்ளேனோ நின்னருளை யள்ளியுண்டே
யானந்தத தழுந்தி யாடித்
துள்ளேனோ நின்றுளைத் துதியேனோ
துதித்துலகத் தொடர்பை யெல்லாந்
தள்ளேனோ நின்னடிக்கீழ்ச் சாரேனோ
துணையில்லாத் தனிய னேனே. 4

தனியேயிங் குழல்கின்ற பாவியேன்
றிருத்தணிகா சலம்வாழ் ஞானக்
கனியேநின் சேவடியைக் கண்ணாரக்
கண்டுமனங் களிப்பு றேனோ
துனியேசெய் வாழ்விலலைந் தென்னெண்ண
முடியாது சுழல்வே னாகில்
இனியேது செய்வேன்மற் றொருதுணையுங்
காணேனிவ் வேழை யேனே. 5

இவ்வேளை யருட்டணிகை யமர்ந்தருளுந்
தேவையென திருகண் ணாய
செவ்வேளை மனங்களிப்பச் சென்றுபுகழ்ந்
தானந்தத் தெளிதே னுண்டே
எவ்வேளை யும்பரவி யேத்தேனோ
அவன்பணிக ளியற்றி டேனோ
தெவ்வேளை யடர்க்கவகை தெரியாம
லுழல்றருமிச சிறிய னேனே.

சிறியேனிப் போதேகித் திருத்தணிகை
மலையமர்ந்த தேவின் பாதங்
குறியேனோ வானந்தக கூத்தாடி
யன்பர்கடங் குழாத்துட் சென்றே
அறியேனோ பொருணிலையை யறிந்தெனதென்
பதைவிடுத்திவ் வுலக மாயை
முறியேனோ உடல்புளக மூடேனோ
நன்னெறியை முன்னி யின்றே. 7

முன்னேனோ திருத்தணிகை யடைந்திடநின்
சந்நிதியின் முன்னே நின்று
மன்னேனோ பெருமருடன் வாழேனோ
நின்னடியை வாழ்த்தி டேனோ
உன்னேனோ நின்னிலையை யுலகத்தோ
ரெல்லீரு முநகே வாரும்
என்னேனோ நின்பெயரை யார்கூறி
னுலுமவர்க் கிதங்கூ றேனோ. 8

கூறேனோ திருத்தணிகைக் குற்றனடிப்
புகழதனைக் கூறி நெஞ்சாந
தேறேனோ நின்னடியார் திருச்சமுகஞ்
சேரேனோ தீராத் துன்பம்
ஆறேனோ நின்னடிய னாகேனோ
பவக்கடலை விட் டகன்றே யப்பால்
ஏறேனோ அருட்கடலி விழியேனோ
வொழியாத வின்ப மார்ந்தே. 9

தேடேனோ யென்னாத னெங்குற்றா
னெனவோடித் தேடிச் சென்றே
நாடேனோ தணிகைதனி னாயகனை
நின்னழகை நாடி நாடிக்
கூடேனோ வடியருடன் கோவேயெங்
குகனேயெங் குருவே யென்று
பாடேனோ வானந்தப் பரவசமுற்
றுன்கமலப் பதநண் ணேனோ. 10

திருச்சிற்றம்பலம்

## 15. நெஞ்சோடு புலத்தல்

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

**சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க**

வாவா வென்ன வருடணிகை
மருந்தை யென்கண் மாமணியைப்
பூவாய் நறவை மறந்தவநாள்
போக்கின் றதுவும் போதாமல்
மூவா முதலி னருட்கேலா
மூட நினைவு மின்றெண்ணி
ஆவா நெஞ்சே யெனைக்கெ
டுத்தா யந்தோ நீதானாவாயோ 1

வாயாத் துரிசற் றிடும்புலவோர்
வழுத்துந் தணிகை மலையமுதைக்
காயக் கனியை மறந்தவநாள்
கழிக்கின் றதுவும் போதாமல்
ஈயாக் கொடியர் தமக்கன்றி
யேலா நினைவு மின்றெண்ணி
மாயா வென்றன் வாள்வழித்தாய்
மனமே நீதான் வாழ்வாயோ. 2

வாழும் படிநல் லருள்புரியு
மருவுந் தணிகை மலைத்தேனைச்
சூழுங் கலப மயிலரசைத்
துதியாப் பவமும் போதாமல்
வீழுங் கொடியர் தமக்கன்றி
மேவா நினைவு மேவியின்று
தாழும் படியென் றனையலைத்தாய்
சவலை மனநீ சாகாயோ 3

காயோ மௌனநின் றவர்க்கினிய
கனியாந் தணிகைக் கற்பகத்தைப்
போயோர் கணமும் போற்றிலாய்
புன்மை புரிதாய புலங்கெட்டாய்
பேயோ வெங்குந் திரிந்தோடிப்
பேணு வென்மைப் பேணுகின்ற
நாயோ மனமே நீயுனைநா
னமயி வாளா நலிந்தேனே. 4

தேனுங் கடமுந் திகழ்தணிகைத்
தேவை நினையாய் நரக
மானு நடையி னுழல்கின்றாய்
மனமே யுன்றன் மையலகத்தால்
நானு மிடருந்தேன் பெருமாழ்மை
நாய்போ விருந்தேன் கவிரேமநீ
தானு மிழுந்தா யொளமேயுன்
றன்மை யிழிவாந் தன்மையதே. 5

தன்னை யுலகை நடத்துமருட்
சாமி தணிகை சாராமற்
பொன்னான் மண்ணாற் பூவையராற்
புலம்பி வருந்தும் புன்னெஞ்சே
உன்னா லென்ற னுயரிழந்தே
னுற்றா ரிழந்தே னுன்செயலைச்
சொன்னா னகைப்ப ரெனைவிட்டுந்
தொலையா யிங்கு நிலையாயே.

நிலைக்குந் தணிகை யென்னரசை
நீயு நினையாய் நினைப்பதையு
கலைக்குந் தொழில்கொண் டெனைக்கலக்கங்
கண்டாய் பலனென் கண்டாயே
முலைக்குங் கலைக்கும் விழைந்தவமே
முயங்கு மூட முழுநெஞ்சே
யலைக்குங் கொடிய விடநீயென்
றறிந்தேன் முன்ன மறிந்திலனே. 7

இலதை நினைப்பாய் பித்தர்கள்போ
லெங்கா நிற்பாய் தணிகையிலென்
குலதெய் வமுமாய்க் கோவாய்ச்சற்
குருவாய் நின்ற குகனருளே
நலதென் றறியா யான்செய்த
நன்றி மறந்தாய் நாணுதென்
வலதை பழித்தாய் வலதொடுநீ
வாழ்வாய் கொல்லோ வன்னெஞ்சே. 8

நெஞ்சே யுகந்த துணையெனக்கு
நீயென் றறிந்தே நேசித்தேன்
மஞ்சேர் தணிகை மலையமுதை
வாரிக் கொளும்போ தென்னுள்ளே
நஞ்சே கலந்தா யுன்னுறவு
நன்றே யினியுன் னட்பகன்றால்
உஞ்சே னிலைபோல் வன்னரகத்
துள்ளேன் கொள்ளே னென்னையுமே.

கொள்ளும் பொழில்சூழ் தணிகைமலைக்
கோவை நினையா தெனைநரகில்
தள்ளும் படிக்கோ தலைப்பட்டாய்
சகத்தின் மடவார் சூழ்மையலாங்
கள்ளுண் டந்தோ வெறிகொண்டாய்
கலைத்தா யென்னைக் கடந்தோர்கள்
எள்ளும் படிவந் தலைக்கின்றா
யெனக்கென் றெங்கே யிருந்தாயோ. 10

இருந்தா யிங்கு கண்டவிடத்
தேகா நின்றா யவ்விடத்தும்
பொருந்தாய் மீண்டும் புகுவாய்பின்
போவாய் வருவாய் புகழ்தணிகை
மருந்தாய் நின்ற குகனடியை
வழுத்தா யெனையும் வலிக்கின்றாய்
திருந்தாய் நெஞ்சே நின்செயலைச்
செப்ப வெனக்குத் திடுக்கிடுமே. 11

திருச்சிற்றம்பலம்.

## 16. புன்மை நினைந்திரங்கல்

கட்டளைக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

மஞ்சட் பூச்சின் மினுக்கி விளைநர்கண்
மயங்க வேசெயும் வாள்விழி மாதர்பாற்
கெஞ்சிக் கொஞ்சி நிறையழிந் துன்னருட்
கிச்சை நீத்துக் கிடந்தன னாயினேன்
மஞ்சுற் றோங்கும் பொழிற்றணி காசல
வள்ள லென்வினை மாற்றுத னீதியே
தஞ்சத் தால்வந் தடைந்திடு மன்பர்கள்
தம்மைக் காக்குந் தனியருட் குன்றமே. 1

முலையைக் காட்டி மயக்கியென் னாருயிர்
முற்றும் வாங்குறு முண்டைக ணன்மதி
குலையக் காட்டுங் கலவிக்கி சைந்துநின்
கோலங் காணக் குறிப்பில னாயினேன்
நிலையைக் காட்டுநல் லானந்த வெள்ளமே
நேச நெஞ்சக நின்றொளிர் தீபமே
கலையைக் காட்டு மதிதவழ் நற்றணி
காச லத்தமர்ந் தோங்கதி காரனே. 2

வஞ்ச மேகுடி கொண்டு விளங்கிய
மங்கை யர்க்கு மயலுழந் தேயவர்
நஞ்ச மேவு நயனத்திற் சிக்கிய
நாயி னேனுனை நாடுவ தென்றுகாண்
கஞ்ச மேவு மயன்புகழ் சோதியே
கடப்ப மாமலர்க் கந்த சுகந்தனே
தஞ்ச மேயென வந்தவர் தம்மையாள்
தணிகை மாமலைச் சற்குரு நாதனே. 3

பாவ மோருரு வாகிய பாவையர்
பன்னு கண்வலைப் யட்டு மயங்கியே
கோவை வாயிதழ்க் கிச்சைய தாகிநின்
குரைக ழற்கன்பு கொண்டில ஞயினேன்
மேவு வார்வினை நீக்கிய ளித்திடும்
வேல னேதணி காசல மேலனே
தேவர் தேடருஞ் சீரருட் செல்வனே
தெய்வ யானை திருமண வாளனே. 4

கரத்தைக் காட்டியே கண்களை நீட்டியே
கடைய னேனுயிர் வாட்டிய கன்னியர்
உரத்தைக் காட்டி மயக்க மயங்கினே
னுன்றன் பாத வுபயத்தைப் போற்றிலேன்
புரத்தைக் காட்டு நகையி னெரித்ததோர்
புண்ணி யற்குப் புகல்குரு நாதனே
வரத்தைக் காட்டு மலைத்தணி கேசனே
வஞ்ச னேற்கருள் வாழ்வு கிடைக்குமோ. 5

காச மேகங் கடும்பிணி சூலைமோ
காதி யாற்றந்து கண்கலக் கஞ்செயு
மோச மேநிச மென்றுபெண் பேய்களை
முன்னி னேனினை முன்னில ஞயினேன்
பாச நீக்கிடு மன்பர்கள் போலெனைப்
பாது காக்கும் பரமுனக் கையனே
தேசம் யாவும் புகழ்தணி காசலச்
செல்வ மேயருட் சிற்சுக வாரியே. 6

ஐய மேற்றுத் திரிபவ ராயினு
மாசை யாய்ப்பொரு ளீந்திட வல்லரேற்
குய்யங் காட்டு மடந்தையர் வாய்ப்பட்டுன்
கோல மாமலர்ப் பாதங் குறித்திலேன்
மையு லாம்பொழில் சூழுந் தணிகைவாழ்
வள்ளலே வள்ளி நாயக னேபுவிச்
சைய றும்பர ஞானிகள் போற்றிடுஞ்
சாமி யேயெனைக் காப்பதுன் றன்மையே. 7

கண்ணைக் காட்டி யிருமுலை காட்டிமோ
கத்தைக் காட்டி யகத்தைக் கொண் டேயழி
மண்ணைக் காட்டிடு மாய வனிதைமார்
மாலைப் போக்கிநின் காலைப் பணிவனோ
பண்ணைக் காட்டி யுருகு மடியர்தம்
பத்திக் காட்டிமுத் திப்பொரு ளீதென
விண்ணைக் காட்டுந திருத்தணி காசல
வேல னேயுமை யாளருள் பாலனே. 8

படியின் மாக்களை வீழ்த்தும் படுகுழிப்
பாவம் யாவும் பழகுறும் பாழ்ங்குழி
குடிகொ ணாற்றக் குழிசிறு நீர்தருங்
கொடிய வூற்றுக் குழிபுழுக் கொள்குழி
கடிம லக்குழி யாகுங் கருக்குழிக்
கள்ள மாதரைக் கண்டு மயங்கினேன்
ஒடிவில் சீர்த்தணி காசல நின்புக
ழோதி லேனெனக் குண்டுகொ லுண்மையே. 9

கச்சுக் கட்டிம ணங்கட்டிக் காமுகர்
கண்ணைக் கட்டி மனங்கட்டி வஞ்சகம்
வச்சுக் கட்டிய வன்கழற் கட்டியு
மண்ணின் கட்டியு மாலுமுலைக்கட்டிக்
இச்சைக் கட்டிய யிடும்பையெ னுஞ்சுமை
யேறக் கட்டிய வெற்கருள் வாய்கொலோ
பிச்சைக் கட்டிய பித்தன் புதல்வனே
பெருமை கட்டும் பெருந்தணி கேசனே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 17. திருவடி சூடவிழைதல்

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேனா ரலங்கற் குழன்மடவார்
திறத்தின் மயங்காத் திறலடைந்தற்
காணார் கொடியெம் பெருமான்ற
னருட்கண் மணியே யற்புதமே
காணார் பொழில்சூழ் திருத்தணிகைக்
கரும்பே கருணைப் பெருங்கடலே
வானா ரமுதே நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 1

தாழுங் கொடிய மடவியர்தஞ்
சழககா லுழலாத் தமையடைந்தே
ஆழும் பரமா னந்தவெள்ளத்
தழுந்திக் களிக்கும் படிவாய்ப்ப
ஊழுந் தியசீ ரன்பர்மனத்
தொளிருஞ் சுடரே யுயர்தணிகை
வாழும் பொருளே நின்றிருத்தா
ளடியேன் முடிமேல வைப்பாயே- 2

மின்னுண் மருங்குற் பேதையர்தம்
வெளிற அய மயக்குண் மேவாமேமேண்
உன்னும் பரம யோகியர்தம்
முடனே மருவி யுனைப்புகழ்வான்
பின்னுஞ் சடையெம் பெருமாற்கோர்
பேறே தணிகைப் பிறங்கலின்
மன்னுஞ் சுடரே நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 3

ஆறாத் துயரந் தருங்கொடியார்ச்
காளா யுழன்றிங் கலையாதே
கூறாப் பெருமை நின்னடியார்
கூட்டத் துடன்போய்க் குலாவும்வண்ணந்
தேறாப் பொருளாஞ் சிவத்தொழுகுந்
தேனே தணிகைத் திருமலைவாழ்
மாறாச் சுகமே நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 4

விரத மழிக்குங் கொடியார்தம்
விழியான் மெலியா துனைப்புகழுஞ்
சரத ரவையிற் சென்றுநின்சீர்
தனையே வழுத்துந் தகையடைவான்
பரத மயின்மேற் செயுந்தணிகைப்
பரனே வெள்ளிப் பருப்பதம்வாழ்
வரதன் மகனே நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 5

வெயின்மேற் கிட மெனமடவார்
வெய்ய மயற்கண் வீழாமே
அயின்மேற் கரங்கொ ணிணைப்புகழு
மடியார் சபையி னடையும்வகைக்
குயின்மேற் குலவுந் திருத்தணிகைக்
குணப்பொற் குன்றெ கொள்கலப
மயின்மேன் மணியே நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 6

தனமுங் கடந்தே நாரியர்மா
றனையுங் கடந்தே தவமழிக்கு
சினமுங் கடந்தே நினைச்சேர்ந்தோர்
தெய்வச சபையிற் சோநதிடவே
வனமுங் கடமுந் திகழ்தணிகை
மலையின் மருந்தே வாக்கினொடு
மனமுங் கடந்தோய் நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 7

கல்லாக் கொடிய மடவார்தங்
காமக் குழிக்கண் வீழாமே
நல்லார்க் கெல்லா நல்லவநின்
னாமந் துதிக்கு நலம்பெறவே
சொல்லாற் புனைந்த மாலையொடுந
தொழுது தணிகை தனைத்துதிக்க
வல்லார்க் கருளு நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 8

கள்ளக் கயற்கண் மடவார்தங்
காமத் துழலா துனைநினைக்கும்
உள்ளத் தவர்பாற் சோர்நதுமகிழ்ந்
துண்மை யுணர்ந்தங் குற்றிடுவான்
அள்ளற் பழனத் திருத்தணிகை
யரசே ஞான வமுதளிக்கும்
வள்ளற் பெருமா னின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 9

பாகைப் பொருவு மொழியுடையீ
ரென்று மடவார்ப் பழிச்சாமல்
ஓகைப் பெறுநின் றிருத்தொண்ட
ருடன்சேர்ந் துண்மை யுணர்ந்திடுவான்
தோகைப் பரிமேல் வருந்தெய்வ
சூளா மணியே திருத்தணிகை
வாகைப் புயனே நின்றிருத்தா
ளடியேன் முடிமேல் வைப்பாயே. 10

திருச்சிற்றம்பலம்

## 18. ஆற்றாவிரக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்

தணிகை மலையைச் சாரேனோ
சாமி யழகைப் பாரேனோ
பிணிகை யறையைப் பேரேனோ
பேரா வன்பு கூரேனோ
அணிசெ யருணீ ராரேனோ
வாறாத் தாகந் தீரேனோ
பணிசெய் தொழும்பிற் சேரேனோ
பார்மீ திரங்கு நீரேனே. 1

எளியே னென்ன விருப்பாரோ
வேழைக் கிரங்கும் விருப்பாரோ
வளியேன் பேர்நெஞ் சிருப்பாரோ
வழியாக் காமந் திருப்பாரோ
களியே னென்ன வுருப்பாரோ
கருது மருட்குக் கருப்பாரோ
தெளியேன் யானென் செய்கேனே
தென்பாற் றணிகைப் பொருப்பாரே. 2

செய்கொள் தணிகை நாடேனோ
செவ்வேள் புகழைப் பாடேனோ
கைகள் கூப்பி யாடேனோ
கருணைக் கடலி னீடேனோ
மெய்கொள் புளக மூடேனோ
மெய்யன் பர்கள்பாற் கூடேனோ
பொய்கொ ளுலகோ டோடேனோ
புவிமீ திருகான் மாடேனே. 3

வந்தென் னெதிரி னில்லாரோ
மகிழ வொருசொல் சொல்லாரோ
முந்தம் மதனை வெல்லாரோ
மோகந் தீரப் புல்லாரோ
கந்த னெனும்பே ரல்லாரோ
கருணை நெஞ்சங் கல்லாரோ
சந்தத் தணிகை யில்லாரோ
சகத்தி லெல்லாம் வல்லாரே. 4

**நாட்**டுந் தணிகை நண்ணேனே
நாதன் புகழை யெண்ணேனே
**கூட்**டுந் தொழும்பு பண்ணேனே
குறையா வருணீ ருண்ணேனே
**சூட்டு** மயக்கை மண்ணேனே
தொழும்ப ரிடத்தை யண்ணேனே
**காட்டு** மவர்தாள் கண்ணேனே
கழியா வாழ்க்கைப் புண்ணேனே. 5

**காமப்** பயலைத் தடுப்பாரோ
கடப்ப மலர்த்தார் கொடுப்பாரோ
**சேமத்** தனத்தைக் கடுப்பாரோ
வென்மே லன்பை விடுப்பாரோ
**மாமற்** றுருவீ டுப்பாரோ
மனதிற் கோபந் தொடுப்பாரோ
**தாமத்** தாழ்வைக் கெடுப்பாரோ
தணிகைத் தனில்வே லெடுப்பாரே. 6

**காவி** மலைக்கண் வதியேனே
கண்ணுண் மணியைத் துதியேனே
**பாவி** மயலை மிதியேனே
பரமா னந்தத் துதியேனே
**வோவி** லருளைப் பதியேனே
வுயர்ந்த தொழும்பிற் கதியேனே
**தாவில்** சுகத்தை மதியேனே
சற்றும் பயனில் லொதியேனே.

வருந்துந் தனிமுன் மன்னாரோ
வருத்த முனக்கே னென்னாரோ
இருந்தென் னிடத்தே துன்னாரோ
விணைத்தா ளீய வுன்னாரோ
பொருந்திங் கயலா ரன்னாரோ
பொருளீ தென்று பன்னாரோ
செருந்தி மலருந் திருத்தணிகைத்
தேவ ரெவர்க்கு முன்னாரே. 8

தணிகா சலம்போய்த் தழையேனே
சாமி திருத்தாள் விழையேனே
பணிகா தலித்துப் பிழையேனே
பாடி மனது குழையேனே
திணிகா னுலகை யழையேனே
சேர்ந்தவ் வீட்டு னுழையேனே
பணிகா னுலகிற் பிறந்துழன்றே
பேதுற் றலையும் பழையேனே.

மன்னுங் குவளை யீயாரோ
மதவேண் மதத்தைக் காயாரோ
இன்னுங் கோப மோயாரோ
வென்றாய் தனக்குத் தாயாரோ
துன்னு மிரக்கந் தோயாரோ
துகளேன் றுயரை யாயாரோ
பன்னும் வளங்கள் செறிந்தோங்கும்
பணைகொ டணிகைத் தாயாரே. 10

திருச்சிற்றம்பலம்

## 19. ஏழைமையினிரங்கல்.

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேனே யுளங்கொ டெளிவே யகண்ட
சிதமேவி நின்ற சிவமே
கோனே கனிந்த சிவபோத ஞான
குருவே விளங்கு குகனே
தானே தனக்கு நிகராய் விளங்கு
தணிகாச லத்தெம் மரசே
நானேழை யிங்கு மனநொந்து நொந்து
நலிகின்ற செய்கை நலமோ. 1

நலமேவு தொண்ட ரயனாதி தேவர்
நவையேக நல்கு தணிகா
சலமேவி யுன்ற னிருதாள் புகழ்ந்து
தரிசிப்ப தென்று புகலாய்
நிலமேவு கின்ற சிவயோக ருள்ள
நிகழ்கின்ற ஞான நிறைவே
வலமேவு வேல்கை யொளிசேர் கலாப
மயிலேறி நின்ற மணியே. 2

மணியே கலாப மலைமே லமர்ந்த
மதியே நினைச்சொன் மலரால்
அணியே னலன்பு மனமையேன் மனத்தி
லடியா ரடிக்கண் மகிழ்வாய்ப்
பணியே னினைந்து பதையே னிருந்து
பருகே னுவந்து படியே
யெணியே நினைக்கி லவமாமில் வேழை
யெதுபற்றி யுய்வ தரசே. 3

உய்வண்ண மின்றி யுலகாத ரத்தி
னுழல்கின்ற மாய மடவார்
பொய்வண்ண மொன்றின் மனமாழ்கி யன்மை
புரிதந்து நின்ற புலையேன்
மெய்வண்ண மொன்று தணிகாச லத்து
மிளிர்கின்ற தேவ விறல்வேற்
கைவண்ண வுன்ற னருள்வண்ண மான
கழல்வண்ண நண்ண லுளதோ. 4

நண்ணாத வஞ்ச ரிடநாடி நெஞ்ச
நனிநொந்து நைந்து நவையாம்
புண்ணாகி நின்ற வெளியேனை யஞ்சல்
புரியாது நம்பொ னடியை
எண்ணாத பாவி யிவனென்று தள்ளி
னென்செய்வ துய்வ தறியேன்
தண்ணார் பொழிற்கண் மதிவந் துலாவு
தணிகா சலத்தி றைவனே. 5

இறையேனு முன்ற னடியெண் ணியங்கி
யிழுதென்ன நெஞ்ச மிளகேன்
மறையோது முன்ற னருள் பெற்ற
தொண்டர் வழிபட்டலங்க லணியேன்
குறையோடு மிங்கு மயல்கொண்டு நின்ற
கொடியேனை யாள லுளதோ
நிறையோர் வணங்கு தணிகாச லத்தி
னிலைபெற் றிருக்கு மவனே. 6

அவநாள் கழிக்க வறிவே னலாது
னடிபேணி நிற்க வறியேன்
தவநாடு மன்ப ரொடுசேர வந்து
தணிகாச லத்தை யடையேன்
எவனோ னெனக்கு மவணீ யிருக்கு
மிடமீயி லுன்ற னடியார்
இவனாரி வன்ற னியல்பென்ன வென்னி
லெவனென் றுரைப்பை யெனையே. 7

எனையா னறிந்து னடிசேர வுன்னை
யிறையேனு நெஞ்சி னிதமாய்
நினையே னயர்ந்து நிலையற்ற தேக
நிசமென் றுழன்று துயர்வேன்
தனையே னினன்ப னெனவோதி லியாவர்
தகுமென் றுரைப்ப ரரசே
வனையோர் கொளுஞ்செய் தணிகாச லத்து
மகிழ்வோ டமர்ந்த வமுதே. 8

முதுவோர் வணங்கு தணிகா சலத்து
முதலேயிவ் வேழை முறியேன்
மதுவான் மயங்கு மளிபோன் மயங்கி
மதியாது நின்ற பிழையால்
விதுவாகி யன்ப ருளமேவு நீயென்
விடிலேழை யெங்கு மெலிவேன்
இதுநீதி யல்ல வெனவுன் றனக்குமெவர்
சொல்ல வல்ல ரரசே. 9

திருச்சிற்றம்பலம்.

## 20. ப[illegible]றஞ்சா[illegible]றிவு

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### திருச்சிற்றம்பலம்

அடுத்திலே னின்னடிய ரவைக்கூட்டஞ் சற்றும்
அன்பிலே னின்றொழும்ப னாகேன் வஞ்சந்
தடுத்திலேன் றணிகைதனிற் சென்று நின்னைத்
தரிசனஞ்செய் தேமாந்த தமிழ்ச்சொன் மாலை
தொடுத்திலே னழுதுநின் தருளை வேண்டித்
தொழுதுதொழு தானந்தத் தூய்நீ ராடேன்
எடுத்திலே னல்லனென்னும் பெயரை யந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே 1

இரப்படுவேன் மையல்புரி மாய வாழ்வில்
தியங்குவேன் சிறிதேனுந் தெளிவொன் றில்லேன்
மரப்படுவேன் சிதடருடன் றிரிவேன் வீணே
மங்கையர்தங் கண்களெனும் வலைக்குள் வீழ்வேன்
கரப்பவர்க்கு முறப்படுவேன் கருணை யில்லேன்
கண்ணனையாய் நின்றணிகை மலையைக் காணேன்
இரப்பவர்க்கோ ரணுவளவு மீயேன் பேயேன்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் விருக்கின் றேனே 2

செய்திலே னின்றொண்ட ரடிக்குற் றேவல்
திருத்தணிகை மலையைவலஞ் செய்து கண்ணீர்ப்
பெய்திலேன் புலனைந்து மொடுக்கி வீடு
பிறத்தலெனுங் கடனீக்கேன் பெண்கள் தம்மை
வைதிலேன் மலர்கொய்யேன் மாலை சூட்டேன்
மணியேயென் றிருப்புகழை வழுத்தேன் நின்பால்
எய்திலே னிவ்வுடல[illegible] பேழை யேனயான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் விருக்கின் றேனே. 3

சீர்கொண்டார் புகழ்த்தணிகை மலையிற் சேரேன்
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேனை
பேர்கொண்டா ரமைவணங்கி மகிழேன் பித்தேன்
பெற்றதே யமையுமெனப் பிறங்கேன் மாதர்
வார்கொண்டார் முலைமலைவீழ்ந் துருள்வே னாளும்
வஞ்சமே செய்திடுவேன் மதியொன் றில்லேன்
ஏர்கொண்டா ரிகழ்ந்திடவிங் கேழை யேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 4

காமாந்த காரியாய மாத ரல்குற்
கடல்வீழ்ந்தேன் மதிதாழ்ந்தேன் கவலை சூழ்ந்தேன்
நாமாந்த கனையுதைத்த நாத னீன்ற
நாயகமா மணியேநின் னலமே யுன்றன்
பூமாந்தண் சேவடியைப் போற்றே னோங்கும்
பொழில்கொள்தணி காசலத்தைப் புகழ்ந்து பாடேன்
ஏமாந்த பாவியே னந்தோ வந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 5

நன்றறியேன் தீங்களைத்தும் பறியேன் பொல்லா
நங்கையர்தங் கண்மாய நவையைச் சற்றும்
வென்றறியேன் கொன்றறிவார் தம்மைக் கூடும்
வேட்டேனன் றிருத்தணிகை வெற்பி னின்பாற்
சென்றறியே னிலையெனப் பதறிவே னொன்றுஞ்
செய்தறியேன் சிவதருமஞ் செய்வோர் நல்லோர்
என்றறியேன் வெறியேனிங் கந்தோ வந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 6

அல்லார்க்குங் குழலார் [illegible] வையேன்
　　ஐயாநின றிருததாண்மே லன்பு வையேன்
செல்லார்க்கும் பொழிற்றணிகை யெஙகே யென்று
　　தேடிடே னினபுகழைச சிநதை செயயேன்
கல்லாாகருங கடுமனததேன வனக ணேனபுன
　　கணணினே னுதவாத கையேன பொயயேன
எல்லாாகரும பொலலாத பாவி யேனயான
　　ஏனபிறநதேன் புவிசசுமையா யிருககின றேனே. 7

அரும்பாய நகைமடவாாக காளாய வாளா
　　அலைகினறே னறிவெனப தறியே னினபாற்
றிருமபாத பாதகனேன றிருவொன றிலலேன
　　திருததணிகை மலைககேகச சிநதை செயயேன
கரும்பாய வெறுததுவேம பருநதும பொலலாக
　　காககையொததேன சற்றேனுங கனிந லில்லா
இருமபாய வனனெஞசக கள்வ னேனயான
　　ஏனபிறநதேன புவிசசுமையா யிருககின றேனே. 8

அமபாத னெடுஙகணணாாக கிசசைகொளவேன
　　அகமலர முகமலாவோ டருளசெய யுனறன
செமபாத மலரேததே னிலவு காததேன
　　திருததணிகை யேநமது செலவ மெனறே
நம்பாத கொடியேனல லோரைக கணடால
　　நாணிலே னடுஙகிலே னுயிற பொலலேன
எம்பாத கததையெடுத தியாாககுச சொலவேன
　　ஏனபிறநதேன புவிசசுமையா யிருககின றேனே. 9

பண்ணேனின் பசுழ்சொல்வோர் தமக்குப் பூசை
பாட்டேனின் திருச்சீரைப் பரமனின்ற
கண்ணேனின் றணிகைதனைக் கண்டு போற்றேன்
கைகுவியேன் மெய்குளிரேன் கண்ணீர் பாயேன்
ண்ணேனல் லானந்த வமுதை யன்பா
உடனுகே னேகாந்தத் துறவோர் றேணமம
எண்ணேனவன் றுயரமணேன் மனஞ்செம் புண்ணேன்
என்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 10

திருச்சிற்றம்பலம்

## 21. காணாப்பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வரங்கொ ளடியார் மனமலரின்
மகிழ்வுற் றமர்ந்த மாமணியே
திரங்கொள் தணிகை மலைவாழுஞ்
செல்வப் பெருமைச் சிற்பரமே
கரங்கொள் முலக மயலகல
தாழ்ந்தா ளருக வழுத்தொழுந்தா
கரங்கொள் சிரத்தோ டயனுனைக்
காணக் காரக் கண்டிலனே 1

வலவி யொருபால் வானவர்தம்
மகளாண் டொருபால் வரமயின்மேல்
எலவி னிலங்கு நெடுந்தலைவே
லேந்தி வருமெய் யின்பொருளே
சொலவி யடங்காத் தாபரியாற்
றுகளோ சனைப் பெருவேரைக்
கலவி பெறிந்து நின்றுநனைக்
காணக் காரக் கண்டிலனே 2

உருத்துள் ளிகலுஞ் சூரமுதலை
யொழித்து வாழ்ந் தொண்பதியைத்
திருத்து மறைசே தென்றணிகைத்
தெய்வமணியே சிவஞானம்
அருத்து நினது திருவருள்கொண்
டாடிப் பாடி யனபதனுற
கருத்துள் ளுருகி நின்னுருவைக்
கண்க ளாரக் கண்டிலனே. 3

போத விருத்த லென்னிலையாம்
புனிதா சன்னப் போரோடு
சாத லற்றுந் திருத்தணிகைச்
சைவக் கனியே தற்பரமே
ஓத லறியா வஞ்சகாபா
லுழன்றே மாதாக் குளளுருகுங்
காத லகற்றி நின்னுருவைக்
கண்க ளாரக் கண்டிலனே 4

வீட்டைப் பெறுவோ ருள்ளகத்து
விளங்கும் விளக்கே விண்ணோர்தம்
நாட்டை நலஞ்செய் திருத்தணிகை
நகரத் தமர்ந்த நாயகமே
கேட்டைத் தருவஞ் சகவுலகிற்
கிடைத்த மாய வாழ்க்கையென்னுங்
காட்டைக் கடந்து நின்னுருவைக்
கண்க ளாரக் கண்டிலனே 5

மட்டித் தளறு படக்கடலை
மலைக்குங் கொடிய மாவுருவைச
சட்டித் தருளுந் தணிகையிலென்
தாயே தமரே சற்குருவே
யெட்டிக் கனியா மிவ்வுலகத்
திடர்விட் டகல நின்பதத்தைக்
கட்டித் தழுவி நின்னுருவைக்
கண்க ளாரக் கண்டிலனே. 6

இலக்க மறியா விருவினையா
லிம்மா னிடமொன் றெடுத்தடியேன்
விலக்க மடையா வஞ்சகர்பால்
வீணுட் போக்கி மேவிமனத்
தலக்க ணியற்றும் பொய்வாழ்வி
லலைந்தேன் றணிகை யரசேயக்
கலக்க மகன்று நின்னுருவைக்
கண்க ளாரக் கண்டிலனே. 7

விரைவாய் கடப்பந் தாரணிந்து
விளங்கும் புயனே வேலோனே
தரைவாய் தவத்தாற் றணிகையமர்
தருமக் கடலே தனியடியேன்
திரைவாய் சனனக் கடற்படிநதே
தியங்கி யலைந்தேன் சிவஞானக்
கரைவா யேறி நின்னுருவைக்
கண்க ளாரக் கண்டிலனே. 8

பள்ள வுலகப் படுகுழியிற்
பரிந்தங் குழலா தானந்த
வெள்ளத் தழுந்து மன்பர்விழி
விருந்தே தணிகை வெற்பரசே
உள்ள மகல வங்குமிங்கு
மோடியலையும் வஞ்ச நெஞ்சக்
கள்ள மகற்றி நின்னுருவைக்
கண்க ளாரச் கண்டிலனே. 9

அடலை யணிந்தோர் புறங்காட்டி
லாடும் பெருமா னளித்தருளும்
விடலை யெனவே வரும்புகழும்
வேலோய் தணிகை மேலோயே
நடலை யுலக நடையளற்றை
நண்ணு தோங்கு மானந்தக்
கடலை யடுத்து நின்னுருவைக்
கண்க ளாரக் கண்டிலனே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 22. பணித்திறஞ்சாலாமை.

### கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வஞ்சகப் பேதையர் மயக்கி லாழ்ந்துழல்
நெஞ்சகப் பாவியே னினைந்தி லேனையோ
வெஞ்சகப் போரினை விட்டு ளோர்புகழ்
தஞ்சகத் தணிகைவாழ் தரும வானையே. 1

மணிகர் கூந்தலார் வன்க ணைமிக
பணிகழ் பேதையேன் மதித்தி லேனையோ
தாணிரும் புகழ்கொளுந் தணிகை மேலருட்
டேணிருந் தொழுகிய செங்க ரும்பையே. 2

கருங்கடு நிகர்நெடுங் கண்ணி னாமபல
ஒருங்குறு மனத்தினே னுன்னி லேனையோ
தருமபுகழ் மிகுந்திடுந் தணிகை மாமலை
மருங்கமாந் தன்பருண் மன்னும் வாழ்வையே .3

மைவளர் வாட்கணார் மயக்கில் வீழ்ந்தரும்
பொய்வளர் நெஞ்சினேன் போற்றி லேனையோ
மெய்வள ரன்பர்கண் மேவி யெத்துறுஞ்
செய்வளர் தணிகையிற் செழிக்குந் தேனையே. 4

செழிப்படு மங்கையர் திய மாயையிற்
பழிப்படு நெஞ்சினேன் பாவி லேனையோ
வழிப்படு மன்பர்கள் வறுமை நீக்கியே.
பொழிற்படுந் தணிகையிற் பொதிந்த பொன்னையே. 5

பொதிதரு மங்கையர் புலைக் கொங்கைமேல்
வதிதரு நெஞ்சினேன் மதித்தி லேனையோ
மதிதரு மன்பர்தம் மனத்தி லெண்ணிய
கதிதருந் தணிகைவாழ் கற்ப கத்தையே. 6

திருச்சிற்றம்பலம்

## 23. குறை நேர்ந்த பத்து

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வான்பிறந்தார் புகழ்தணிகை மலையைக் கண்டு
வள்ளலே நின்புகழை மகிழ்ந்து கூறேன்
தேன்பிறந்த மலர்க்குழலார்க் காளா வாளா
திரிகின்றேன் புரிகின்றேன் தீமை நாளும்
ஊன்பிறந்த வுடலோம்பி யவமே வாழ்நாள்
ஒழிக்கின்றேன் பழிக்காளா யுற்றே னந்தோ
என்பிறந்தே னென்பிறந்தேன் பாவி யேன்யான்
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 1

மெய்யாவோ நற்றணிகை மலையைச் சார்ந்து
மேன்மையுறும் நின்புகழை விரும்பி யேத்தேன்
உய்யாவோ வன்னெறியேன் பயன்ப டாத
ஓதியனையே னெட்டிதனை யொத்தே னன்பர்
பொய்யாவோ டெனமடவார் போகம் வேட்டேன்
புலையனேன் சற்றேனும் புனித மில்லேன்
ஐய்யாவோ நாணுமற் பாவி யேன்யான்
யாரக்கெடுத்தென் குறைதன்னை யறைகு வேனே. 2

வாட்செல்லா நெடுங்கண்ணா மயலில் வீழ்ந்து
மனம்போன வழிசென்று வருந்கா நின்றேன்
சேட்செல்லார் வரைத்தணிகைத் தேவ தேவே
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேநான்
நாட்செல்லா நின்றதினி யென்செய் கேனே
நாயினேன் பிழைதன்னை நாடி நின்பாற்
கோட்சொல்லா நிற்பரெனி லென்னே மோவென்
குறையையெடுத் தெவர்க்கெளியேன் கூறு கேனே. 3

பொல்லாத மங்கையர்த மயற்குள் ளாகும்
புலையமனத் தால்வாடிப் புலம்பு கின்றேன்
கல்லாத பாவியென்று கைவிட் டாயோ
கருணையுரு வாகியசெங் கருமபே மேரு
வில்லான்றன் செல்வமே தணிகை மேவும்
மெய்ஞ்ஞான வொளியே யிவ்வினையேன் றுன்பம்
எல்லாநீ யறிவாயே யறிந்தும் வாரா
திருந்தாலென் குறையையெவர்க் கியம்பு கேனே. 4

முன்னறியேன் பின்னறியேன் மாதா பாலென்
மூடமன மிழுத்தோடப் பினசென் றெய்த்தேன்
புன்னெறியேன் பொய்யரொடும் பயின்றே னின்றன்
புனிதவருட் கடலாடேன் புளக மூடேன்
பொன்னரையன் றொழுதுஞசடிலப் புனித னீன்ற
புண்ணியமே தணிகைவளர் போத வாழ்வே
என்னரசே யென்னமுதே நின்பா லன்றி
எவர்க்கெடுத்தென் குறைதன்னை யியம்பு கேனே. 5

விடுமாட்டிற் றிரிந்துமட மாத ரார்தம்
வெய்யநீர்க் குழிவீழ்ந்து மீளா நெஞ்சத
தடுமாற்றத் தொடும்புலைய வுடலை யோம்பிச
சார்ந்தவர்க்கோ ரணுவளவுந் தானீ யாது
படுகாட்டிற் பலனுதவாப் பனைபோ னின்றேனை
பாவியே னுடற்சுமையைப் பலருங் கூடி
இடுகாட்டில் வைக்குங்கா லெனசெய வேனோ
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 6

மின்னனே ரிடைமடவார் மயல்செய் கின்ற
வெங்குழியில் வீழ்ந்தழுந்தி வெறுத்தேன் போலப்
பின்னையே யெழுந்தெழுந்து மீட்டும் மீட்டும்
பேய்போல வீழ்ந்தாடி மயற்குண் மூழ்கிப்
பொன்னையே யொத்தவுன தருளை வேண்டிப்
போற்றாது வீணோநாட் போக்கு கின்ற
என்னையே யான்சிரிப்பே னாகி லந்தோ
என்குறையை யெவாக்கெடுத்திங் கியம்பு கேனே. 7

மூலையொருபான் முகமொருபால் காட்டும் பொல்லா
மூடமட வாரகடமை முயங்கி நின்றேன்
இலையொருபா லனமொருபான் மலஞ்சோத துண்ணு
மேழைமதி யேன்றணிகை யேந்த லேபொன்
மலையொருபால் வாங்கியசெவ் வண்ண மேனி
வள்ளல்தரு மருந்தேநின மலர்த்தா ளேத்தேன்
புலையொருவா வஞசகநேஞ் சுடையே னென்றன்
புன்மைதனை யெவாகெடுத்துப் புகலுவேனே. 8

வேய்ப்பான்மென் றோணமடவார் மறைக்கு மாய
வெம்புழசசா வெடிப்பினிடை வீழ்ந்து நின்றேன்
தாயப்பாலை யுண்ணாது நாய்ப்பா லுண்ணுந்
தகையனேன திருத்தணிகை தன்னைச சார்ந்து
ஆய்ப்பாலை யொருமருங்கா னீன்ற செல்வத
தாரமுதே நினனருளை யடையேன கணடாய
எய்ப்பாலை நடுங்கருங்கல போனின் றெய்தேதன்
என்குறையை யெவாக்கெடுத்திங் கியம்பு கேனே. 9

வஞ்சமட மாதரார் போக மென்னும்
மலத்தினிடைக் கிருமியென வாளா வீழ்ந்தேன்
கஞ்சமலர் மனையானு மாலுந் தேடக்
காணாத செங்கனியிற் கனிந்த தேனே
தஞ்சமென்போர்க் கருள்புரியும் வள்ள லேஎற்
றணிகைவரைச் சேயுனது தாளைப் போற்றேன்
எஞ்சலிலா வினைச்சேம விடமா யுற்றேன்
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 24. முறையிட்ட பத்து

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொன்னைப் பொருளா நினைப்போர்பாற்
போந்து மிடியா லிரந்தலுத்தேன்
நின்னைப் பொருளென் றுணராத
நீச னினியோர் நிலைகாணேன்
மின்னைப் பொருவுஞ் சடைப்பவள
வெற்பில் விளைந்த வியன்கரும்பே
முன்னைப் பொருளே தணிகையனே
முறையோ முறையோ முறையேயோ. 1

மக்கட் பிறவி யெடுத்துமுனை
வழுத்தாக் கொடிய மரமனையேன்
துக்கக் கடலில் வீழ்ந்துமனஞ்
சோர்கின் றேனோர் துணைகாணேன்
செக்கர்ப் பொருவு வடிவேற்கைத்
தேவே தெவிட்டாத் தெள்ளமுதே
முக்கட் கரும்பின் முழுமுத்தே
முறையோ முறையோ முறையேயோ. 2

அன்பி னுனது திருவடிக்கே
யாளாய்த் தொண்டொன் ருற்றுதே
துன்பி னுடையோர் பாலணுகிச
சோர்ந்தே னினியோர் துணைகாணேன்
என்பின் மலிந்த மாலைபுனை
யெம்மான் றந்த பெம்மானே
முன்பி னடுவாய் முளைத்தோனே
முறையோ முறையோ முறையேயோ. 3

அருகா மலத்தி னலைநதிரக்க
மறியா வஞ்ச நெஞ்சகர்பால்
உருகா வருந்தி யுழன்றலைந்தே
னுன்று என்றித் துணைகாணேன்
பெருகா தரவிற் சிவன்பெறுநற்
பேறே தணிகைப் பெருவாழ்வே
முருகா முகமூ விரண்டுடையாய்
முறையோ முறையோ முறையேயோ. 4

பொன்னின் றெளிரு மாாபனயன்
போற்று முன்ருட் புகழ்மறந்தே
கன்னின் றணங்கு மனத்தார்பாற
கனிநதே னினியோர் துணைகாணேன்
மின்னின் றிலங்கு சடைக்கனியுள்
விளைநத நறவே மெய்யடியர்
முன்னின் றருளுந் தணிகையனே
முறையோ முறையோ முறையேயோ. 5

வெதிருள் ளவரின் மொழிகேளா
வீண ரிடம்போய் மிகமெலிந்தே
அதிருங் கழற்சே வடிமறந்தே
னந்தோ வினியோர் துணைகாணேன்
எதிருங் குயின்மேற் றவழ்தணிகை
யிறையே முக்க ணியற்கனியின்
முதிருஞ் சுவையே முதற்பொருளே
முறையோ முறையோ முறையேயோ. 6

ஈனத் திவறு மனக்கொடியோ
ரிடம்போய் மெலிந்து நாடோறும்
ஞானத் திருத்தாட் டுணைசிறிது
நாடே னினியோர் துணைகாணேன்
தானத் தறுகண் மலையுரியின்
சட்டை புனைந்தோன் றரும்பேறே
மோனத் தவர்த மகவிளக்கே
முறையோ முறையோ முறையேயோ. 7

தேவே யெனநிற் போற்றாத
சிறிய ரிடம்போய்த் தியங்கியென்றன்
கோவே நின்றன் றிருத்தாளைக்
குறிக்க மறந்தேன் துணைகாணேன்
மாவே முத்தி னுரிபுனைந்த
வள்ளற் கினிய மகப்பேறே
மூவே தனையை யறுத்தருள்வோய்
முறையோ முறையோ முறையேயோ. 8

வேதா நந்த னெடுபோற்றி
மேவப் படுநின் பதமறந்தே
யீதா னந்தந் திடுவீரென்
றீன ரிடம்போ யிரந்தலைந்தேன்
போதா னந்தப் பரசிவத்திற்
போந்த பொருளே பூரணமே
மூதா னந்த வாரிதியே
முறையோ முறையோ முறையேயோ. 9

வடியாக் கருணை வாரிதியாம்
வள்ள லுன்றாண் மலர்மறந்தே
கொடியா ரிடம்போய்க் குறையிரந்தேன்
கொடியே னினியோர் துணைகாணேன்
அடியார்க் கெளிய முக்கணுடை
யம்மா னளித்த வருமருந்தே
முடியா முதன்மைப் பெரும்பொருளே
முறையோ முறையோ முறையேயோ. 10

திருச்சிற்றம்பலம்

---

## 25. நெஞ்சவலங் கூறல்

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இழுதை நெஞ்சினே னென்செய்வான் பிறந்தேன்
ஏழை மார்முலைக் கேவிழைந் தழன்றேன்
பழுதை பாம்பென மயங்கினன் கொடியேன்
பாவியே னெந்தப் பரிசுகொண் டடைவேன்
அழுது கண்கணீ ரார்ந்திடு மடியார்
அகத்துள் ளூறிய வானந்த வமுதே
தொழுது மால்புகழ் தணிகையென் னரசே
தோன்ற லேபரஞ் சுடர்தரு மொளியே. 1

வஞ்ச நெஞ்சினேன் வல்விலங் கனையேன்
மங்கை மார்முலை மலைதனி லுருள்வேன்
பஞ்ச பாதக மோருரு வெடுத்தேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
கஞ்சன் மால்புகழ் கருணையங் கடலே
கண்கண் மூன்றுடைக் கரும்பொளிர் முத்தே
அஞ்ச லஞ்சலென் றன்பரைக் காக்கும்
அண்ண லேதணி காசலத் தரசே. 2

மைய னெஞ்சினேன் மதியிலேன் கொடிய
வாட்க ணார்முலை மலைக்குப சரித்தேன்
ஐய பாம்பினை நிகர்த்தவெங் கொடிய
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
மெய்ய ருள்ளகம் விளங்கொளி விளக்கே
மேலை யோர்களும் விளம்பரும் பொருளே
செய்ய மேனியெஞ் சிவபிரா னளித்த
செல்வ மேதிருத் தணிகையந் தேவே. 3

மதியி னெஞ்சினே னெறியினை யனையேன்
மாதர் கண்ணெனும் வலையிடைப் பட்டேன்
பதியி லேழையேன் படிற்றுவஞ் சகனேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
பொதியி லாடிய சிவபிரா னளித்த
புண்ணி யாவருட் போதக நாதா
துதியி ராமனுக் கருள்செய்யுந் தணிகைத்
தூய னேபசுந் தோகைவா கனனே. 4

துட்ட நெஞ்சினே னெட்டியை யனையேன்
துயர்செய் மாதர்கள் சூழலுட் டினமும்
பட்ட வஞ்சனே னென்செய வுதித்தேன்
பாவியே னெந்தப் பரிசுகொண் டடைவேன்
நட்ட மாடிய நாயக னளித்த
நல்ல மாணிக்க நாயக மணியே
மட்ட ருப்பொழில் சூழ்திருத் தணிகை
வள்ள லேமயில் வாகனத் தேவே. 5

காயு நெஞ்சினேன் பேயினை யனையேன்
கடிகொள் கோதையர் கண்வலைப் பட்டேன்
பாயும வெம்புலி நிகர்த்தவெஞ் சினத்தேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
தாயுந் தந்தையுஞ் சாமியு மெனது
சார்பு மாகிய தணிகையங் குகனே
ஆயுங் கொன்றைசெஞ் சடைக்கணிந் தாடும்
ஐயா தந்தரு ளானந்தப பேறே. 6

தீங்கு நெஞ்சினேன் வேங்கையை யனையேன்
தீய மாதர்தந் திறத்துழல் கின்றேன்
பாங்கி லாரொடும் பழகிய வெறியேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
தேங்கு கங்கையைச் செஞ்சடை யிருத்துஞ்
சிவபிரான் செல்வத் திருவருட் பேறே
ஓங்கு நற்றணி காசலத் தமர்ந்த
உண்மை யேயெனக் குற்றிடுந் துணையே. 7

கள்ள நெஞ்சினே னஞ்சினை யனையேன்
கடிய மாதர்தங் கருக்குழி யெனுமோர்
பள்ள மாழ்ந்திடு புலையனேன் கொலையேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
வெள்ள வார்சடை வித்தகப் பெருமான்
வேண்ட நற்பொருள் விரிதது ரைத் தோனே
புள்ள லம்புதண் வாவிசூழ் தணிகைப்
பொருப்ப மர்ந்திடும் புனிதபூ ரணனே. 8

மத்த நெஞ்சினேன் பித்தரிற் றிரிவேன்
மாதர் கண்களின் மயங்கினின் றலைந்தேன்
பத்தி யென்பதோ ரணுவுமுற் றில்லேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
பித்த நாயக னருள்திருப் பேறே
பிரமன் மாலுக்கும் பேசரும் பொருளே
தத்தை பாடுறும் பொழிற்செறி தணிகா
சலத்தின் மேவிய தற்பர வொளியே. 9

அழுக்கு நெஞ்சினேன் பொய்யல தறியேன்
அணங்க னார்மய லாழத்தில் விழுந்தேன்
பழுக்கு மூடருட் சேர்ந்திடுங் கொடியேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
மழுக்கை யேந்திய மாசிலா மணிக்குண்
மன்னி யோங்கிய வளரொளிப் பிழம்பே
வழுக்கி லார்புகழ் தணிகையென் னரசே
வள்ள லேயென்னை வாழ்விக்கும் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

## 26. ஆற்றாப் புலம்பல்

### கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

அண்ணாவோ வென்னருமை யையாவே பன்னிரண்டு
கண்ணாவோ வேல்பிடித்த கையாவோ செம்பவள
வண்ணாவோ நற்றணிகை மன்னாவோ வென்றென்றே
எண்ணாவோ துன்பத் திருங்கடற்குண் மன்னினனே. 1

மன்னப்பார் போற்று மணியேநின் பொன்னருளைத்
துன்னப்பா ராது சுழன்றேன் அருணைகிரி
தன்னப்பா நற்றணிகை தன்னி லமர்ந்தருளும்
என்னப்பா வின்னுமிந்த வேழைக் கிரங்காயோ. 2

காய்நின்ற நெஞ்சக் கடையேன் திருத்தணிகை
வாய்நின் றனதுபுகழ் வாய்பாடக் கைகுவித்துத்
தூய்நின்றே தாளைத் தொழுதாடித் துன்பமெலாம்
போய்நின் றடைவேனோ புண்ணியநின் பொன்னருளே. 3

பொன்பிணிக்கு நெஞ்சப் புலையேனை யிவ்வுலகில்
வன்பிணிக்கோ பெற்று வளர்த்தா யறியேனே
என்பிணைத்தார் வள்ளற் கினிமை பெறுமணியே
அன்பிணைத்தோர் போற்று மருட்டணிகை மன்னவனே. 4

வன்னேயும் வஞ்சகர்தம் வன்சார்பும் வன்றுயரும்
என்னையுங் கொண்டதனை யெண்ணி யிடிவேனோ
அன்னோ முறைபோகி யையா முறையேயோ
மன்னோ முறைதணிகை வாழ்வே முறையேயோ. 5

திருச்சிற்றம்பலம்

## 27. திருவருள் விழைதல்

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தாணு வின்றருள் செல்வமே
 தணிகையிற் சாமியே நினையேத்திக்
காணு வேனிலை யருளிவண்
 புன்மையிற் காலங்கள் கழிக்கின்றேன்
மாணு மன்பர்க ளென்சொலா
 ரையநீ வந்தெனக் கருள்வாயேல்
நாணு வேனல னடுங்கல
 னெடுங்கலன் நாயினுங் கடையேனே. 1

கடைப்பட் டேங்குமிந் நாயினுக்
 கருடரக் கடவுணீ வருவாயேல்
மடைப்பட் டோங்கிய வன்பகத்
 தொண்டர்கள் வந்துனைத் தடுப்பாரேல்
தடைபட் டாயெனி லென்செய்வே
 னென் செய்வேன் றளர்வது தவிரேனே
அடைப்பட் டோங்கிய வயற்றிருத்
 தணிகையம் பதியமர்ந் திடுதேவே. 2

தேவ ரேமுத லுலகங்கள்
 யாவையுஞ் சிருட்டியா தியசெய்யும
மூவ ரேயெதிர் வருகினு
 மதித்திடேன் முருகநின் பெயர்சொல்வோர்
யாவ ரேனுமென் குடிமுழு
 தாண்டெனை யளித்தவ ரவரேகாண்
தாவ நாடொறுந் தணிகையம்
 பதியில்வாழ் சண்முகப் பெருமானே. 3

திருச்சிற்றம்பலம்

## 28. புண்ணிய நீற்று மான்மியம்

### வண்ணக் கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திவசங்கெடொ றுங்கொண்டிடு தீமைப்பிணி தீரும்
பவசங்கட மறுமிவ்விக பரமும்புகழ் பரவுங்
கவசங்களெ னச்சூழ்ந்தது கண்ணேறது தவிருஞ்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே. 1

மாலேந்திய குழலார்தரு மயல்போமிட ரயல்போங்
கோலேந்திய வரசாட்சியுங் கூடும்புகழ் நீடும்
மேலேந்திய வானாடர்கண் மேவியவித மொருசெவ்
வேலேந்திய முருகாவென வெண்ணீறணிந் திடிலே. 2

தவமுண்மையொ டுறும்வஞ்சகர் தஞ்சார்வது தவறும்
நவமண்மிய வடியாரிட நல்குந்திறன் மல்கும்
பவனன்புனல் கனன்மண்வெளி பலவாகிய பொருளாஞ்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே. 3

துயிலேறிய சோர்வுங்கெடுந் துயரங்கெடு நடுவன்
கையிலேறிய பாசந்துணி கண்டேமுறித் திடுமால்
குயிலேறிய பொழில்சூழ்திருக் குன்றேறி நடக்கும
மயிலேறிய மணியேயென வளநீறணிந் திடிலே. 4

தேறுப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாறுப்பிணி மாயுந்திரு மருவுங்கரு வொருவும்
வீறுப்பொடு வருசூர்முடி வேறுக்கிட வருமோர்
ஆறுக்கரப் பொருளேயென வருணீறணிந் திடிலே. 5

திருச்சிற்றம்பலம்

## 29. உறுதி யுணர்த்தல்

### கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

மஞ்சேர் பிணிமிடி யாதியை நோக்கி வருந்துறுமென்
னெஞ்சே தணிகைய னுறெழுத் தண்டுவெண் ணீறுண்டுநீ
யெஞ்சே லிரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
அஞ்சே லிதுசத் தியமாமென் சொல்லை யறிந்துகொண்டே. 1

அறியாத நம்பிணி யாதியை நீக்கு மருண் மருந்தின்
நெறியாந் தணிகைய னுறெழுத் தண்டுவெண் ணீறுண்டுநீ
யெறியா திரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
குறியா திருக்கலை யென்னுணை யென்றன் குணநெஞ்சமே. 2

என்றே பிணிக ளொழியுமென் றேதுய ரெய்தியிடேல்
நின்றே தணிகைய னுறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
யின்றே யிரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
நன்றேயெக் காலமும வாழிய வாழிய நன்னெஞ்சமே. 3

திருச்சிற்றம்பலம்

---

## 30. எண்ணத் தேங்கல்

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போதுகொண் டவனு மாலுநின் றேத்தும்
புண்ணிய நின்றிரு வடிக்கே,
யாதுகொண் டடைகேன் யாதுமேற் செய்கேன்
யாதுநின் றிருவுள மறியேன்,
தீதுகொண் டவனென் றெனக்கருள் சிறிதுந்
செய்திடா திருப்பையோ சிறியோன்,
ஏதிவன் செயலொன் றிலையெனக் கருதி
யீவையோ தணிகைவா ழிறையே. 1

வாழ்வனோ நின்பொன் னடிநிழல் கிடைத்தே
வயங்குமா னந்த வெள்ளத்துள்,
ஆழ்வனோ வெளியே னல்லதிவ் வுலகில்
அறனுசெயாக் கொடியர்பாற் சென்றே
தாழ்வனோ தாழ்ந்த பணிபுரிந் தவமே
சஞ்சரித் துழன்றுவெந் நரகில்,
வீழ்வனோ விஃதென் றறிகிலேன் றணிகை
வெற்பினு ளொளிரருள் விளக்கே. 2

திருச்சிற்றம்பலம்

---

## 31. கையடைமுட்டற்கிரங்கல்

### கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கார்பூத்த கண்டத் தொடுமேவு முக்கட் கனிகனிந்து
சீர்பூத்த தொழுகுசெந் தேனே தணிகையிற் றெள்ளமுதே
போர்பூத்த வொற்றியி னின்முன்ன ரேற்றிடப் பேதையனேன்
ஏர்பூத்த வொண்பளி தங்காண் கிலனதற் கென்செய்வனே. 1

கருமருந் தாய மணிகண்ட நாயகன் கண்மணியாம்
அருமருந் தேதணி காசல மேவுமென் னுருயிரே
திருமருங் காரொற்றி யூர்மே வியநின் றிருமுன்னராய்
ஒருமருங் கேற்றவென் செய்கேன்கற் பூர வொளியினுக்கே

பாலெடுத்தேத்துநற் பாம்பொடு வேங்கையும் பார்த்திடவோர்
காலெடுத் தம்பலத் தாடும் பிரான்றிருக் கண்மணியே
வேலெடுத் தோய்தென் தணிகா சலத்தமர் வித்தகநின்
பாலெடுத் தேற்றக் கிடைக்குங்கொ லோவெண் பளிதமெற்கே

கண்ணப்ப னென்னுந் திருப்பெய ராலுல கம்புகழுந்
திண்ணப்ப னேத்துஞ் சிவனார் மகனுக்குத் தெண்டனிட்ட
விண்ணப்ப மொன்றிந்த மேதினி மாயையில் வீழ்வதறத்
தெண்ணப் படுநின் றிருவரு ளீகவிவ் வேழையற்கே. 4

திருச்சிற்றம்பலம்

---

## 32. பொது

### கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

எப்பா லவரு மிறைஞ்சுந் தணிகை யிருந்தருளென்
அப்பாவுன் பொன்னடிக் கென்னெஞ் சகமிட மாக்கிமிக்க
வெப்பான நஞ்சன வஞ்சகர் பாற்செலும் வெந்துயர்நீத்
திப்பாரி னின்னடி யார்க்கேவல் செய்ய வெனக்கருளே. 1

எய்யா தருடணி காசல மேவிய வென்னருமை
ஐயா நினது திருவடி யேத்தியன் றேவப னுஞ்
செய்யாண் மருவும் புயனுடைத் தேவனுஞ் சேணவனும்
நையாத வாயுளுஞ் செல்வமும் வண்மையு நண்ணினரே. 2

வாளாருங் கண்ணியர் மாயையை நீக்கி மலிகரணக்
கோளாகும் வாதனை நீத்துமெய்ஞ் ஞானக் குறிகொடுநின்
தாளாகும் நீழ லதுசார்ந்து நிற்கத் தருந்ததிரு
நாளாகு நாளெந்த நாளறி யேன்றணி காசலனே. 3

ஊன்பார்க்கு மிவ்வுடற் பொய்ம்மையைத் தோத லொழிந்தவமே
மான்பார்க்குங் கண்ணியர் மையலில் வீழு மயக்கமற்றே
தேன்பார்க்குஞ் சோலைத் தணிகா சலத்துன் திருவழகை
நான்பார்க்கு நாளெந்த நாண்மயி லேறிய நாயகனே. 4

என்னே குறைநமக் கேழைநெஞ் சேமயி லேறிவரும்
மன்னே யெனநெடு மாலும் பிரமனும் வாழ்த்திநிற்குந்
தன்னேர் தணிகைத் தடமலை வாழுநற் றநதையருட்
பொன்னேர் திருவடிப் போதுகண் டாய்நம் புகலிடமே. 5

பேதைநெஞ் சேயென்றன் பின்போந் திடுதியிப் பேயுலக
வாதையஞ் சேற்பொறி வாய்க்கலங் கேலிறை யும்மயங்கேற்
போதையெஞ் சேல்தணி காசலம் போயப் பொருப்பமர்ந்த
தாதையஞ் சேவடிக் கீழ்க்குடி யாகத் தயங்குவமே. 6

திருச்சிற்றம்பலம்

---

## 33. நாளவம்படாமை வேண்டல்

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

குன்றமொத் திலங்கு பணைமுலை நெடுங்கட்
கோதையர் பால்விரைந் தோடிச்
சென்றவிப் புலையேன் மனத்தினை மீட்டுன்
றிருவடிக் காக்குநா ளுளதோ
என்றனி யுயிரே யென்னுடைப் பொருளே
யென்னுளத் தினிதெழு மின்பே
மன்றலம் பொழில்சூழ் தணிகையம் பொருப்பில்
வந்தமர்ந் தருள்செய் மணியே. 1

மணிக்குழை யடர்த்து மதர்த்தவேற் கண்ணார்
வஞ்சக மயக்கினி லாழ்ந்து
கனிக்கருந் துயர்கொண் மனத்தினை மீட்டுன்
கழலடிக் காக்குநா ளுளதோ
குணிக்கரும் பொருளே குணப்பெருங் குன்றே
குறிகுணங் கடந்ததோர் நெறியை
எணிக்கரு மாலு மயனுநின் றேத்து
மெந்தையே தணிகையெம் மிறையே. 2

இறைக்குளே யுலக மடங்கலு மருட்டு
மிலைநெடு வேற்கணா ரளகச்
சிறைக்குளே வருந்து மனத்தினை மீட்டுன்
றிருவடிக் காக்குநா ளுளதோ
மறைக்குளே மறைந்தும் மறைக்கரி தாய
வள்ளலே யுள்ளகப் பொருளே
அறைக்குளே மடவார்க் கனநடை பயிற்று
மணிதிருத் தணிகைவா ழரைசே. 3

அரைமதிக் குறழு மொண்ணுதல் வாட்க
ணலர்முலை யணங்கனா ரல்குற்
புரைமதித் துழலு மனத்தினை மீட்டுன்
பொன்னடிக் காக்குநா ளுளதோ
பரைமதித் திடஞ்சேர் பராபரற் கருமைப்
பாலனே வேலுடை யவனே
விரைமதித் தோங்கு மலர்பொழிற் றணிகை
வெற்பினி லொளிருமெய் விளக்கே. 4

விளக்குறழ் மணிப்பூண மேலணிந் தோங்கி
விம்முறு மிளமுலை மடவார்
களக்கினி லாழ்ந்த மனத்தினை மீட்டுன்
கழலடிக் காக்குநா ளுளதோ
வளக்கருங் கருணை வாரியே ஞான
வமுதமே யானந்தப் பெருக்கே
கிளக்கரும் புகழ்கொ டணிகையம் பொருப்பிற்
கிளர்ந்தருள் புரியுமென் கிளையே. 5

கிளைக்குறும் பிணிக்கோ ருறையுளா மடவார்
கீழுறு மல்குலென் குழிவீழ்ந்
திளைக்கும்வன் கொடிய மனத்தினை மீட்டு
னிணையடிக் காக்குநா ளுளதோ
விளைக்குமா னந்த வியன்றனி வித்தே
மெய்யடி யவருள விருப்பே
திளைக்குமா தவத்தோர்க் கருள்செயுந் தணிகைத்
தெய்வமே யருட்செழுந் தேனே. 6

தேன்வழி மலர்ப்பூங் குழற்றுடி யிடைவேற்
றிறல்விழி மாதரார் புணர்ப்பாங்
கான்வழி நடக்கு மனத்தினை மீட்டுன்
கழல்வழி நடத்துநா ளுளதோ
மான்வழி வருமென் னம்மையை வேண்டி
வண்புனத் தடைந்திட்ட மணியே
வான்வழி யடைக்குஞ் சிகரிசூழ் தணிகை
மாமலை யமர்ந்தருண் மருந்தே. 7

மருந்தென மயக்குங் குதலையந் தீஞ்சொன்
வாணுதன் மங்கைய ரிடத்திற்
பொருந்தென வலிக்கு மனத்தினை மீட்டுன்
பொன்னடிக் காக்குநா ளுளதோ
அருந்திடா தருந்த வடியருள் ளோங்கு
மானந்தத் தேறலே யமுதே
இருந்தரு முனிவர் புகழ்செயுந் தணிகை
யினிதமர்ந் தருளிய வின்பே. 8

இன்பமற் றுறுகண் விளைவிழி நிலமா
மேந்திழை யவர்புழுக் குழியில்
துன்பமுற் றுழலு மனத்தினை மீட்டுன்
றுணையடிக் காக்குநா ளுளதோ
அன்பர்முற் றுணர வருள்செயுந் தேவே
யரியயன் பணிபெரி யவனே
வன்பதை யகற்றி மன்பதைக் கருள்வான்
மகிழ்ந்துறுந் தணிகையின் வாழ்வே. 9

வாழுமிவ் வுலக வாழ்க்கையை மிகவும்
வலித்திடு மங்கையர் தம்பால்
தாழுமென் கொடிய மனத்தினை மீட்டுன்
றண்மலர்க் காக்குநா ளுளதோ
சூழுநெஞ் சிருளைப் போழுமெய் யொளியே
தோற்றமீ றற்றசிற் சுகமே
ஊழுமுற் பவமோ ரேழும்விட் டகல
வுதவுசீ ரருட்பெருங் குன்றே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 34. அன்பிற் பேதுறல்

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மூடர்க டமர்குண் முற்படுங் கொடிய
முறியனேன் றனக்குநின் னடியாம்
ஏடவிழ் கமலத் திருநற வருந்த
வென்றுகொ லருள்புரிந் திடுவாய்
ஆடர வணிந்தே யம்பலத் தாடு
மையருக் கொருதவப் பேறே
கோடணி தருக்கள் குலவுநற் றணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே.

கற்றவர் புகழ்நின் றிருவடி மலரைக்
கடையனேன் முடிமிசை யமர்த்தி
யுற்றவிவ் வுலக மயக்கற மெய்மை
யுணர்த்துநா ளெந்நா ளறியேன்
நற்றவ ருணரும் பரசிவத் தெழுந்த
நல்லருட் சோதியே நவைதீர்
கொற்றவே லுகந்த குமரனே தணிகைக்
குன்றமர்ந் திருகுணக் குன்றே. 2

ஞாலவாழ் வெனும்புன் மலமிசைந் துழலும்
நாயினுங் கடையவிந் நாய்க்குன்
சீலவாழ் வளிக்குந் திருவடிக் கமலத்
தேன்றரு நாளுமொன் றுண்டோ
ஆலவா யுகந்த வொருசிவ தருவி
லருள்பழுத் தளிந்தசெங் கனியே
கோலவா னவர்கள் புகழ்திருத் தணிகைக்
குன்றமர்ந் திருகுணக் குன்றே. 3

பவமெனுங் கடற்குள் வீழ்ந்துழன் றேங்கும்
பாவியேன் றன்முகம் பார்த்திங்
கெவையுநா டாம லென்னடி நிழற்கீ
ழிருந்திடென் றுரைப்பதெந் நாளோ
சிவமெனுந் தருமக் கடலகத் தெழுந்த
தெள்ளிய வமுதமே தேனே
குவிமுலை வல்லிக் கொடியொடுந் தணிகைக்
குன்றமர்ந் திருகுணக் குன்றே. 4

மூலமுகங் காட்டி மயக்கிடுங் கொடியார்
முன்புழன் றேங்குமிவ் வெளியேன்
நிலைமுகங் காட்டு நின்றிருப் பாத
நீழல்வந் தடையுநா ளென்றோ
மலைமுகம குழைய வளைத்திடுந் தெய்வ
மணிமகிழ் கண்ணினுண் மணியே
கொலைமுகஞ் செல்லார்க் கருடருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 5

வருபய னறியா துழன்றிடு மேழை
மதியினே னுய்ந்திடும் வண்ணம்
ஒருவரு நினது திருவடிப் புகழை
யுன்னுநா ளெந்தநா ளறியேன்
அருவுரு வாகுஞ் சிவபிரா னளித்த
வரும்பெறற் செல்வமே யமுதே
குருவுரு வாகி யருடருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 6

அழிதரு முலக வாழ்வினை மெய்யென்
றலைந்திடும் பாவியே னியற்றும்
பழிதரும் பிழையை யெணனுறே லின்று
பாதுகாத் தளிப்பதுன் கடனே
மொழிதரு முக்கட் செங்கரும் பீன்ற
முத்தமே முத்தியின் முதலே
கொழிதரு மருவி பொழிதருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 7

நின்னிலை யறியா வஞ்சக ரிடத்தி
னின்றுநின் றலைதரு மெளியேன்
தன்னிலை யறிந்து மையகோ வின்னுந்
தயையிலா திருந்தனை யென்னே
பொன்னிலைப் பொதுவி னடஞ்செயும் பவளப்
பொருப்பினுண் மலர்ந்திடும் பூவே
கொன்னிலை வேல்கைக் கொளுந்திருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 8

பாடிநின் றிருசசீர் புகழ்ந்திடாக் கொடிய
பதகர்பா லொடொறுஞ் சென்றே
வாடிநின் றேங்கு மேழையே னெஞ்ச
வாட்டமிங் கறிந்திலை யென்னே
ஆடிநீ ருடி யருள்செயும் பரம
னகமகி ழுரும்பெறன் மருந்தே
கோடிலங் குயர்வா னணிதிருத தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே, 9

வன்பொடு செருக்கும் வஞ்சர்பா லலையா
வண்ணமின் றருள்செயா யென்னில்
துன்பொடு மெலிவே னின்றிரு மலர்த்தாட்
டுணையன்றித் துணையொன்றுங் காணேன்
அனபொடும் பரம னுமைகையிற் கொடுக்க
வகமகிழ்ந் தணைக்குமா ரமுதே
கொன்பெறு மிலைவேற் கரந்தொடுந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 10

திருச்சிற்றம்பலம்

## 35. கூடல் விழைதல்

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### திருச்சிற்றம்பலம்

சகமா றுடையா ரடையார் நெறியார்
சடையார் விடையார் தனியாளுர்
உகமா றுடையா ருமையோர் புடையா
ருதவும் முரிமைத் திருமகனுர்
முகமா றுடையார் முகமா றுடையா
ரெனவே யெனது முன்வந்தார்
அகமா றுடையேன் பதியா தென்றே
னலைவா யென்று ரலைதென்னே. 1

விதுவாழ் சடையார் விடைமேல் வருவார்
விதிமா லறியா விமலனுர்
மதுவாழ் குழலாள் புடைவா ழுடையார்
மகனுர் குகனுர் மயிலூர்வார்
முதுவாழ் வடையா தவமே யலைவேன்
முன்வந்திடயா னறி யாதே
புதுவாழ் வுடையா ரெனவே மதிபோய்
நின்றே னந்தோ பொல்லேனே. 2

காயோ டேனுய்க் கனல்கை யேந்திக்
காடே யிடமாக் கணங்கொண்ட
பேயோ டாடிப் பலிதேர் தருமோர்
பித்தப் பெருமான் றிருமகனுர்
தாயோ டெழுந் தணிகா சலனுர்
தகைசேர் மயிலார் தனிவேலார்
வேயோ டெழ்தோட் பாவையர் முன்னென்
வெள்வளை கொண்டார் வினவாமே. 3

பொன்னார் புயனார் புகழும் புகழார்
புலியின் னதளார் புயநாலார்
தென்னார் சடையார் கொடிமேல் விடையார்
சிவனா ரருமைத் திருமகனார்
என்னா யகனா ரென்னுயிர் போல்வா
ரெழின்மா மயிலா ரிமையோர்கள்
தந்நா யகனார் தணிகா சலனார்
தனிவந் திவண்மா றந்தாரே. 4

கல்லா லடியார் கல்லடி யுண்டார்
கண்டா ருலகங் களைவேதஞ்
செல்லா நெறியார் செல்லுறு முடியார்
சிவனா ருருமைத் திருமகனார்
எல்லா முடையார் தணிகா சலனா
ரென்னா யகனா ரியல்வேலார்
நல்லா ரிடையென் வெள்வளை கொடுபின்
னண்ணார் மயின்மே னடந்தாரே. 5

காரூர் சடையார் கனலார் மழுவார்
கலவார் புரமூன் றெரிசெய்தார்
ஆரூ ருடையார் பலிதேர்ந் திடுமெம்
மரனா ரருமைத் திருமகனார்
போரூ ருறைவார் தணிகா சலனார்
புதியா ரென வென் முனம்வந்தார்
ஏரூ ரெமதா ரினில்வா வென்று
ரெளியே னேமாந் திருந்தேனே. 6

கண்ணார் நுதலார் விடமார் களனார்
கரமார் மழுவார் கலைகண்ணார்
பெண்ணார் புயனா ரயன்மாற் கரியார்
பெரியார் கைலைப் பெருமானார்
தண்ணார் சடையார் தருமா மகனார்
தணிகா சலனா தனிவேலார்
எண்ணா ரெளியா ளிவளென் றெனையா
னென்செய் கேனோ விடர்கொண்டே. 7

மழுவார் தருகைப் பெருமான் மகனார்
மயில்வா கனனா ரயில்வேலார்
தழுவார் வினையைத் தணியா ரணியார்
தணிகா சலனார் தமபாதந்
தொழுவா ரழுவார் விழுவா ரெழுவார்
துதியா நிற்பா ரவாநிற்கப்
புழுவா ருடலோம் பிடுமென் புணர்வந்
தருடந் தருளிப் போனாரே. 8

நிருத்தம் பயின்றார் கடனஞ் சயின்றார்
நினைவார் தங்க ணெறிக்கேற்க
வருத்தம் பகர்வா ரருமைப் புதல்வ
ரறுமா முகனா ரயில்வேலார்
திருத்தம் பெறுவார புகழுந் தணிகைத்
திருமா மலையா ரொருமாதின்
வருத்தம் பாரார் வளையுந் தாரார்
வாரா ரவர்தம் மனமென்னே. 9

பிரமன் றலையிற் பலிகொண் டெருதிற்
பெயரும் பிசைப் பெருமானார்
திரமன் றினிலே நடனம் புரிவார்
சிவனார் மகனா திறல்வேலா
தரமன் றலைவான் பொழில்சா ரெழில்சேர்
தணிகா சலனார் தமியேன்முன்
வரமன் றவுமால் கொளநின் றனனன்
மடவா ரலரான் மனநொந்தே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 36. தரிசனை வேட்கை

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வேல்கொளுங் கமலக் கையனை யனையாண்
மெய்யனை யையனை யுலக
மால்கொளு மனதத ரறிவரு மருந்தை
மாணிக்க மணியினை மயின்மேற்
கால்கொளுங் குகனை யெந்தையை யெனது
கருத்தனை யயனரி யறியாச்
சால்கொளுங் கடவுட் டனியருண் மகனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 1

கண்ணனை யயனை விண்ணவர் கோனைக்
காககவைத் திட்டவேற் கரனைப்
பண்ணனை யடியர் பாடலுக் கருளும்
பதியினை மதிகொடண் ணருளாம்
வண்ணனை யெல்லா வண்ணமு முடைய
வரதனீன் றெடுத்தருண் மகனைத்
தண்ணனை யெனது கண்ணனை யவனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 2

என்னுடைய வுயிரை யான்பெறும் பேற்றை
யென்னுடைப் பொருளினை யெளியேன்
மன்னுடைக் குருவின் வடிவினை யென்கண்
மணியினை யணியினை வரத்தே
யின்னுடைப் பவள வெற்பினி லுதித்து
மிளிரருட் டருவினை யடியேன்
தன்னுடைத் தேவைத் தந்தையைத் தாயைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 3

பரங்கிரி யமருங் கற்பகத் தருவைப்
பராபரஞ் சுடரினை யெளியேற்
கிரங்கிவந் தருளும் வரகத் திறையை
யெண்ணுதற் கரியபே ரின்பை
யுரங்கிளர் வானோர்க் கொருதனி முதலை
யொப்பிலா தோங்கிய வொன்றைத்
தரங்கிளர் அருண கிரிக்கருள் பவனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 4

அரும்பெறன் மணியை யமுதினை யன்ப
ரன்பினுக் கெளிவரு மரசை
விரும்பு மாதவத்தோ ருள்ளகத் தொளிரும்
விளக்கினை யளக்கரும் பொருளைக்
கரும்பினை யென்னுட் கனிந்திடுங் கனியை
முனிந்திடா தருளருட் கடலைத்
தரும்பர சிவத்துட் கிளர்ந்தொளி ரொளியைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 5

மாரனை யெரித்தோன் மகிழ்திரு மகனை
வாகையம் புயத்தனை வடிவேற்
தீரனை யழியாச் சீரனை ஞானச்
செல்வனை வல்வினை நெஞ்சச்
சூரனைத் தடித்த வீரனை யழியாச்
சுகத்தனைத் தேன்றுளி கடப்பந்
தாரனைக் குகனென் பேருடை யவனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 6

வேதனைச் சிறைக்குள் வேதனை படச்செய்
விமலனை யமலனை யற்பர்
போதனைக் கடங்காப் போதனை யைந்தாம்
பூதனை மாதவா புகழும்
பாதனை யுமையாள் பாலனை யெங்கள்
பரமனை மகிழ்விக்கும் பரனைத்
தாதனை யுயிர்க்கு ளுயிரனை யவனைத்
தணிகையிற் கணடிறைஞ் சுவனே. 7

குழகனை யழியாக் குமரனை யட்ட
குணத்தனைக் குறித்திட லரிதாம்
அழகனைச் செந்தி லப்பனை மலைதோ
றாடல்வா ழண்ணலைத் தேவர்
கழகனைத் தண்டைக் காலனைப் பிணிக்கோர்
காலனை வேலனை மனதிற்
சழகிலார்க் கருளுஞ் சாமிநா தனைத்தென்
றணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 8

முத்தனை முத்திக் கொருதனி வித்தை
முதல்வனை முருகனை முக்கட்
பித்தனை யத்த னெனக்கொளுஞ் செல்வப்
பிள்ளையைப் பெரியவ ருளஞ்சேர்
சுத்தனைப் பத்தி வலைப்படு மவனைத்
துரியனைத் துரியமுங் கடந்த
சத்தனை நித்த நின்மலச் சுடரைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 9

வள்ளியிற் கரங்கொள் வள்ளலை யிரவில்
வள்ளிநா யகிதனைக் கவர்ந்த
கள்ளனை யடிய ருள்ளகத் தவனைக்
கருத்தனைக் கருதுமா னந்த
வெள்ளநின் றாட வருள்குரு பரனை
விருப்புறு பொருப்பனை வினையைத்
தள்ளவந் தருள்செய் திடுந்தயா நிதியைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 10

திருச்சிற்றம்பலம்

## 37. நாளெண்ணி வருந்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இன்னு மெத்தனை நாட்செல்லு
மேழையே னிடர்க்கடல் விடுத்தேற
மின்னும் வேற்படை மிளிர்தருங்
கைத்தல வித்தகப் பெருமானே
துன்னு நற்றணி காசலத்
தமர்ந்தரு டோன்றலே மயிலேறி
மன்னு முத்தம வள்ள
னின்றிரு மனக்கருத் தறியேனே. 1

ஈறி லாதநின் னருள்பெற
    வெனக்கினு மெத்தனை நாட்செல்லும்
மாறி லாதவர் மனதலொளிர்
    சோதியே மயின்மிசை வரும்வாழ்வே
தூறி லாவளச சோலைசூழ்
    தணிகைவாழ் சுத்தசின் மயத்தேவே
யூறி லாப்பெரு நிலையவா
    னந்தமே யொபபிலா னருட்பேறே. 2

கூழை மாமுகி லனையவர்
    முலைத்தலைக் குளித்துழன் றலைகின்ற
ஏழை நெஞ்சினே னெத்தனை
    நாட்செல்லு மிடர்க்கடல் விடுத்தேற
மாழை மேனியன் வழுத்துமா
    ணிக்கமே வாழ்த்துவா யவர்பொல்லா
வூழை நீக்கிநல் லருடருந
    தெய்வமே யுத்தமச சுகவாழ்வே. 3

ஐய வின்னுநா னெததனை
    நாட்செலு மல்லல்விட் டருண்மேவத்
துய்ய நன்னெறி மன்னிய
    வடியர்தந துயர்தவிர்த் தருள்வோனே
வெய்ய நெஞ்சின ரெட்டொணா
    மெய்யனே வேல்கொளுங் கரத்தோனே
செய்ய மேனியரு சிவபிரான்
    பெற்றநற் செல்வனே திறலோனே. 4

பாவி யேனின்னு மெத்தனை
நாட்செலும் பருவரல் விடுத்துய்யக்
கூவி யேயன்பர்க் கருடரும்
வள்ளலே குணப்பெருங் குன்றேயென்
னாவி யேயெனை யாள்குரு
வடிவமே யானந்தப் பெருவாழ்வே
வாவி யேர்தருந் தணிகைமா
மலைமிசை மன்னிய வருட்டேனே. 5

எளிய னேனின்னு மெதததனை
நாட்செலு மிடர்க்கடல் விடுத்தேற
வொளிய னேகமாய்த் திரண்டிடுஞ்
சிற்பர வுருவமே வுருவில்லா
வெளிய தாகிய வத்துவே
முத்தியின் மெய்ப்பயன் றருவிததே
யளிய தாகிய நெஞ்சினர்க்
கருடரு மாறுமா முகத்தேவே. 6

தொண்ட னேனின்னு மெத்தனை
நாட்செலுந் துயர்க்கடல் விடுத்தேற
வண்டனே யண்டர்க் கருடரும்
பரசிவ னருளிய பெருவாழ்வே
கண்ட னேகாவந் தனைசெயுஞ்
சூரனைக் களைந்தருள் களைகண்ணே
விண்ட னோர்புகுஞ் சிகரிசூழ்
தணிகையில் விளங்கிய வேலோனே. 7

வீணனே னின்னு மெத்தனை
நாட்செல்லும் வொநதுயர்க் கடனீந்தக்
காண வானவர்க் கருமபெருந்
தலைவனே கருணையங் கண்ணனே
தூண னேர்புயச சுந்தர
வடிவனே துளககிலார்க் கருளீயும்
ஏண னேயெனை யென்றுகொ
டேசிக விறைவனே யியலோனே. 8

கடைய னேனின்னு மெத்தனை
நாட்செலுங் கடுநதுயர்க் கடனீந்த
விடையி னேறிய சிவபிரான்
பெற்றருள் வியன்றிரு மகப்பேறே
உடைய நாயகிக் கொருபெருஞ
செல்வமே யுலகெலா மளிப்போனே
அடைய நின்றவர்க் கருள்செயுந்
தணிகைவா ழானந்தக் தெளிதேனே. 9

பேய னேனினனு மெத்தனை
நாட்செலும் பெருநதுயர்க் கடனீந்த
மாய னேமுதல் வானவர்
தமக்கருண் மணிமிடற் றிறையோற்குச்
சேய னேயகந தெளிந்தவாக்
கினியனே செல்வனே யெனைக்காக்குந்
தாய னேயென்றன் சற்குரு
நாதனே தணிகைமா மலையானே 10

திருச்சிற்றம்பலம்

## 38. ஏத்தாப் பிறவியிழிவு

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**திருச்சிற்றம்பலம்**

கல்லை யொத்தவென் னெஞ்சினை யுருக்கேன்
கடவு ணின்னடி கண்டிட விழையேன்
அல்லை யொத்தகோ தையர்க்குளங் குழைவேன்
அன்பி லாரொடு மமர்ந்தவ முழல்வேன்
தில்லை யப்பனென் றுலகெடுத் தேத்துஞ்
சிவபி ரான்றருஞ் செலவதின் றணிகை
யெல்லை யுற்றினை யேத்திநின் றுடேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 1

மைய னெஞ்சினேன் மதிசிறி தில்லேன்
மாத ரார்முலை மலையிவர்ந் துருள்வேன்
ஐய நின்றிரு வடித்துணை மறவா
அன்பர் தங்களை யடுத்துள மகிழேன்
உய்ய நின்றிருத் தணிகையை யடையேன்
உடைய நாயக னுதவிய பேறே
எய்ய விவ்வெறும் வாழ்க்கையி லுழல்வேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 2

புலைய மாதர்தம் போகத்தை விழைந்தேன்
புன்மை யாவைக்கும் புகலிட மானேன்
நிலைய மாந்திருத் தணிகையை யடையேன்
நிருத்த னீன்றரு ணின்மலக் கொழுந்தே
விலையி லாதநின் றிருவருள் விழையேன்
வீணர் தங்களை விரும்பிநின் றலைந்தேன்
இலையெ னாதணு வளவுமொன் றீயேன
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 3

மருட்டு மங்கையர் புழுக்குழி யாழ்ந்து
வருந்தி நாடொறு மனமிளைக் கின்றேன்
தெருட்டு நின்றிருத் தணிகையை யடையேன்
சிவபிரான் பெற்ற செல்வமே நினது
அருட்டி றத்தினை நினைந்துநெக் குருகி
அழுது கண்கணீ ரார்ந்திட நில்லேன்
இருட்டு வாழ்க்கையி லிடறிவீழ் கின்றேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 4

நச்சி லேபழ கியகருங் கண்ணார்
நலத்தை வேட்டுநற் புலத்தினை யிழந்தேன்
பிச்சி லேமிக மயங்கிய மனத்தேன்
பேதை யேன்கொடும் பேயனேன் பொய்யேன்
கச்சி லேசிவ னளித்திடு மணியே
தங்கமே யுன்றன் றணிகையை விழையேன்
எச்சி லேவிழைந் திடருறு கின்றேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே.

மின்னை யன்னநுண் ணிடையிள மடவார்
வெய்ய நீர்க்குழி விழுந்திளைத் துழன்றேன்
புன்னை யஞ்சடை முன்னவ னளித்த
பொன்னை யன்னநின் பூங்கழல் புகழேன்
அன்னை யென்னநல் லருட்டருந் தணிகை
யடைந்து நின்றுநெஞ் சகமகிழ்ந் தாடேன்
என்னை யென்னையிங் கென்செய லன்னோ
வென்செய் வான்பிறந் தேனெளி யேனே. 6

பட்டி மாடெனத் திரிதரு மடவார்
பாழ்ங்குழிக் குள்வீழ்ந் தாழ்நதிளைக் கின்றேன்
தட்டி லார்புகழ் தணிகையை யடையேன்
சம்பு வென்னுமோர் தருவொளிர் கனியே
ஒட்டி லேனினை யுளத்திடை நினையேன்
உதவு ருதுநச் சுறுமர மானேன்
எட்டி யென்முன மினிப்புறு மந்தோ
என்செய வான்பிறந் தேனெளி யேனே: 7

ஓங்கி நீண்டவா ளுறழ்கருங் கண்ணார்
உவர்ப்புக் கேணியி னிழைத்தக மிளைத்தேன்
வீங்கி நீண்டதோ ரொதியென நின்றேன்
விழலுக் கேயிறைத் தலைந்தனன் வீணே
தாங்கி னேனுடற் சுமைதனை சிவனா
தனய நின்றிருத் தணிகையை யடையேன்
ஏங்கி னேன்சுழற் படுதுரும் பெனவே
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 8

பண்ண ளாவிய மொழியினுன் மயக்கும்
படிற்று மங்கையர் பால்விழை வுற்றேன்
மண்ண ளாவிய சோலைசூழ் தணிகைத
தடத்த ளாவிய தருமநற் றேவே
பெண்ண ளாவிய புடையுடைப் பெருமாள்
பெற்ற செல்வமே யற்றவர்க் கமுதே
எண்ண ளாவிய வஞ்சக நெஞ்சோ
டென்செய் வான்பிறந் தேனெளி யேனே. 9

கான ருவள கத்திய ரளக்கர்
காமத் தாழ்ந்தகங் கலங்குற நின்றேன்
ரான மேவுறும் பொழிற்றிருத் தணிகை
மலையை நாடிநின் மலர்ப்பதம் புகழேன்
ஞான நாயகி யொருபுடை யமர்ந்த
நம்ப னார்க்கொரு நற்றவப் பேறே
ஈன ; னாகியிங் கிடர்ப்படு கின்றேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 39. பவனிச் செருக்கு

### கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

பூவுண்டவெள் விடையேறிய புனிதன்றரு மகனார்
பாவுண்டதோ ரமுதன்னவர் பசுமாமயின் மேல்வந்
தாவுண்டன ரெனதின்னல மறியாரென விருந்தால்
நாவுண்டவர் திருமுன்பிது நலமன்றுமக் கெனவே. 1

ஒன்றார்புர மெரிசெய்தவ ரொற்றித்திரு நகரார்
மன்றார்நட முடையார்தரு மகனார்பசு மயின்மேல்
நின்றாரது கண்டேன்கலை நில்லாது கழன்ற
தென்றாரொடு சொல்வேனெனை யானேமறந் தேனே. 2

வாரார்முலை யுமையாடிரு மணவாளர்தம் மகனார்
ஆராவமு தனையாருயி ரனையாரயி லவனார்
நேரார்பணி மயிலின்மிசை நின்றாரது கண்டேன்
நீரார்விழி யிறைநீங்கின நிறைநீங்கிய தன்றே. 3

ஒன்றோடிரண் டெனுங்கண்ணின ருதவுந்திரு மகனார்
என்றோடிக வெழிலார்மயி லேறியங் குற்றார்
நன்றோடினன் மகிழ்கூர்ந்தவர் நகைமாமுகங் கண்டேன்
கன்றோடின பசுவாடின கலையூடின வன்றே. 4

மலைவாங்குவி லரனார்திரு மகனார்பசு மயிலின்
நிலைதாங்குற நின்றாரவர் நிற்குந்நிலை கண்டேன்
அலைதீங்கின குழறாங்கின வகமேங்கினவரைமேல்
கலைநீங்கின முலைவீங்கின களியோங்கின வன்றே. 5

மான்கண்டகை யுடையார்தரு மகனார்தமை மயின்மேல்
நான்கண்டன னவாகண்டனா நகைகொண்டன முடனே
மீன்கண்டன விழியாரது பழியாக விளைத்தார்
ஏன்கண்டனை யென்றாளனை யென்னென்றுரைக் கேனே.

செங்கண்விடை தனிலேறிய சிவனார்திரு மகனார்
எங்கண்மணி யனையார்மயி லின்மீதுவந் திட்டார்
அங்கண்மிக மகிழ்வோடுசென் றவர்நின்றது கண்டேண்
இங்கண்வளை யிழந்தேன்மய லுழந்தேன்கலை யெனவே. 7

தண்டேன்பொழி யிதழிப்பொலி சடையார்தரு மகனார்
பண்டேன்புரி தொடையார்தமைப் பசுமாமயின் மீதிற்
கண்டேன்வளை காணேன்கலை காணேன்மிரு காமங்
கொண்டேன்றுயில் விண்டேனென் றுங்கூறேன்வருமாறே. 8

மாவீழ்ந்திடு விடையார்திரு மகனார்பசு மயின்மேல்
நீவீழ்ந்திட நின்றாரது கண்டேனென்ற னெஞ்சே
பூவீழ்ந்தது வண்டேமதி போய்வீழ்ந்தது வண்டே
காவீழ்ந்தது மலரேகழை நாண்வீழ்ந்தது மலரே. 9

வெற்றார்புர மெரித்தார்தரு மேலார்மயின் மேலே
உற்றாரவ ரெழின்மாமுகத் துள்ளேநகை கண்டேன்
பொற்றார்புயங் கண்டேன்றுயர் விண்டேனெனைப் போலே
மற்றார்பெறு வாரோவினி வாழ்வேன்மன மகிழ்ந்தே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 40. திருவருள் விலாசப்பத்து

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
  யானைமகிழ் மணிக்குன்றே யரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்கட் சுடரே செவ்வேல்
  பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்
வீறுமுகப் பெருங்குணத்தோ ரிதயத் தோங்கும்
  விளக்கமே யானந்த வெள்ள மேமுன்
தேறுமுகப் பெரியவருட் குருவா யென்னைச்
  சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 1

கண்ணிமதி புனைந்தசடைக் கனியே முக்கட்
  கரும்பேயென் கண்ணேமெய்க் கருணை வாழ்வே
புண்ணியநன் னிலையுடையோ ருளத்தில் வாய்க்கும்
  புத்தமுதே யானந்த போக மேசீர்
எண்ணியமெய்த் தவர்க்கெல்லா மெளிதி லீந்த
  என்னரசே ஆறுமுகத் திறையாம் வித்தே
திண்ணியவென் மனமுருக்கிக் குருவா யென்னைச்
  சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 2

நின்னிருதாட் டுணைபிடித்தே வாழ்கின் றேனுன்
நின்னையலாற் பின்னையொரு நேயங் காணேன்
என்னையினித் திருவுளத்தில் நினைதி யோநான்
ஏழையினு மேழைகண்டா யெந்தா யெந்தாய்
பொன்னையன்றி விரும்பாத புல்லர் தம்பால்
போகவொழிந் துன்பதமே போற்றும் வண்ணஞ்
சின்னமளித் தருட்குருவ யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 3

கல்வியெலாங் கற்பித்தாய் நிலையால் நேயங்
காணவைத்தா யிவ்வுலகங் கான லென்றே
ஒல்லும்வகை யறிவித்தா யுள்ளே நின்றே
னுடையானே நின்னருளு முதவு கின்றாய்
இல்லையெனப் பிறர்பாற்சென் றிரவா வண்ணம்
ஏற்றமளித் தாயிரக்க மென்னே யென்னே
செல்வவருட் குருவாகி நாயி னேனைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 4

எந்தைபிரா னென்னிறைவ னிருக்க விங்கே
யென்னகுறை நமக்கென்றே யிறுமாப் புற்றே
மந்தவுல கினிற்பிறரை யொருகா சுக்கும்
மதியாமல் னின்னடியே மதிக்கின் றேன்யான்
இந்தவடி யேனிடத்துன் றிருவு ளந்தான்
எவ்வாறோ வறிகிலே னேழை யேனாற்
சிந்தைமகிழ்ந் தருட்குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 5

மாறாத பெருஞ்செல்வ யோகர் போற்றும்
மாமணியே யாறுமுக மணியே நின்சீர்
கூறாத புலைவாய்மை யுடையார் தம்மைக்
கூடாத வண்ணமருட் குருவாய் வந்து
தேறாத நிலையெல்லாந் தேற்றி யோங்குஞ்
சிவஞானச் சிறப்படைந்து திகைப்பு நீங்கிச்
சீறாத வாழ்விடைநான் வாழ வென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 6

கற்றறிந்த மெய்யுணர்ச்சி யுடையோ ருள்ளக்
கமலத்தே யோங்குபெருங் கடவு ளேநின்
பொற்றகைமா மலரடிச்சீர் வழுத்து கின்ற
புண்ணியர்தங் குழுவிலெனைப் புகுத்தி யென்றும்
உற்றவருட் சிந்தனைதந் தினப மேவி
உடையாயுன் னடியவனென் றோங்கும் வண்ணஞ்
சிற்றறிவை யகற்றியருட் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 7

ஞாலமெலாம் படைத்தவனைப் படைத்த முக்கண்
நாயகனே வடிவேற்கை நாத னேநான்
கோலமெலாங் கொடியேனற் குணமொன் றில்லேன்
குற்றமே விழைந்தேனிக் கோது ளோனைச்
சாலமெலாஞ் செயுமடவார் மயக்கி னீக்கிச்
சன்மார்க்க மடையவருள் தருவாய் ஞானச்
சீலமெலா முடையவருட் குருவாய் வந்து
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே.

கற்பனையே யெனுமுலகச் சழக்கி லந்தோ
காலூன்றி மயங்குகின்ற கடைய னேனைச்
சொற்பனமிவ் வுலகியற்கையென்று நெஞ்சந்
துணிவுகொளச் செய்வித்துன் றுணைப்பொற் றாளை
அற்பகலு நினைந்துநினைந் துருகி ஞான
ஆனந்த போகமுற வருளல் வேண்டுஞ்
சிற்பரசற் குருவாய்வந் தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்டதேவ தேவே. 9

பன்னிருகண மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே ஆறுமுகம் படைத்த கோவே
என்னிருகண் மணியேயெந் தாயே யென்னை
ஈன்றானே யென்னரசே யென்றன் வாழ்வே
மின்னிருவர் புடைவிளங்க மயின்மீ தேறி
விரும்புமடி யார்காண மேவுந் தேவே
சென்னியில்நின் னடிமலர்வைத்த தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## கோச்சகக்கலிப்பா.

கூழுக் கழுவேனோ கோத்தணிகைக் கோவேயென்
ஊழுக் கழுவேனோ ஓயாத் துயர்ப்பிறவி
ஏழுக் கழுவேனோ வென்செய்கே னென்செய்கேன்
பாழுக் கிறைத்தேனீ துன்செயலோ பார்க்குமிடம். 1

சிந்தைக் கும்வழி யில்லையுன் றன்மையைத்
தெரிதற் கென்னுந் திருத்தணி கேசனே
உந்தைக் கும்வழி யில்லையென் றுலிந்த
உலகில் யாவ ருனையன்றி நீர்மொள்ள
மொந்தைக் கும்வழி யில்லைவ ரத்திரு
மூண்டைக் கும்வழி யில்லைய ரையிற்சாண்
கந்தைக் கும்வழி யில்லை யரகர
கஞ்சிக் கும்வழி யில்லையிங் கையனே. 2

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

கறிபிடித்தவன் கடைபிற கண்டவர்தங்
கால்பிடித்துக் கவ்வும் பொல்லா
வெறிபிடித்த நாய்க்கேனும் வித்தைபயிற்
றிடவாகும வேணடி வேண்டி
மறிபிடித்த சிறுவனைப்போல் வாத்தியார்
மனமுறுகி வருந்தத் தங்கள்
குறிபிடித்துக் காட்டுவோர்க் கியாவர்படிப்
பிக்கவலார் குமர வேளே. 3

வண்ணவிருத்தம்.

திருமா லாதிய ருள்ளங் கொள்ளுமோர் செவ்விய வேலோனே
குருமா மணியே குணமணி யேசுரர் கோவே மேலோனே
கருமா மலமறு வணணந் தண்ணளி கண்டே கொண்டேனே
கதியே பதியே கனநிதி யேகற் கண்டே தண்டேனே
அருமா தவருயர் நெஞ்சம் விஞ்சிய வண்ணு விண்ணவனே
அரசே யமுதே யறிவுரு வேமுரு கையா மெய்யவனே
உருவா கியபவ பந்தஞ் சிந்திட வோதிய வேதியனே
ஒளியே வெளியே,உலகமெ லாமுடை யோனே வானவனே.

## 41. திருவருட்பேற்று விழைவு

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### திருச்சிற்றம்பலம்

உலகம் பரவும் பரஞ்சோதி
யுருவாங் குருவே யும்பரிடைக்
கலகந் தருசூர்க் கிளைகளைந்த
கதிர்வே லரசே கவின்றருசீர்த்
திலகந் திகழ்வா ணுதற்பரையின்
செல்வப் புதல்வா திறலதனால்
இலகுங் கலப மயிற்பரிமே
லேறும் பரிசென் னியம்புகவே. 1

புகுவா னவாதம் மிடர்முழுதும்
போக்குங் கதிர்வேற் புண்ணியனே
மிகுவான் முதலாம் பூதமெலாம்
விதித்தே நடத்தும் விளைவனைத்துந்
தகுவான் பொருளா முனதருளே
யென்று லடியேன் றனையிங்கே
நகுவான் வருவித் திருநெறிக்கே
நடத்த லழகோ நவிலாயே. 2

அழகா வமலா வருளாளா
வறிவா வறிவா ரகமேவுங்
குழகா குமரா வெனையாண்ட
கோவே நின்சீர் குறியாரைப்
பழகா வண்ண மெனக்கருளிப்
பரனே நின்னைப் பணிகின்றோர்க்
கழகா தரவாம் பணிபுரிவா
ரடியார்க் கடிமை யாக்குகவே. 3

ஆக்குந் தொழிலாற் களித்தானை
யடக்குந தொழிலா லடக்கிப்பின்
காக்குந் தொழிலா லருள்புரிந்த
கருணை கடலே கடைநோக்கால்
நோக்குந தொழிலோர் சிறிதுன்ப
துளதேன் மாயா கொடிபபெல்லாம்
போக்குந் தொழிலென் பாலுண்டா
மிதற்கென் புரிவேன் புண்ணியனே. 4

புரிவேன் விரதந் தவநதானம்
புரியாதொழிவேன் புண்ணியமே
பரிவேன் பாவம் பரிவேனிப்
பரிசா லொன்றும் பயன்காணேன்
திரிவே னினது புகழ்பாடிச்
சிறியே னிதனைத் தீர்வேனேல்
எரிவே னெரிவாய் நரகததே
யிருப்பே னிளைப்பேன் விளைப்பேனே. 5

விளைப்பேன் பவமே யடிசசிறியேன்
வினையால் விளையும் வினைப்போகந்
திளைபபே னெனினுங் கதிர்வடிவேற்
றேவே யென்னுந திருமொழியால்
இலைப்பே னலனிங் கியம்புகிற்பே
னெனக்கென் குறையுண் டெமதூதன்
வளைப்பே னெனவந திடிலவனை
மடிப்பேன் கருணை வலத்தாலே. 6

வலத்தால் வடிவேற் கரத்தேந்து
மணியே நின்னை வழுத்துகின்ற
நலத்தா லுயர்ந்த பெருந்தவர்பா
லண்ணும் பரிசு நல்கினையேல்
தலத்தா லுயர்ந்த வானவருந்
தமியேற் கிணையோ சடமான
மலத்தால் வருந்தாப் பெருவாழ்வான்
மகிழ்வே னின்பம் வளர்வேனே.

இன்பப் பெருக்கே யருட்கடலே
யிறையே யழியா விருமபொருளே
அன்பர்க் கருளும் பெருங்கருணை
யரசே யுணர்வா லாம்பயனே
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி
வடிவே வடிவேன் மணியேயென்
துன்பத் திடரைப் பொடியாக்கிச்
சுகந்தந் தருளத் துணியாயே.

சுகமே யடிய ருளத்தோங்குஞ்
சுடரே யழியாத் துணையேயென்
அகமே புகுந்தா வருட்டேவே
அருமா மணியே யாரமுதே
இகமே பரத்து முனக்கன்றி
யெத்தே வருக்கு மெமக்கருள
முகமே தில்லையெம பெருமானே
நினக்குண டாறு முகமலவே.

ஆறு முகமுந் திணிதோளீ
ராறுங் கருணை யடித்துணையும்
வீறு மயிலூர் தனிக்கடவுள்
வேலுந் துணையுண் டெமக்கிங்கே
சீறும் பிணியுங் கொடுங்கோளுந்
தீயவினையுஞ் செறியாவே
நாறும் பகட்டா னதிகார
நடவா துலகம் பரவுறுமே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 42. செல்வச்சீர்த்தி மாலை

### இரட்டைக்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அடியார்க் கெளிய ரெனுமுக்க ணையர் தமக்கு முலகீன்ற
அம்மை தனக்குந் திருவாய்முத் தளித்துக் களிக்கு
மருமருந்தே
கடியார் கடப்ப மலர்மலர்ந்த கருணைப் பொருப்பே கற்பகமே
கண்ணுண் மணியே யன்பர்மனக் கமலம் விரிக்குங்
கதிரொளியே
படியார் வளிவான் றீமுதலைம் பகுதி யாய பரம்பொருளே
பகர்தற் கரிய மெய்ஞ்ஞானப் பாகே யசுரர்
படைமுழுதுந்
தடிவா யென்னச் சுரர்வேண்டத் தடிந்த வேற்கைத் தனிமுத-
லே தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே
சண்முகனே. 1

காயா தளியக கனிந்தன்பாற் கல்லா லடிநின் றருளொழுகுங்
கனியுட் சுவையே யடியர்மனக் கவலை யகற்றுங்
கற்பகமே

ஓயா துயிர்க்கு ளொளித்தெவையு முணர்த்தி யருளு
மொன்றேயென் உள்ளக் களிப்பேயைம பொறியு
மொடுக்கும பெரியோர்க்கோ ருறவே

தேயாக் கருணைப் பாற்கடலே தெளியா வசுரா போர்க்கடலே
தெய்வப் பதியே முதற்கதியே திருச்செந் தூரிற்
றிகழ்மதியே

தாயா யென்னைக் காக்கவருந் தனியே பரம சற்குருவே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே
சண்முகனே. 2

நாணு மயன்மா லிந்திரன்பொன் னாட்டுப் புலவர் மணம்வேட்ட
நங்கை மார்கண் மங்கலப்பொன் னாண்காத் தளித்த
நாயகமே

சேணும் புவியும் பாதலமுந் தித்தித் தொழுகுஞ் செந்தேனே
செஞ்சொற் சுவையே பொருட்சுவையே சிவன்கைப்
பொருளே செங்கழுநீர

பூணுந் தடந்தோட் பெருந்தகையே பொய்ய ரறியாப்
புண்ணியமே போகங் கடந்த யோகியர்முப் போகம்
விளைக்கும் பொற்புலமே

தாணு வென்ன வுலகமெலாந் தாங்குந் தலைமைத் தயாநிதியே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே
சண்முகனே. 3

முன்னைப் பொருட்கு முதற்பொருளே முடியா தோங்கு
முதுமறையே முக்கட் கரும்பீன் றெடுத்தமுழு
முத்தே முதிர்ந்த முக்கனியே

பொன்னைப் புயங்கொண் டவன்போற்றும் பொன்னே புனித
பூரணமே போத மணக்கும புதுமலரே புலவ
ரெவரும் புகும்பதியே

மின்னைப் பொருவு முலகமயல் வெறுத்தோ ருள்ள
விளக்கொளியே மேலுங் கீழு நடுவுமென விளங்கி
நிறைந்த மெய்த்தேவே
தன்னைப் பொருவுஞ் சிவயோகந் தன்னை யுடையோர்
தம்பயனே தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ
மணியே சண்முகனே. 4

பித்தப் பெருமான் சிவபெருமான் பெரிய பெருமான்
றனக்கருமைப் பிள்ளைப் பெருமா னெனப்புலவர்
பேசிக் களிக்கும் பெருவாழ்வே
மத்தப் பெருமா னீக்குமொரு மருந்தே யெல்லாம்
வல்லோனே வஞ்சச சமண வல்லிருளை மாய்க்கு
ஞான மணிச்சுடரே
அத்தக் கமலத் தயிறபடைகொ ளரசே மூவாக் ச--ள்செய்தே
ஆக்க லளித்த லழித்தலெனு மமுத் ` `ழ்தா ழிலுந்
தருவோனே
சத்த வுலக சராசரமுந் தாளி லொடுக்குந் தனிப்பொருளே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே
சண்முகனே. 5

ஏத மகற்று மென்னரசே யென்னு ருயிரே யென்னறிவே
என்க ணொளியே யென்பொருளே யென்சற குருவே
யென்றாயே
காத மணக்கு மலர்க்கடம்பங் கண்ணிய புயனே காங்யெனே
கருணைக் கடலே பன்னிருகட் கரும்பே யிருவர்
காதலனே
சீத மதியை முடித்தசடைச் சிவனார் செல்வத் திருமகனே
திருமா லுடனான் முகன்மகவான் தேடிப் பணியுஞ்
சீமானே
சாதல் பிறத்தல் தவிர்த்தருளுஞ் சரணம் புயனே சத்தியனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே
சண்முகனே. 6

வன்பிற் பொதிந்த மனத்தினர்பால் வருந்தி யுழலவே
னல்லா லுன மலர்த்தா ணினையே னென்னேயிம்
மதியி லேனு முய்வேனோ

வன்பிற் கிரங்கி விடமுண்டோன் அருமை மகனே யாரமுதே
அகிலம் படைத்தோன் காத்தோனின் றழித்தோ
னேத்தவளித்தோனே

துன்பிற் கிடனாம வன்பிறப்பைத் தொலைக்குந் துணையே
சுகோதயமே தோகை மயின்மேற் றோன்றுபெருஞ்
சுடரே யிடராற் சோர்வுற்றேன்

தன்பிற் படுமச் சுரராவி தரிக்க வேலைத் தரித்தோனே
தணிகாசலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே
சண்முகனே. 7

மாலு மயனு முருத்திரனும் வானத் தவரு மானிடரு
மாவும புள்ளு மூர்வனவு மலையுங் கடலும்மற்றவையும்
மாலுங் கதியுஞ் சதகோடி யண்டப் பரப்புந் தானாக
அன்றோர் வடிவ மேருவிற்கொண் டருளுந் தூய
வற்புதமே
வேலு மயிலுங் கொண்டுருவாய் விளையாட் டியற்றும்
வித்தகமே வேதப பொருளே மதிச்சடைசேர் விமலன்
றனக்கோர் மெய்ப்பொருளே
சாலுஞ் சுகுணத் திருமலையே தவத்தோர் புகழுந் தற்பரனே
தணிகாசலமாந் தலத்தமாந்த சைவ மணியே
சண்முகனே. 8

ஏத நிறுத்து மிவ்வுலகத் தியல்பின் வாழ்க்கை யிடத்தெளியேன்
எண்ணி யடங்காப் பெருந்துயர்கொண் டெந்தா
யநதோ விளக்கின்றேன்
வேத நிறுத்து நின்கமல மென்றாட் டுணையே துணையல்லால்
வேறொன் றறியே னஃதறிந்தி வினையேற் கருள
வேண்டாவோ

போத நிறுத்துஞ் சற்குருவே புனித ஞானத் தறிவுருவே
பொய்ய ரறியாப் பரவெளியே புரமூன் றெரித்தோன் றருமொளியே
சாத னிறுத்து மவருள்ளத் தலர்ந்தா ணிறுத்துந் தயாநிதியே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 9

முருகா வெனநின் றேத்தாத மூடரிடம்போய் மதிமயங்கி
முன்னு மடவார் முலைமுகட்டின் முயங்கி யலைந்தே நினைமறந்தேன்
உருகா வஞ்ச மனத்தேனை யுருத்தீர்த் தியம னொருபாசத்
துடல நடுங்க விசிக்கிலவற் குரைப்ப தறியே னுத்தமனே
பருகா துள்ளத் தினித்திருக்கும் பாலே தேனே பகருட்செம்
பாகே தோகை மயினடத்தும் பரமே யாவும் படைத்தோனே
தருகா தலித்தோன் முடிகொடுத்த தரும துரையே தற்பரனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 43. செவியறி வுறுத்தல்

### கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகியற் கடுஞ்சுரத் துழன்று நாடொறும்
அலகில்வெந் துயர்கிளைத் தழுங்கு நெஞ்சமே
இலகுசிற் பரகுக வென்று நீறிடிற்
கலகமில் லின்பமாங் கதிகி டைக்குமே. 1

மருளுறு மூலகிலாம் வாழ்க்கை வேண்டியே
இருளுறு துயர்ககட லிழியு நெஞ்சமே
தெருளுறு நீற்றினை சிவவென் றுடகொளில்
அருளுறு வாழ்க்கையி லமாத லுண்மையே. 2

வல்வினைப் பகுதியான் மயங்கி வஞசாதங
கொல்வினைக குழியிடைக் குதிக்கு நெஞசமே
யில்வினைச் சண்முக வென்று நீறிடில்
நல்வினை பழுக்குபோா நாடு வாய்க்குமே. 3

கடும்புலைக் கருததர்தங் கருத்தின் வண்ணமே
விடும்புன லெனத்துயா விளக்கு நெஞசமே
இடும்புகழ்ச் சண்முக வென்று நீறிடில்
நடுங்குமச சம்நினை நண்ணற் கென்றுமே. 4

அன்பிலா வஞசாதம மவலச சூழலில்
என்பிலாப் புழுவென விரஙகு நெஞசமே
இன்பருச சண்முக வென்று நீறிடு
துன்புறுத ஏனிககதிச சூழல் வாயகுமே. 5

செறிவிலா வஞசகச செல்வா வாயிலில
அறிவிலா துழலுமென் னவல நெஞ்சமே
எறிவிலாச சண்முக வென்று நீறிடின்
மறிவிலாச சிவகதி வாயில் வாயககுமே 6

மறிதரு கண்ணிஞா மயக்கத தாழ்ந்துவீண்
வெறியொடு பலைநதிடா விளைசகு நெஞசமே
நெறிசிவ சண்முக வென்று நீறிடின்
முறிகொளீஇ நின்றவுன் மூடந தீருமே. 7

காயமாங் கானலைக் கருதி நாடொறும்
மாயமாங் கானிடை வருந்து நெஞ்சமே
நேயமாஞ் சண்முக வென்று நீறிடில்
தோயமாம் பெரும்பிணித துன்ப நீங்குமே. 8

சதிசெயு மங்கையா தமது கண்வலை
மதிகெட வழுந்தியே வணங்கு நெஞ்சமே
நிதிசிவ சண்முக வென்று நீறிடில்
வதிதரு முலகிலுன் வருததந நீருமே. 9

பசையறு வஞ்சகர் பாற்சென் றேங்கியே
வசைபெற நாடொறும் வருந்து நெஞ்சமே
இசைசிவ சண்முக வென்று நீறிடில்
திசைபெற மதிப்பருள் சிறுமை நீங்குமே. 10

திருச்சிற்றம்பலம்

---

## 44. தேவவாசிரியம்

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

யாரை யுங்கடு விழியினன்
மயக்குறு மேகநிழை யதாவெநீர்த்
தாரை தன்னையும விருமபிவீழ்த்
தாழ்நதவென் றனக்கரு ளுண்டேயோ
காரை முடடியப புறஞ்செலுஞ்
செஞசுடாக கதிரவ னிவராழித்
தேரை யெட்டுறும பொழில்செறி
தணிகையிற் றேவர்க டொழுநதேவே. 1

மறிக்கும் வேற்கணார் மலக்குழி
யாழ்ந்துழல் வன்றசை யறுமென்மைக்
கறிக்கு நாயினுங் கடையநாய்க்
குன்றிருக் கருணையு முண்டேயோ
குறிக்கும் வேய்மணி களைக்கதி
ரிரதவான் குதிரையைப் புடைத்தெங்குந்
தெறிக்கு நல்வளஞ் செறிதிருத்
தணிகையிற் றேவாக டொழுநதேவே. 2

பிரிய மேயவன் மடநதையர்
தங்களைப பிடிததலைத் திடுவஞ்சக
கரிய பேயினும் பெரியபேய்க்
குநதிருக் கருணையு முண்டேயோ
அரிய மாலய னிநதிரன்
முதலினோ ரமருல கறிநதபபால்
தெரிய வோங்கிய சிகரிசூழ்
தணிகையிற் றேவாக டொழுநதேவே. 3

திருச்சிற்றம்பலம்

---

## 45. இங்கிதப்பத்து

கலிநிலை வண்ணத்துறை

திருச்சிற்றம்பலம்

சீர்வளர் குவளைத் தார்வளர் புயனா சிவனார்தம்
பேர்வளர் மகனார் கார்வளா தணிகைப் பெருமானார்
ஏர்வளர் மயின்மே லூரவளா நியமத திடைவநதால்
வார்வளர் முலையா ராரவளர் கில்லா மயலம்மா. 1

மநதா ரஞசேர பைமபொழி லின்கண் மயிலேறி
வந்தா ரந்தோ கண்டன னங்கை வளைகாணேன்
சநதா ரஞசூழ் தண்கிளர் சாரற் றணிகேசர்
தந்தா ரென்பாற றநதா ரென்னைத தநதாரே. 2

நதியும மதியும் பொதியுஞ் சடையாா நவின்மாலும்
விதியுந் துதியைம் புகழா மிகுசீரும
நிதியும் பதியுங் கதியுங தருவாா நெடுவேலார்
வதியும் மயின்மேல் வருவாா மலரே வருமாறே. 3

சநதார் வரையுட் சிந்தா மணிநேர் தணிகேசா
மநதா நிலமே வுந்தார் மறுகின மயிலேறி
வந்தார் நிலவோர் செநதா மரையின் மலாவாசக்
கொநதார் குழலென் னிலையுங் கலையுங் கொண்டாரே. 4

தந்தே நயமா மாதவர் புகழுந தணிகேசர்
சநதே னொழிவா யநதேன் மொழியாய் தனியின்று
வந்தே னினிமேல் வாரே னென்றார் மனமாழ்கி
நொநதேன் முலைமீ தவ்வுரை யென்றார் நுவலென்னே. 5

தண்டணி காநதளொா சண்பக மலரிற் றளாவெய்தத்
தெண்டணி நீலமோா செங்குவ ளையினிற் றிகழ்வென்பால்
வண்டணி கேசரும வநதருள்வாரோ வாராரோ
தொண்டணி வீரொரு சோதிட மேனுஞ் சொல்லீரே. 6

காமலர் நறவுக் கேமலா மூவிரு காலேநீ
தேமலா தணிகைத தேவா மருங்கிற சோவாயேல்
ஆமல ருடையாட் கென்பெயா பலவா மவையுள்ளே
ஓமல ரடிகே ளொன்றினை யொன்றென் றுரையாயே. 7

தேடுங் கிளிநீ நின்னை விளம்பித் திருவன்னார்
ஆடுந் தணிகையி லென்னுயி ரன்னா ரருகேபோய்க்
கூடுந தனமிசை யென்பெயர் வைத்தக் கோதைக்கே
யீடுங் கெடவின் றென்னையு மீந்தரு ளென்பாயே. 8

பொன்னை யிருத்தும் பொன்மல ரெகினப் புள்ளேநீ
யன்னை யிகழ்ந்தே யங்கலர் செய்வா னனுராகந
தன்னை யளிக்குந தண்டணி சேகர் தம்பாற்போய்
என்னை யிகழ்ந்தா ளென்செயல் கொண்டா ளென்பாயே. 9

வதியுந தணிகையில் வாழ்வுறு மென்கண் மணியன்னார்
மதியுந் தழல்கெட மாமயின் மீதிவண் வருவாரேல்
திதியும் புவிபுகல் நின்பெயா நெறியைத் தெரிவிப்பான்
நதியுந் துணவுத வுவனங் கொடிநீ நடவாயே. 10

மன்றோர் தணிகையி னின்றீர் கதிதர வநதீரோ
என்றே னசைதரு மின்றேன் மொழியா யானுன்பால்
இன்றே சுரருல கெய்திட வநதே னென்றாகாண்
குன்றோர் முலையா யென்னடி யவர்சொற குறிதானே. 11

சேதன நநதாா சென்று வணங்குந திறல்வேலார்
தாதன வண்ணத் துள்ளொளிா கின்ற தணிகேசர்
மாதன முந்தா வநதே வாதாதா
ஆதன மென்று ரென்னடி யம்மா வவர்சூதே. 12

திருச்சிற்றம்பலம்

## 46. திருப்பள்ளித்தாமம் தாங்கல்

திருச்சிற்றம்பலம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

வெம்பு முயிருக் கோருறவாய் வேளை நமனும் வருவானேல்
தம்பி தமையன் துணையாமோ தனையர் மனைவி வருவாரோ
உம்பர் பரவுந் திருத்தணிகை உயர்மா மலைமேல் இருப்பவர்க்குத்
தும்பக் குடலை யெடுக்காமல் தூக்க வுடலை யெடுத்தேனே. 1

தொல்லைக் குடும்பத் துயரதனில் தொலைத்தே னந்தோ காலமெலாம்
அல்ல லகற்றிப் பெரியோரை யடுத்து மறியேன் அரும்பாவி
செல்வத் தணிகைத் திருமலைவாழ் தேவா வுன்றன் சந்நிதிக்கு
வில்வக் குடலை யெடுக்காமல் வீணுக் குடலை யெடுத்தேனே. 2

அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் அதில்நினைவாய்க்
கவலைப் படுவ தன்றிசிவ கனியைச் சேரக் கருதுகிலேன்
இவலை யொழிக்குந் திருத்தணிகைத் திருமால் மருகன் திருத்தாட்குக்
குவளைக் குடலை யெடுக்காமல் கொழுத்த வுடலை யெடுத்தேனே. 3

திருச்சிற்றம்பலம்

---

## 47. தனித்திருத்தொடை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்

என்னிரு கண்ணின் மேவு மிலங்கொளி மணியே போற்றி
பன்னிரு படைகொண் டோங்கும்பன்னிருகரத்தோய்போற்றி
மின்னிரு நங்கை மாருண் மேவிய மணாள போற்றி
நின்னிரு பாதம போற்றி நீள்வடி வேல போற்றி 1

## கலிநிலைத்துறை

மதிவளர் சடைமுடி மணிதரு சுரர்முடி மணியென்கோ
பதிவளர் சரவண பவநவ சிவகுரு பதியென்கோ
துதிவளர் துணையடி தொழுமடி யவர்பெறு துணையென்கோ
நிதிவளர் பரசுக நிலைபெறு நெறிதரு நினையானே. 2

## கட்டளைக்கலித்துறை

முருகா சரணஞ் சரணமென் றுன்பத முன்னியுள்ளம்
உருகாத நாயனை யேற்குநின் றண்ணரு ளுண்டுகொலோ
அருகாத பாற்கடன் மீதே யனந்த லமர்ந்தவன்றன்
மருகாமுக் கண்ணன் மைந்தா வெழின்மயில் வாகனனே. 3

## வெண்பா

உலகம் பரவு மொருமுதல்வா தெய்வத்
திலகந் திகழிடத்துத் தேவே —இலகுதிருப்
புள்ளிருக்கு வேளூரப் புனிதா வடியேன்றன
உள்ளிருக்குத் துன்பை யொழி. 4

செக்கச் சிவந்தே திகழொருபாற் பச்சையதாய்
அக்கட் பரிதிபுரத் தாரநதோங்கு—முக்கட்
குழைக்கரும்பின் முதகுக குமாரமணி யேயென்
பிழைக்கிரங்கி யாளுதியோ பேசு. 5

## அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருமாலைப் பணிகொண்டு திகிரிகொண்ட
தாருகனைச செறித்துவாகைப்
பெருமாலையணிதிணிதோட் பெருமானே
யொருமான்றன் பெண்மேற்காமர்
வருமாலை யுடையவாபோன் மணமாலை
புனைந்தமுழுமணியே முக்கட்
குருமாலைப் பொருளுரைதத குமாரகுரு
வேபரம குருவே போற்றி. 6

தோடேந்து கடப்பமலர்த் தொடையொடுசெங்
குவளைமலர்த் தொடையும் வேய்ந்து
பாடேந்து மறிஞர்தமிழ்ப் பாவொடுநா யடியேனைச்
சொற்பாவு மேற்றுப்
பீடேந்து திருவடிவா பெட்பொடுமாங் கவர்
கண்முலைப பெரிய யானைக்
கோடேந்து மணிநெடுந்தோட் குமரகுரு
வேபரம குருவே போற்றி. 7

நீர்வேய்ந்த சடைமுடித்துத் தோலுடுத்து
நீறணிந்து நிலவுங் கொன்றைத்
தார்வேய்ந்து விடங்கலந்த களங்காட்டி
நுதலிடையோர் தழற்கண் காட்டிப்
போர்வேய்ந்த மணிமன்றி லாடுகின்ற
பெரும்பித்தப் பெருமா னீன்ற
கூர்வேய்ந்த வேலணிதோட் குமரகுரு
வேபரம குருவே போற்றி. 8

வெண்குணத்திற கடைப்படுமோர் பேய்க்குணங்
கொள்நாயேன்றன் பிழைகளெல்லாம்
எண்குணப்பொற் குன்றேநின் திருவுளத்திற
சிறிதேனுமெண்ணேல கண்டாய்
பண்குணத்திற் சிறந்திடுநின் பத்தர்தமைப்
புரப்பதுபோற் பாவியேனை
வண்குணத்திற் புரத்தியிலை யேனுமெனைக
கைவிடேல் வடிவேலோனே. 9

## கலி விருத்தம்

சத்திவேற் கரத்தநின் சரணம் போற்றிமெய்ப்
பத்தியோ டருச்சனை பயிலும் பண்பினேன்
முத்திசார் குவரென மொழிதல் கேட்டுநற்
புத்தியோ டுன்பதம் புகழ்வர் புண்ணியர்.

## வேறு

தேனே யமுதே சிவமே தவமே தெளிவேயெங்
கோனே குருவே குலமே குணமே குகனேயோ
வானே வளியே யனலே புனலே மலையேயென்
ஊனே யுயிரே யுணர்வே யெனதுள் ளுறைவானே. 2

## கட்டளைக் கலித்துறை

ஆறு முகங்கொண்ட வையாவென் றுன்ப மனைத்துமின்னும்
ஏறு முகங்கொண்ட தல்லா லிறங்கு முகமிலையால்
வீறு முகங்கொண்ட கைவேலின் வீரம் விளங்கவென்னைச்
சீறு முகங்கொண்ட வத்துன்ப மோடச் செலுத்துகவே. 1

பண்கொண்ட சண்முகத் தையா வருண்மிகும் பன்னிரண்டு
கண்கொண்ட நீசற்றுங் கண்டிலை யோவென் கவலைவெள்ளந்
திண்கொண்ட வெட்டுத் திசைகொண்டு நீள்சத்த தீவுங்கொண்டு
மண்கொண்டு விண்கொண்டு பாதாளங் கொண்டு வளர்கின்றதே.

வன்குலஞ் சேர்கடன் மாமுதல் வேரற மாட்டிவண்மை
நன்குலஞ் சேர்விண் ணகரளித் தோயன்று நண்ணியென்னை
நின்குலஞ் சேர்த்தனை யின்று விடேலுள நேர்ந்துகொண்டு
பின்குலம் பேசுகின் றுருமுண் டோவிப் பெருநிலத்தே. 3

திருச்சிற்றம்பலம்

# 48. சண்முகர் கொம்மி

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### திருச்சிற்றம்பலம்

குறவர் குடிசை நுழைந்தாண்டி - அந்தக்
கோமாட்டி யெச்சில் விழைந்தாண்டி
துறவோர் வணங்கும் புகழாண்டி - அவன்
தோற்றத்தைப் பாடி யடியுங்கடி. 1

மாமயி லேறி வருவாண்டி - அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி
தீமையி லாத புகழாண்டி - அவன்
சீர்த்தியைப் பாடி யடியுங்கடி. 2

பன்னிரு தோள்க ளுடையாண்டி - கொடும்
பாவிகள் தம்மை யடையாண்டி
என்னிரு கண்க ளனையாண்டி - அவன்
ஏற்றத்தைப் பாடி யடியுங்கடி. 3

வேங்கை மரமாகி நின்றாண்டி - வந்த
வேடர்தமை யெலாம் வென்றாண்டி - அந்த
தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி - அந்த
தீரனைப் பாடி யடியுங்கடி. 4

சோதிகழ் தோகை மயின்மேலே - இளஞ்
செஞ்சுடர் தோன்றுந் திறம்போலே
கூர்வடி வேல்கொண்டு நம்பெருமான் - வருங்
கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள். 5

ஆறு முகங்களிற் புன்சிரிப்பும்-இரண்
டாறு புயந்திக ழற்புதமும்
வீறு பரஞ்சுடர் வண்ணமுமோர்-திரு
மேனியும் பாருங்கள் வெள்வளைகாள். 6

ஆனந்த மான வமுதனடி-பர
மானந்த நாட்டுக் கரசனடி
தானந்த மில்லாச் சதுரனடி-சிவ
சண்முக நங்குரு சாமியடி. 7

வேதமுடி சொல்லு நாதனடி-சதா
வேதமுடி திகழ் பாதனடி
நாதவடிவுகொ ளீதனடி-பர
நாதங் கடந்த நலத்தனடி. 8

தத்துவத் துள்ளே படங்காண்டி-பர
தத்துவ மன்றித் துடங்காண்டி
சத்துவ ஞான வடிவாண்டி-சிவ
சண்முக நாதனைப் பாடுங்கடி. 6

சச்சிதா னந்த வுருவாண்டி-பர
தற்பர போகந் தருவாண்டி
உச்சிதா மன்பர்க் குறவாண்டி-அந்த
உத்தம தேவனைப் பாடுங்கடி. 10

அற்புத மான வழகனடி-துதி
அன்பர்க் கருள்செய் குழகனடி
சிற்பர யோகத் திறத்தனடி-அந்தச்
சேவகன் கீர்த்தியைப் பாடுங்கடி. 11

சைவந்தழைக்க தழைத்தாண்டி - ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி
பொய்வந்த வுள்ளத்திற் போகாண்டி - அந்தப்
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி. 12

வாசி நடத்தித் தருவாண்டி - ஒரு
வாசியி லிங்கே வருவாணடி
ஆசில் கருணை யுருவாண்டி - அவன்
அற்புதத தாண்மல ரேத்துங்கடி. 13

இராபபக வில்லா விடத்தாண்டி - அன்பர்
இன்ப வுளங்கொ ணடத்தாணடி
அராப்பளி யீநத திடததாணடி - அநத
அணணலைப் பாடி யடியுங்கடி. 14

ஒன்றிரண் டான வுளவாண்டி - அந்த
ஒன்றிரண் டாகா வளவாண்டி
மின்றிரண் டன்ன வடிவாணடி - அநத
மேலவன் சீர்த்தியைப் பாடுங்கடி. 15

திருச்சிற்றம்பலம்

## 49. சண்முகர் காலைப்பாட்டு

திருச்சிற்றம்பலம்

வாரும்வா ருந்தெய்வ வடிவேல முருகரே
வள்ளி மணாளரே வாரும்
புள்ளி மயிலோரே வாரும். 1

சங்க மொலித்தது தாழ்கடல் விம்மிற்றுச
சண்முக நாதரே வாரும்
உண்மை வினோதரே வாரும். 2

பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்றுப்
பொன்னாள வேலரே வாரும்
மின்னார் முந்நூலரே வாரும். 3

காகங் கரைந்தது காலையு மாயிற்றுக்
கண்ணுதல் சேயரே வாரும்
ஒண்ணுதல் நேயரே வாரும். 4

செங்கதிர் தோன்றிற்றுத் தேவர்கள் சூழ்ந்தனர்
செங்கல்வ ராயரே வாரும்
எங்குரு நாதரே வாரும். 5

அருணனு தித்தன னன்பர்கள் சூழ்ந்தனர்
ஆறுமுகத் தோரே வாரும
மாறிலகத் தோரே வாரும். 6

சூரியன் தோன்றினன் தொண்டர்கள் சூழ்ந்தனர்
சூரசங் காரரே வாரும்
வீரசிங் காரரே வாரும்.

வீணை முரன்றது வேதியர் சூழ்ந்தனா
வேலாயுதத் தோரே வாரும்
காலாயுதத தோரே வாரும். 8

சேவலொலித்தது சின்னம் பிடித்தனர்
தேவர்கள் தேவரே வாரும்
மூவர் முதல்வரே வாரும். 9

பத்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்
பன்னிரு தோளரே வாரும்
பொன்மலர்த் தாளரே வாரும். 10

மாலை கொணர்ந்தனர் மஞ்சனம் போந்தது
மாமயில் வீரரே வாரும்
தீமையில் தீரரே வாரும். 11

தொண்டர்கள் நாடினர் தோத்திரம் பாடினர்
சுப்பிர மணியரே வாரும்
வைப்பி னணியரேவாரும். 12

திருச்சிற்றம்பலம்

## 50. போற்றித் திருவிருத்தம்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கங்கையஞ் சடைசேர் முக்கட்
கரும்பருண் மணியே போற்றி
அங்கையங் கனியே போற்றி
யருட்பெருங் கடலே போற்றி
பங்கையன் முதலோர் போற்றும்
பரம்பரஞ் சுடரே போற்றி
சங்கைதீர்த் தருளுந் தெய்வச்
சரவண பவனே போற்றி. 1

பணிப்பற வருளு முக்கட்
பரஞ்சுட ரொளியே போற்றி
இனிப்புறு கருணை வான்றே
னெனக்கருள் புரிந்தாய் போற்றி
துனிப்பெரும் பவந்தீர்த் தென்னைச்
சுகம்பெற வைத்தோய் போற்றி
தனிப்பெருந் தவமே போற்றி
சண்முகத் தரசே போற்றி. 2

மணப்புது மலரே தெய்வ
வான்சுவைக் கனியே போற்றி
தணப்பற வடியார்க் கின்பந்
தருமொரு தருவே போற்றி
கணப்பெருந் தலைவ ரேத்துங்
கழற்பதத் தரசே போற்றி
குணப்பெருங் குன்றே போற்றி
குமரசற் குருவே போற்றி. 3

தவமபெறு முனிவ ருள்ளத்
தாமரை யமாநதோய் போற்றி
பவமபெறுஞ சிறியேன் றன்னைப்
பாதுகாத் தளித்தோய் போற்றி
நவம்பெறு நிலைக்கு மேலா
நண்ணிய நலமே போற்றி
சிவம்பெறும பயனே போற்றி
செங்கதிர வேலோய் போற்றி. 4

மூவடி வாகி நின்ற
முழுமுதற் பரமே போற்றி
மாவடி யமாந்த முக்கண்
மலைதரு மணியே போற்றி
சேவடி வழுத்துந தொண்டர்
சிறுமைதீரத் தருள்வோய் போற்றி
தூவடி வேல்கைக கொண்ட
சுநதர வடிவே போற்றி. 5

விண்ணுறு சுடரே யென்னுள்
விளங்கிய விளக்கே போற்றி
கண்ணுறு மணியே யென்னைக
கலநதநற் களிப்பே போற்றி
பண்ணுறு பயனே யென்னைப்
பணிவித்த மணியே போற்றி
எண்ணுறு மடியாா தங்கட்
கினியதெள் ளமுதே போற்றி. 6

மறையெலாம் பரவ நின்ற
மாணிக்க மலையே போற்றி
சிறையெலாந் தவிர்ந்து வானோர்
திருவுறச செய்தோய் போற்றி
குறையெலா மறுத்தே யின்பங்
கொடுத்தவென் குருவே போற்றி
துறையெலாம் விளங்கு ஞானச்
சோதியே போற்றி போற்றி. 7

தாருகப் பதகன் றன்னைத்
தடிந்தருள் செய்தோய் போற்றி
வேருகச் சூரமாவை வீட்டிய
வேலோய் போற்றி
ஆருகச சமயக் காட்டை
யழித்தவெங் கனலே போற்றி
போருகத் தகரை யூர்ந்த
புண்ணிய மூர்த்தி போற்றி. 8

சிங்கமா முகனைக் கொன்ற
திறலுடைச் சிம்புள் போற்றி
துங்கவா ரணத்தோன் கொண்ட
துயர்தவிர்த் தளித்தோய் போற்றி
செங்கண்மான் மருக போற்றி
சிவபிரான் செல்வ போற்றி
எங்களா ரமுதே போற்றி
யாவர்க்கு மிறைவ போற்றி. 9

முத்தியின் முதல்வ போற்றி
மூவிரு முகத்த போற்றி
சத்திவேற் கரத்த போற்றி
சங்கரி புதல்வ போற்றி
சித்திதந் தருளுந தேவா
சிகாமணி போற்றி போற்றி
பத்தியின் விளைந்த வின்பப்
பரம்பர போற்றி போற்றி. 10

தெருளுடை யோர்க்கு வாய்த்த
சிவாநந்தத் தேனே போற்றி
பொருளுடை மறையோ ருள்ளம
புகுந்தபுண் ணியமே போற்றி
மருளுடை மனத்தி னேனை
வாழ்வித்த வாழ்வே போற்றி
அருளுடை யரசே யெங்க
ளாறுமுகத் தமுதே போற்றி. 11

பொய்யனேன் பிழைக ளெல்லாம்
பொறுத்திடல் வேண்டும் போற்றி
கையனேன் றன்னை யின்னுங்
காத்திடல் வேண்டும் போற்றி
மெய்யனே மெய்ய ருள்ள
மேவிய விளைவே போற்றி
ஐயனே யப்ப னேயெம்
மரசனே போற்றி போற்றி. 12

முருகநின் பாதம் போற்றி
    முளரியங் கண்ணற் கன்பாம
மருகநின் கழல்கள் போற்றி
    வானவர் முதல்வ போற்றி
பெருகருள வாரி போற்றி
    பெருங்குணப பொருபபே போற்றி
தருகநின் கருணை போற்றி
    சாமிநின் னடிகள் போற்றி. 13

கோதிலாக குணததோய் போற்றி
    குகேசநின் பாதம் போற்றி
தீதிலாச சிநதை மேவுஞ்
    சிவபரஞ் சோதி போற்றி
போதினன் முகனுங் காணாப்
    பூரண வடிவ போற்றி
ஆதிநின் றாள்கள் போற்றி
    அநாதிநின் னடிகள போற்றி. 14

வேதமுங் கலைகள யாவும
    விளமபிய புலவ போற்றி
நாதமுங் கடநது நின்ற
    நாதநின கருணை போற்றி
போதமும பொருளு மாகும
    புனிதநின பாதம் போற்றி
ஆதர மாகி யென்னு
    ளமர்நதவென னரசே போற்றி. 15

திருச்சிற்றம்பலம்

---

Srinath Kanchimuni Press, Madras

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

# அட்டவணை.


| எண். | பதிகம். | பாட்டுகள். | பக்கம். |
|---|---|---|---|
| 1 | சித்திவிநாயகர் பதிகம் | 12 | 1 |
| 2 | வல்லவை கணேசர் பிரசாத மாலை | 11 | 5 |
| 3 | கணேசத் திருவருள் மாலை | 10 | 9 |
| 4 | தனித் திரு மாலை | 9 | 12 |

## திருத்தணிகைப் பதிகங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | பிரார்த்தனை மாலை | 30 | 15 |
| 2 | எண்ணப்பத்து | 9 | 20 |
| 3 | செழுஞ்சுடர் மாலை | 11 | 24 |
| 4 | குறையிரந்த பத்து | 10 | 27 |
| 5 | ஜீவசாக்ஷி மாலை | 28 | 31 |
| 6 | ஆற்றா முறை | 10 | 40 |
| 7 | இரந்த விண்ணப்பம் | 10 | 43 |
| 8 | கருணை மாலை | 30 | 47 |
| 9 | மருண்மாலை விண்ணப்பம் | 10 | 52 |
| 10 | பொறுக்காப் பத்து | 10 | 55 |
| 11 | வேட்கை விண்ணப்பம் | 10 | 56 |
| 12 | ஆறெழுத்துண்மை | 10 | 62 |
| 13 | போகக்குறையீடு | 10 | 65 |
| 14 | பணித்திறம் வேட்டல் | 10 | 69 |
| 15 | நெஞ்சொடு புலத்தல் | 11 | 72 |
| 16 | புன்மைநினைந்திரங்கல் | 10 | 76 |
| 17 | திருவடிசூட விழைதல் | 10 | 79 |
| 18 | ஆற்றாவிரக்கம் | 10 | 82 |
| 19 | ஏழைமையினிரங்கல் | 9 | 86 |
| 20 | பணித்திறஞ்சாலாப்பாடிழிவு | 10 | 89 |
| 21 | காணப்பத்து | 10 | 92 |

| எண். | பதிகம். | பாட்டுகள். | பக்கம். |
|---|---|---|---|
| 22 | பணித்திறஞ்சாலாமை ... | 6 | 95 |
| 23 | குறை நேர்ந்த பத்து | 10 | 97 |
| 24 | முறையிட்ட பத்து | 10 | 100 |
| 25 | நெஞ்சவலங் கூறல் | 10 | 103 |
| 26 | ஆற்றாப்புலம்பல் | 5 | 107 |
| 27 | திருவருள் விழைதல் | 3 | 108 |
| 28 | புண்ணிய நீற்று மான்மியம் | 5 | 109 |
| 29 | உறுதியுணர்த்தல் | 3 | 110 |
| 30 | எண்ணத்தேங்கல் | 2 | 110 |
| 31 | கையடைமுட்டறிகிறங்கல் | 4 | 111 |
| 32 | பொது | 6 | 112 |
| 33 | நாளவம்படாமை வேண்டல் | 10 | 113 |
| 34 | அன்பிற் பேதுறுதல் | 10 | 118 |
| 35 | கூடல் விழைதல் | 10 | 120 |
| 36 | தரிசனை வேட்கை | 10 | 123 |
| 37 | நாளெண்ணி வருந்தல் | 10 | 126 |
| 38 | எத்தாப்பிறவியிழிவு | 10 | 130 |
| 39 | பவனிச் செருக்கு | 10 | 133 |
| 40 | திருவருள்விலாசப்பத்து | 14 | 135 |
| 41 | திருவருட்பேற்று விழைவு | 10 | 140 |
| 42 | செல்வச்சீர்த்திமாலை | 10 | 143 |
| 43 | செவியறிவுறுத்தல் | 10 | 149 |
| 44 | தேவாசிரியம் | 3 | 149 |
| 45 | இங்கிதப்பத்து | 12 | 150 |
| 46 | திருப்பள்ளித்தாமத்தாங்கல் | 3 | 153 |
| 47 | தனித்திருத்தொடை | 14 | 153 |
| 48 | சண்முகக்கொம்மி | 15 | 157 |
| 49 | சண்முகர் காலைப்பாட்டு | 12 | 160 |
| 50 | போற்றித் திருவிருத்தம் | 15 | 162 |